# مقرر الدورة

# 3

# பாடப் புத்தகம்


தமிழில் : மவ்லவி இம்ரான் (கபூரி)

மீள்பரிசீலனை : எம். அஹ்மத் (அப்பாஸி)

ترجمة: محمد عمران بن جمال الدين

مراجعة : أحمد بن محمد



المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة

ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH

P.O.BOX 29465 RIYADH 11457 - TEL 4454900 - 4916065

FAX 4970126 - E-Mail:rabwah@www.com

بسم الله الرحمن الرحيم

# அகீதா

# 3


தமிழில் : மவ்லவி இம்ரான் (கபூரி)

மீள்பரிசீலனை : எம் அஹ்மத் (அப்பாஸி)


# توحيد

(باللغة التاملية)


ترجمة: محمد عمران بن جمال الدين

مراجعة : أحمد بن محمد



ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH

P.O.BOX 29465 RIYADH 11457 - TEL 4454900 - 4916065

FAX 4970126 - E-Mail:rabwah@www.com

بسم الله الرحمن الرحيم

| வாரம் | விடயம் | நேர அளவு |
|---|---|---|
| 1 | அஷ்ஷிர்க் (இணைவைத்தல்) (1) | 45 நிமிடங்கள் |
| 2 | அஷ்ஷிர்க் (இணைவைத்தல்) (2) | 45 நிமிடங்கள் |
| 3 | அஷ்ஷிர்க் (இணைவைத்தல்) (3) | 45 நிமிடங்கள் |
| 4 | அஷ்ஷிர்க் (இணைவைத்தல்) (4) | 45 நிமிடங்கள் |
| 5 | அல் குப்ர் (இறைநிராகரிப்பு) (1) | 45 நிமிடங்கள் |
| 6 | அல் குப்ர் (இறைநிராகரிப்பு) (2) | 45 நிமிடங்கள் |
| 7 | அல் குப்ர் (இறைநிராகரிப்பு) (3) | 45 நிமிடங்கள் |
| 8 | மாதாந்தப் பரீட்சை | 45 நிமிடங்கள் |
| 9 | அந்நி.ஃ.பாக் (நயவஞ்சகம்) (1) | 45 நிமிடங்கள் |
| 10 | அந்நி.ஃ.பாக் (நயவஞ்சகம்) (2) | 45 நிமிடங்கள் |
| 11 | தற்கால இணைவைப்பின் வெளிப்பாடுகள் (1) | 45 நிமிடங்கள் |
| 12 | தற்கால இணைவைப்பின் வெளிப்பாடுகள் (2) | 45 நிமிடங்கள் |
| 13 | பித்அத் (நூதனம்) (1) | 45 நிமிடங்கள் |
| 14 | பித்அத் (நூதனம்) (2) | 45 நிமிடங்கள் |
| 15 | பித்அத் (நூதனம்) (3) | 45 நிமிடங்கள் |

# அஷ்ஷிர்க் (இணைவைத்தல்)

வணக்க வழிபாடுகளிலும், ருபூபிய்யத் எனும் இறைசக்தி சார்ந்த அம்சங்களிலும் இறைவனுக்கு நிகராக ஒருவனை ஏற்படுத்துவதே இணைவைத்தலாகும்.

பொதுவாக வணக்க வழிபாடுகளில் இணைவைத்தல் என்பது அல்லாஹ்வுடன் சேர்த்து மற்றொருவரை அழைத்தல் அல்லது இறைவனுக்கு மாத்திரம் நிறைவேற்ற வேண்டிய சில வணக்கங்களை இறைவன் அல்லாதவர்களுக்கு நிறைவேற்றுவதாகும்.

உதாரணமாக: அறுத்துப்பலியிடுதல், நேர்ச்சை வைத்தல், அல்லாஹ் அல்லாதவர்களை அஞ்சுதல், வேண்டுதல், அன்புவைத்தல் போன்றவையாகும்.

## இணைவைத்தல் பெரும் பாவங்களில் ஒன்றாகுவதற்கான காரணங்கள்

1-இறைவழிபாடு சம்பந்தப்பட்ட விடயங்களில் படைத்தவனுக்கு படைப்பினங்களை ஒப்பிடுவதாகும். இறைவனுடன் மற்றொருவரை யார் இணைவைக்கிறாரோ அவர் மற்றொரு கடவுளை இறைவனுக்கு ஒப்பிடுகிறார். இது அநியாயங்களில் பெரும் அநியாயமாகும். இறைவன் கூறுகிறான்:

﴿ إِنَّ ٱلشِّرۡكَ لَظُلۡمٌ عَظِيمٞ ﴾ لقمان: ١٣

***நிச்சயமாக இணைவைத்தல் மிகப் பெரிய அநியாயமாகும்.(லுக்மான் : 13)***

அநியாயம் என்பது ஒரு விடயத்தை அது வைக்கப்பட வேண்டிய இடமல்லாது வேறு இடத்தில் வைப்பதாகும். எனவே யார் அல்லாஹ் அல்லாது ஒருவனை வணங்குகிறானோ அவன் வணக்கத்தை உரிய இடத்தில் வைக்கவில்லை என்றே பொருள். மேலும் வணங்க (சக்தி) தகுதி உள்ளவனை விட்டு வேறு தெய்வங்களுக்கு வணக்கங்களை பரிமாறிவிட்டான், எனவே தான் இது அநியாயங்களில் பெரும் அநியாயமாகும்.

2- பாவமன்னிப்பு தேடாதவரை அல்லாஹ் இணைவைப்பாளனை மன்னிக்க மாட்டான். இறைவன் கூறுகிறான்:

﴿ إِنَّ ٱللَّهَ لَا يَغۡفِرُ أَن يُشۡرَكَ بِهِۦ وَيَغۡفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُ ﴾ النساء: ٤٨

***நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான். இதனைத் தவிர (மற்ற) எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான்.(அந்நிஸா : 48)***

3- இணைவைப்பவனுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தை தடை செய்துள்ளான். மேலும் அவன் நரகத்தில் நிரந்தரமாக இருப்பான். இறைவன் இதை பின்வருமாறு கூறுகிறான்:

﴿ إِنَّهُۥ مَن يُشۡرِكۡ بِٱللَّهِ فَقَدۡ حَرَّمَ ٱللَّهُ عَلَيۡهِ ٱلۡجَنَّةَ وَمَأۡوَىٰهُ ٱلنَّارُۖ وَمَا لِلظَّٰلِمِينَ مِنۡ أَنصَارٖ ﴾ المائدة: ٧٢

***எவர் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றாரோ அவர் மீது திட்டமாக அல்லாஹ் சுவனபதியைத் தடுத்துவிடுகிறான். மேலும் அவர் தங்குமிடம் நரகம்தான். இன்னும் (இத்தகைய) அநியாயக்காரர்களுக்கு (மறுமையில்) உதவி செய்வோர் யாருமில்லை. (அல்மாஇதா : 72)***

4- இணைவைத்தல் எல்லா அமல்களையும் வீணாக்கிவிடும். இதை இறைவன் இவ்வாறு கூறுகிறான்:

﴿ ذَٰلِكَ هُدَى ٱللَّهِ يَهۡدِي بِهِۦ مَن يَشَآءُ مِنۡ عِبَادِهِۦۚ وَلَوۡ أَشۡرَكُواْ لَحَبِطَ عَنۡهُم مَّا كَانُواْ يَعۡمَلُونَ ﴾ الأنعام: ٨٨

***அதுவே அல்லாஹ்வுடைய நேர்வழியாகும், தன் அடியார்களில் அவன் நாடுகிறவருக்கு இதன் மூலம் நேர் வழிகாட்டுகிறான் இன்னும் அவர்கள் (அல்லாஹ்வுக்கு) இணைவைத்திருந்தால் அவர்கள் செய்து கொண்டிருந்த (நன்மையான)வைகள் யாவும் அவர்களை விட்டு அழிந்து விடும். (அல்அன்ஆம் : 88)***

இறைவன் கூறுகிறான்:

﴿وَلَقَدۡ أُوحِيَ إِلَيۡكَ وَإِلَى ٱلَّذِينَ مِن قَبۡلِكَ لَئِنۡ أَشۡرَكۡتَ لَيَحۡبَطَنَّ عَمَلُكَ وَلَتَكُونَنَّ مِنَ ٱلۡخَٰسِرِينَ﴾ الزمر: ٦٥

***(நபியே! நீர் இணைவைத்தால் நிச்சயமாக உம்முடைய செயல்கள் யாவும் அழிந்து விடும். நிச்சயமாக நீர் நஷ்டமடைபவர்களிலும் ஆகிவிடுவீர் என உமக்கும், உமக்கு முன்னிருந்தவர்களுக்கும் (வஹீ) அறிவிக்கப்பட்டது. (அஸ்ஸுமர் : 65)***

5- இணைவைத்தவனின் உயிர், உடமை(களை எடுப்பதும்) ஆகுமானதாகும். இறைவன் கூறுகிறான்:

﴿فَٱقۡتُلُواْ ٱلۡمُشۡرِكِينَ حَيۡثُ وَجَدتُّمُوهُمۡ وَخُذُوهُمۡ وَٱحۡصُرُوهُمۡ وَٱقۡعُدُواْ لَهُمۡ كُلَّ مَرۡصَدٖ﴾ التوبة: ٥

***இணைவைத்துக் கொண்டிருப்போரை அவர்களைக் கண்ட இடமெல்லாம் கொன்றுவிடுங்கள். இன்னும் அவர்களைப் பிடியுங்கள், அவர்களை முற்றுகையிடுங்கள். ஒவ்வொரு பதுங்குமிடத்திலும் அவர்களை குறிவைத்து உட்காருங்கள். (அத்தௌபா : 5)***

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

وقال النبي صلى الله عليه وسلم: أمرت أن أقاتل الناس حتى يقولوا لاإله إلا الله وأن محمد رسول الله فإذا قالواها عصموا مني دمائهم وأموالهم إلا بحق الإسلام. (رواه البخاري ومسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹ்வையன்றி வேறுயாருமில்லை, முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என்றும் மனிதர்கள் உறுதியாக நம்பிக்கை கொள்ளும் வரை அவர்களுடன் போர் புரியுமாறு ஏவப்பட்டுள்ளேன். இவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டால் தமது உயிர், உடமைகளை என்னிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வார்கள். (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

6- இணைவைத்தல் பெரும் பாவங்களில் ஒன்றாகும்.

قال النبي صلى الله عليه وسلم: ألا أنبئكم بأكبر الكبائر قلنا بلى يارسول الله قال : الإشراك بالله وعقوق الوالدين (رواه البخاري ومسلم)

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை நோக்கி பெரும் பாவங்களை உங்களுக்கு அறிவிக்கட்டுமா? எனக் கேட்டார்கள். ஆம் அல்லாஹ்வின் தூதரே என்றார்கள் ஸஹாபாக்கள். பின்பு நபி (ஸல்) அவர்கள், இறைவனுக்கு இணைவைத்தலும் பெற்றோரைத் துன்புறுத்துவதுமாகும் என்றார்கள்.(ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

எனவே இணைவைத்தல் அநியாயங்களில் மிக மோசமானதாகும். இன்னும் தவ்ஹீத் என்பது நீதத்தில் மிக சிறந்ததாகும். எனவே இந்த நோக்கத்திற்கு கடும் முரணாக ஷிர்க் இருப்பதால் அது பாவங்களில் பெரும் பாவமாக இருக்கிறது. எனவேதான் இணைவைத்த அனைவர் மீதும் இறைவன் சுவர்க்கத்தை தடை செய்துள்ளான்.

இன்னும் இணைவைப்பவனின் உயிர், உடமை, குடும்பம் அனைத்தையும் ஏகத்துவவாதிகளுக்கு அல்லாஹ் ஆகுமாக்கியுள்ளான். இன்னும் அவர்கள் அல்லாஹ்விற்கு தமது அடிமைத்துவத்தை நிலைநாட்ட தவறியதால் அவர்களை அடிமைகளாகக் கூட எடுத்துக்கொள்ள அனுமதித்துள்ளான். அன்றி இணைவப்பவனின் நல்ல அமல்களையோ

அவனது பரிந்துரையையோ பிரார்த்தனை, நல்லாதரவையோ மறுமையில் இறைவன் ஏற்க மறுக்கிறான்.
எனவே, இணைவைத்தவன் மடையர்களில் மிக மடையனாவான். அல்லாஹ்வின் படைப்புக்கு இறைவனை ஒப்பிடுகிறான். இது அவனுடைய மடமையின் உச்சகட்டமாகும். மேலும் அவனின் அநியாயங்களில் உச்சகட்டமாகும். நடைமுறையில் இணைவைப்பவன் இறைவனுக்கு அநியாயம் இழைக்காவிட்டாலும் அவனுக்கே அவன் அநியாயம் இழைத்துக் கொள்கிறான்.

7- அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக ஆக்குவது அவனது பரிசுத்தத் தன்மைக்கு குறை கற்பிப்பதாக அமைகிறது. அல்லாஹ் அவற்றிலிருந்து முற்றிலும் பரிசுத்தமானவன். அல்லாஹ் தனக்கு எவ்வித இணையுமில்லை என்று உறுதிப்படுத்திய பின்னரும் அவனுக்கு ஒருவன் இணை கற்பிக்கிறான் என்றால் அவனது முறைகெட்ட பிடிவாதத்திற்கு அது ஒன்றே போதுமானது.

## ஷிர்க்கின் வகைகள்

### ஷிர்க் இரண்டு வகைப்படும்:

1-**பெரிய ஷிர்க்**: இது மனிதனை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றுகிறது. இதிலிருந்து பாவமன்னிப்பு செய்யாத நிலையில் அவன் இறந்தால் அவன் நரகத்தில் நிரந்தரமாக இருப்பான். இறைவனுக்கு மாத்திரம் நிறைவேற்ற வேண்டிய வணக்கங்களை இறைவன் அல்லாதவர்களுக்கு நிறைவேற்றுவதை இது குறிக்கின்றது. உதாரணமாக : அல்லாஹ் அல்லாத வேறு தெய்வங்களிடம் பிரார்த்தனை செய்தல், பலி கொடுத்து நெருங்குதல், அல்லாஹ்வை விட்டு ஷைத்தான்கள் மற்றும் ஜின்கள், இறந்தவர்கள் போன்றவர்களுக்கு நேர்ச்சை செய்தல், இறந்தவர்களை பயப்படுதல் அல்லது ஜின்கள், ஷைத்தான்கள் ஏதும் தீங்குகள் செய்யலாம் அல்லது வியாதிகளை ஏற்படுத்தலாம் என்று அஞ்சுதல், மேலும் அல்லாஹ்வால் மாத்திரம் முடியுமானவற்றை அல்லாஹ் அல்லாதவர்களிடம் வேண்டுதல். குறிப்பாக தற்போது நடப்பது போல் அவ்லியாக்கள், நல்லடியார்கள் போன்ற அடக்கஸ்தலங்களை நாடி தேவைகளைக் கேட்பதும், கஷ்டங்களை நீக்க அவர்களை நாடுவதும் பெரிய ஷிர்கிற்கு சில உதாரணங்களாகும்.
இறைவன் கூறுகிறான்:

﴿وَيَعْبُدُونَ مِن دُونِ ٱللَّهِ مَا لَا يَضُرُّهُمْ وَلَا يَنفَعُهُمْ وَيَقُولُونَ هَٰٓؤُلَآءِ شُفَعَٰٓؤُنَا عِندَ ٱللَّهِ﴾ **يونس**: ١٨

***'தங்களுக்கு (யாதொரு) நன்மையோ தீமையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாதவற்றை (முஷ்ரிக்குகள்) வணங்குகிறார்கள் ' இன்னும் அவர்கள், ""இவை எங்களுக்கு அல்லாஹ்விடம் மன்றாட்டம் செய்பவை"" என்றும் கூறுகிறார்கள்'.(யூனுஸ் : 18)***

2-**சிறிய ஷிர்க்:** இது மனிதனை இஸ்லாத்தில் இருந்து வெளிப்படுத்தாது என்றாலும் அல்லாஹ் ஒருவன் என்ற கொள்கையில் இருந்து குறைபாட்டை ஏற்படுத்துகிறது. மேலும் பெரிய ஷிர்க் ஏற்பட இது காரணமாக இருக்கிறது.

இது இரண்டு வகைப்படுகிறது :

முதல் பிரிவு: **வெளிரங்கமான ஷிர்க்** - இது செயலாலும், சொல்லாலும் ஏற்படுகிறது. அல்லாஹ் அல்லாதவர்களைக் கொண்டு சத்தியம் செய்வது சொல்லால் ஏற்படும் ஷிர்க்காகும்.

قال النبي صلى الله عليه وسلم من حلف بغير الله فقد كفر أو أشرك (رواه الترمذي وحسنه الحاكم)

யார் அல்லாஹ் அல்லாதவர்களைக் கொண்டு சத்தியம் செய்கிறானோ அவன் இறைவனை நிராகரித்து விட்டவனாவான் அல்லது இணைவைத்தவனாவான் என நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள். (ஆதாரம் திர்மதி)

அல்லாஹ்வும் நீயும் நாடியது போல் என்று கூறுவதும் சொல்லால் ஏற்படும் ஷிர்காகும்.
ஒரு முறை ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து தாங்களும் அல்லாஹ்வும் நாடியது போல் எனக் கூறினார். உடனே நபி (ஸல்) அவர்கள், இறைவனுக்கு ஒப்பாக என்னை ஆக்கிவிட்டீரா! எனக் கேட்டார்கள். மேலும் அல்லாஹ்வின் நாட்டம் மாத்திரமே எனக்கூறு என்று அந்த மனிதனைப் பணித்தார்கள். (ஆதாரம் : நஸாஈ)
மேலும் ஒரு மனிதனை குறித்து அல்லாஹ்வும் இந்த மனிதரும் இல்லையென்றால் எனக் கூறுவதும் சொல்லால் ஏற்டும் இணைவைத்தலை குறிக்கிறது. இதில் சரியானது எதுவெனில் 'அல்லாஹ்வின் நாட்டப்படியும், அதன் பின் தாங்கள் நாடுகின்ற படியும்' என்று கூறுவதே சிறந்த முறையாகும். ஏனெனில் அல்லாஹ்வின் நாட்டத்தை முற்படுத்தி மனிதனின் நாட்டத்தைப் பிற்படுத்துவதுதான் சிறந்தது என்பதை ஹதீஸில் வந்துள்ள (ஸும்ம) என்ற அரபு வார்த்தை குறிப்பிடுகிறது. மேற்படி கருத்தை ஒத்ததாகவே பின்வரும் திருமறை வசனமும் அமைகிறது.

﴿وَمَا تَشَآءُونَ إِلَّآ أَن يَشَآءَ ٱللَّهُ رَبُّ ٱلۡعَٰلَمِينَ﴾ التكوير: ٢٩

இறைவன் இவ்வாறு கூறுகிறான்: ***இன்னும் அகிலத்தாரின் இரட்சகனாகிய அல்லாஹ் நாடிலான்றி நீங்கள் (நல்லறிவு பெறமாட்டீர்கள்).(அத்தக்வீர்:29)***
இது போன்ற வாக்கியங்களில் வரும் (الواو) வாவு கூட்டாக செய்வதையும், இருவர் சேர்ந்து செய்வதையும் குறிக்கின்றது. மேலும் இந்த வாவு தொடர்ச்சியை குறிக்காது மாறாக இணைந்து வருவதையும், இணைந்து செய்வதையுமே குறிக்கிறது. உதாரணமாக, எனக்கு அல்லாஹ்வையும், உன்னையும் தவிர வேறு யாருமில்லை. இன்னும் இது அல்லாஹ்வுடைய பரக்கத்தையும், உன்னுடைய பரக்கத்தையும் கொண்டேதான் என்றும் கூறுவதும் மற்றொருவரை இணைகற்பிக்கும் வார்த்தைகளாக அமைகிறது.

**செயல்களால் ஏற்படுபவைகள்:** உதாரணமாக, துன்பங்களை நீக்கும் என்று தாயத்து, நூல் போன்றவற்றை அணிதல் அல்லது பாதுகாப்புக்காக அணிதல், கண் திருஷ்டிக்காக அஞ்சி தாயத்து அணிவதையும் உதாரணமாகக் கூறலாம். இதனால் துன்பங்கள் நீக்கப்படுமென்றோ அல்லது பாதுகாப்பு கிடைக்குமென்றோ நம்பிக்கை வைத்தால் அவர் சிறிய ஷிர்க் எனும் இணைவைத்தலை செய்தவராவார். ஏனெனில் அல்லாஹ் இவைகளை அவற்றிற்கு காரணமாக ஆக்கவில்லை. ஆனால் குறிப்பாக இவைகள் துன்பங்களை நீக்கும் அல்லது துன்பங்களை போக்கி விடும் என்று யார் நம்பிக்கை வைக்கின்றாரோ அப்போது அது பெரிய ஷிர்க்காக மாறிவிடுகிறது. ஏனெனில் இது அல்லாஹ் அல்லாதவர்களுடன் மனிதனை தொடர்படுத்துகிறது, இணைகிறது.

**இரண்டாவது பிரிவு**: **மறைவான ஷிர்க் :** இது நாட்டங்களிலும், எண்ணங்களிலும் ஏற்படுகிறது. இறைவனிடம் நெருக்கத்தைப் பெறுவதற்கான நல்லமல்களை புகழுக்காகவோ அல்லது முகஸ்துதிக்காவோ ஒருவன் செய்கின்ற போது அவை ஷிர்க்குடன் கலந்த

வணக்கங்களாக மாறுகின்றன. குரலழகைக் காட்ட சப்தமிட்டு குர்ஆன் ஓதுதல், புகழுக்காக தொழுதல், தர்மம் செய்தல் என்பனவற்றை அதற்கு உதாரணங்களாக குறிப்பிடலாம்.

﴿فَمَن كَانَ يَرۡجُواْ لِقَآءَ رَبِّهِۦ فَلۡيَعۡمَلۡ عَمَلٗا صَٰلِحٗا وَلَا يُشۡرِكۡ بِعِبَادَةِ رَبِّهِۦٓ أَحَدَۢا﴾ الكهف: ١١٠

***ஆகவே எவர் தன் இரட்சகனை சந்திக்க ஆதரவு வைக்கின்றாரோ, அவர் நற்கருமங்களைச் செய்யவும் தன் இரட்சகனின் வணக்கத்தில் அவர் எவரையும் இணையாக்க வேண்டாம். (அல்கஹ்ப் : 110)***

**وقال النبي صلى الله عليه وسلم: أخوف ما أخاف عليكم الشرك الأصغر قالوا:وما الشرك الأصغر قال: الرياء.**

நபி (ஸல்) அவர்கள் ஒரு முறை மொழிந்தார்கள் : நான் தாங்கள் மீது அஞ்சுவதெல்லாம் சிறிய ஷிர்க்கை ஆகும். சிறிய ஷிர்க் என்றால் என்னவென்று நபித் தோழர்கள் வினவினர் அதுதான் முகஸ்துதி என நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள். (ஆதாரம் : அஹ்மத்)

இவைகளுக்கு பல உதாரணங்களைக் கூறலாம்: உலக ஆசைக்காக தொழில் புரிதல், ஹஜ் கடமையை நிறைவேற்றல், அதான் சொல்லுதல், மக்களைத் தொழுவித்தல், மார்க்க அறிவைக் கற்றல், செல்வத்திற்காக போர் செய்தல் இவைகள் அனைத்தும் உலக ஆசைக்காகவும், செல்வத்திற்காகவும் அமையுமென்றால் இவைகள் சிறிய ஷிர்க்கில் இணைகிறது.

**قال النبي صلى الله عليه وسلم: تعس عبد الدينار، والدرهم، والقطيفة، والخميصة، إن أعطي رضي، وإن لم يعط لم يرض (رواه البخاري)**

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'பொற்காசு, வெள்ளிக்காசு, பூம்பட்டுத் துணி, சதுர கருப்புத் துணி ஆகியவற்றுக்கு அடிமையாகிவிட்ட மனிதன் துர்பாக்கியவானாவான். அவனுக்கு (செல்வம்) கிடைத்தால் திருப்தியடைவான் செல்வம் வழங்கப்படாவிட்டால் அதிருப்தியடைவான்'. (ஆதாரம் : புஹாரி)

மேலும் இமாம் இப்னுல் கையூம் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : எண்ணங்களிலும் நாட்டங்களிலும் ஷிர்க் என்பது அலையில்லா கடல் போன்றதாகும். இதிலிருந்து தப்பித்துக் கொள்பவர்கள் மிகக் குறைவானவர்களே, ஒருவன் தன் அமல்களைக் கொண்டு அல்லாஹ் அல்லாதவர்களை நாடி இன்னும் அல்லாஹ்வை நெருங்குவதை அல்லாமல் வேறொன்றை எண்ணி அவைகளிடம் கூலியையும் வேண்டினால் அவன் எண்ணத்திலும் நாட்டத்திலும் இணைவைத்துவிட்டான்.

மேலும் தூய எண்ணமென்பது, செயல், சொல், நாட்டம், எண்ணம் அனைத்திலும் இறைவனுக்காக என்று தூய எண்ணம் ஏற்படுவதாகும். இது தான் ஹனீபிய்யா எனும் நபி இப்ராஹீம் சந்ததியின் மார்க்கமாகும். இறைவன் அவனுடைய அனைத்து அடியார்களுக்கும் இதைக் கொண்டுதான் ஏவியுள்ளான். இதைத் தவிர வேறு ஒன்றை இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டான். மேலும் மறுமையில் அவர் நஷ்டமடைந்தோரில் இருப்பார். இது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் மார்க்கமாகும். இதை யார் மறுக்கிறார்களோ அவர் மிக மோசமான மடையர்களில் நின்றும் இருப்பார்.

## பெரிய ஷிர்க் சிறிய ஷிர்க் இரண்டிற்கிடையிலும் உள்ள வேறுபாடு

1-பெரிய ஷிர்க் மனிதனை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றுகிறது. சிறிய ஷிர்க் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றாது.
2-பெரிய ஷிர்க் மனிதனை நரகத்தில் நிரந்தரமாக இருக்கச் செய்கிறது. சிறிய ஷிர்க் மனிதனை நரகத்தில் நிரந்தரமாக இருக்கச் செய்யாது.
3-பெரிய ஷிர்க் அனைத்து அமல்களையும் வீணாக்கி விடுகிறது. சிறிய ஷிர்க் எல்லா அமல்களையும் வீனாக்கி விடாது என்றாலும் முகஸ்துதி கலந்த வணக்கங்களையும், உலகாதாய இலாபத்திற்காக செய்யப்படும் வணக்கங்களையும் தவிர.
4- பெரிய ஷிர்க் உடையவனின் உயிர் உடமை இரண்டிற்கும் இஸ்லாம் பாதுகாப்பு அளிக்காது, சிறிய ஷிர்க் உடையோனின் உயிர், உடமை இரண்டிற்கும் இஸ்லாம் பாதுகாப்பளிக்கும்.

## அல் குப்ர் (இறைநிராகரிப்பு)

### அதன் விளக்கம்:

அகராதியில் குப்ர் என்றால், மறைத்தல், மூடல் என்று பொருள்படும்.
மார்க்க அடிப்படையில் குப்ர் என்பது, ஈமானுக்கு எதிர் மறையானதாகும். குப்ர் என்பது அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நம்பிக்கை கொள்ளாதிருப்பதாகும். அவனுடன் பொய்ப்பிக்கும் கெட்ட குணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரியே. எனினும் சந்தேகம், மறுப்பு, பொறாமை, பெருமை, நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்தை பின்பற்றாது தன் இச்சைகளைப் பின்பற்றல் போன்ற காரணங்களாலும் குப்ர் ஏற்படுகிறது. பொய்ப்பிக்கும் தன்மை அவனிடம் இருந்தால் அது மிகப்பெரிய குப்ராகும், என்றாலும் மேற்கூறப்பட்டவையும் குப்ராகும். அவ்வாறே இறைத் தூதர்களின் உண்மை நிலையை உறுதி கொண்ட போதிலும் பொறாமையின் காரணமாக அவர்களை பொய்ப்பித்து மறுப்பவனும் காபிராவான்.

## குப்ரின் வகைகள்

### குப்ர் இரண்டு வகைப்படும் :

**முதல் பிரிவு: குப்ர் அக்பர் பெரிய நிராகரிப்பு :** இது இஸ்லாத்தை விட்டும் மனிதனை வெளியேற்றுகிறது. இந்த குப்ர் ஐந்து வகைப்படும்.

**முதல் பகுதி:** குப்ர் அல் தக்தீப் அதாவது பொய்பித்தலுடன் நிராகரித்தல். இதற்கு பின் வரும் இறைவசனம் ஆதாரமாகும்.

﴿وَمَنۡ أَظۡلَمُ مِمَّنِ ٱفۡتَرَىٰ عَلَى ٱللَّهِ كَذِبًا أَوۡ كَذَّبَ بِٱلۡحَقِّ لَمَّا جَآءَهُۥٓۚ أَلَيۡسَ فِي جَهَنَّمَ مَثۡوًى لِّلۡكَٰفِرِينَ﴾ العنكوت: ٦٨

***இன்னும் அல்லாஹ்வின் மீது பொய்யை கற்பனை செய்பவனை விட அல்லது சத்தியத்தை அது தன்னிடம் வந்த போது பொய்யாக்கியவனை விட மிக்க அக்கிரமக்காரன் யார்? (இத்தகைய) நிராகரிப்போரின் தங்குமிடம் நரகத்தில் இல்லையா? (அல்அன்கபூத் : 68)***

**இரண்டாவது பகுதி** : உண்மைப்படுத்துவதுடன் பெருமையடித்தலும் மறுத்தலும். இதற்கு பின்வரும் இறைவசனம் ஆதாரமாக உள்ளது.

﴿وَإِذْ قُلْنَا لِلْمَلَائِكَةِ اسْجُدُوا لِآدَمَ فَسَجَدُوا إِلَّا إِبْلِيسَ أَبَىٰ وَاسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكَافِرِينَ﴾ البقرة: ٣٤

***மேலும் நாம் வானவர்களிடம் ஆதமுக்கு நீங்கள் (பணிந்து) ஸுஜுது செய்யுங்கள் எனக் கூறிய போது இப்லீஸைத் தவிர அவர்கள் (அனைவரும்) ஸுஜுது செய்தார்கள். அவன் விலகிக் கொண்டான். ஆணவமும் கொண்டான், இன்னும் நிராகரிப்பவர்களில் அவன் ஆகிவிட்டான் (என்பதை நபியே நீர் நினைவு கூறுவீராக) (அல்பகரா : 34)***

**மூன்றாம் பகுதி** : சந்தேகத்துடன் நிராகரித்தல் - இதை எண்ணம் கலந்த நிராகரிப்பு என்றும் சொல்லலாம். இதற்கு உதாரணமாக பின் வரும் வசனத்தைக் கூறலாம்.

﴿وَدَخَلَ جَنَّتَهُ وَهُوَ ظَالِمٌ لِّنَفْسِهِ قَالَ مَا أَظُنُّ أَن تَبِيدَ هَٰذِهِ أَبَدًا ﴿٣٥﴾ وَمَا أَظُنُّ السَّاعَةَ قَائِمَةً وَلَئِن رُّدِدتُّ إِلَىٰ رَبِّي لَأَجِدَنَّ خَيْرًا مِّنْهَا
مُنقَلَبًا ﴿٣٦﴾ قَالَ لَهُ صَاحِبُهُ وَهُوَ يُحَاوِرُهُ أَكَفَرْتَ بِالَّذِي خَلَقَكَ مِن تُرَابٍ ثُمَّ مِن نُّطْفَةٍ ثُمَّ سَوَّاكَ رَجُلًا ﴿٣٧﴾ لَّٰكِنَّا هُوَ اللَّهُ رَبِّي
وَلَا أُشْرِكُ بِرَبِّي أَحَدًا﴾ الكهف: ٣٥ - ٣٨

***மேலும் அவன் தனக்குத் தானே அநியாயம் இழைத்துக் கொண்டவனாக தன் தோப்புக்குள் நுழைந்து இவை ஒரு காலத்திலும் அழிந்து விடுமென நான் எண்ணவில்லை என்று கூறினான். மேலும் மறுமை நாள் நிலை பெறக் கூடியது என்றும் நான் எண்ணவில்லை (அப்படியே) நான் என் இரட்சகனிடம் மீண்டும் கொண்டு செல்லப்படுவேனாயின் நிச்சயமாக இங்கிருப்பதை விட மேலான இடத்தையே நான் காண்பேன் என்றும் கூறினான். அவனுடைய தோழன் அவனுடன் (இது பற்றித்) தர்க்கித்தவனாக, உன்னை மண்ணிலிருந்தும், பின் ஒரு துளி இந்திரியத்திலிருந்தும் படைத்து, பின்பு உன்னை சரியான மனிதனாக ஆக்கினானே அவனையா நீ நிராகரிக்கின்றாய்? என்று அவனிடம் கேட்டான். ஆனால் (நான் உறுதி சொல்கிறேன்) அல்லாஹ் அவன் தான் என் இறைவனாவான், என் இறைவனுக்கு நான் யாரையும் இணை வைக்கவும் மாட்டேன். (அல்கஹ்ப் : 35-38)***

**நான்காவது பகுதி** : புறக்கனிப்பதுடன் நிராகரித்தல் - பின்வரும் வசனம் இதற்கு ஆதாரமாக உள்ளது.

﴿وَالَّذِينَ كَفَرُوا عَمَّا أُنذِرُوا مُعْرِضُونَ﴾ الأحقاف: ٣

***மேலும், (அல்லாஹ்வை) நிராகரிக்கிறார்களே அத்தகையோர் அவர்கள் தங்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டதை விட்டும் புறக்கணிக்கின்றவர்களாக இருக்கின்றனர். (அல்அஹ்காப் : 3)***

**ஐந்தாவது பகுதி:** நயவஞ்சகத்துடன் மறுத்தல் - பின் வரும் வசனம் இதற்கு ஆதாரமாக உள்ளது.

﴿ذَٰلِكَ بِأَنَّهُمْ آمَنُوا ثُمَّ كَفَرُوا فَطُبِعَ عَلَىٰ قُلُوبِهِمْ فَهُمْ لَا يَفْقَهُونَ﴾ المنافقون: ٣

***அது, நிச்சயமாக அவர்கள் விசுவாசங்கொண்டு, பின்னர் அவர்கள் (அதனை) நிராகரித்து விட்டார்கள் என்பதினாலேயாகும். எனவே அவர்களுடைய இதயங்களின் மீது முத்திரையிடப்பட்டு விட்டது. ஆகவே (ஈமானின் உண்மை நிலையை) அவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். (அல்முனாபிகூன் : 3)***

**இரண்டாவது பிரிவு: சிறிய நிராகரிப்பு :** இது மனிதனை இஸ்லாத்தை விட்டும் வெளிப்படுத்தாது. இது அமல்கள் சார்ந்த நிராகரிப்பாகும். குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் பாவங்கள் என்று பெயர் சொல்லப்பட்ட நிராகரிப்புகளாகும். இது பெரிய நிராகரிப்பின் இடத்தை அடையாது. உதாரணமாக குர்ஆன் வசனத்தில் சொல்லப்பட்டது போன்று அருட் கொடைகளை மறுப்பதாகும்.

﴿وَضَرَبَ ٱللَّهُ مَثَلٗا قَرۡيَةٗ كَانَتۡ ءَامِنَةٗ مُّطۡمَئِنَّةٗ يَأۡتِيهَا رِزۡقُهَا رَغَدٗا مِّن كُلِّ مَكَانٖ فَكَفَرَتۡ بِأَنۡعُمِ ٱللَّهِ﴾ النحل: ١١٢

***மேலும் அல்லாஹ் ஒரு ஊரை உதாரணமாகக் கூறுகிறான். அது அச்சமற்றதாக அமைதியானதாக இருந்தது, அதற்குரிய உணவு (வகைகள்) ஒவ்வொரு திசையிலிருந்தும் அதற்கு தாராளமாக வந்து கொண்டுமிருந்தது, அல்லாஹ்வுடைய அருட்கொடைகளுக்கு (நன்றி செலுத்தாமல்) அவ்வூர் மாறு செய்தது. (அந்நஹ்ல் : 112)***

- மேலும் ஒரு முஸ்லிமை கொலை செய்வதையும் உதாரணமாகக் கூறலாம்.

**قول النبي صلى الله عليه وسلم: سباب المسلم فسوق وقتاله كفر (رواه البخاري ومسلم)**

முஸ்லிமைத் திட்டுவது பாவமாகும், அவனை கொலை செய்வது நிராகரிப்பாகும் என நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள். (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

**وقوله صلى الله عليه وسلم: لا ترجعوا بعدي كفارا يضرب بعضكم رقاب بعض (رواه الشيخان)**

ஒருவருக் கொருவர் கொலை செய்து கொள்ளும் நிராகரிப்பாளர்களாக நீங்கள் எனக்குப் பிறகு மீண்டு விட வேண்டாம். (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

- அல்லாஹ் அல்லாதவர்களைக் கொண்டு சத்தியம் செய்வதையும் இங்கு உதாரணமாகக் கூறலாம்.

**قال صلى الله عليه وسلم: من حلف بغير الله فقد كفر أو أشرك.(رواه الترمذي وحسنه الحاكم)**

யார் அல்லாஹ் அல்லாததைக் கொண்டு சத்தியம் செய்கின்றாரோ அவர் இறைவனை நிராகரித்து விட்டார் அல்லது இணைவைத்து விட்டார் என நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்.(ஆதாரம் திர்மிதி)

மேலும் பெரும் பாவங்களை செய்தவனையும் மு.்.மின் என்றே குறிப்பிடுகிறான்.

﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُتِبَ عَلَيۡكُمُ ٱلۡقِصَاصُ فِي ٱلۡقَتۡلَى﴾ البقرة: ١٧٨

***விசுவாசங்கொண்டோரே ! கொலைக்காக பழி தீர்ப்பது உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது. (அல்பகரா : 178).***

கொலை செய்தவனை ஈமான் கொண்டவர்களில் நின்றும் வெளிப்படுத்தப்படவில்லை. இன்னும் கொலை செய்யப்பட்ட பொறுப்பாளருக்கு சகோதரனாக ஆக்கியுள்ளான். இதைப் பற்றி இறைவன் கூறும் போது பின்வருமாறு கூறுகிறான்:

﴿فَمَنۡ عُفِيَ لَهُۥ مِنۡ أَخِيهِ شَيۡءٞ فَٱتِّبَاعُۢ بِٱلۡمَعۡرُوفِ وَأَدَآءٌ إِلَيۡهِ بِإِحۡسَٰنٖ﴾ البقرة: ١٧٨

***(கொலை செய்த) அவனுக்கு அவனது (முஸ்லிம்) சகோதரனா(கிய கொலையுண்டவனின் வாரிசுகளா)ல் ஏதும் மன்னிக்கப்படுமானால், வழக்கமான முறையைப் பின்பற்றி (இதற்காக நிர்ணயிக்கப் பெறும்) நஷ்ட ஈட்டைக் கொலை செய்தவன் பெருந்தன்மையுடனும், நன்றியறிதலுடனும் செலுத்திவிடல் வேண்டும். (அல்பகரா : 178).***

இங்கு சகோதரன் என்று இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் சகோதரத்துவம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.
இன்னொரு வசனத்தில் இறைவன் இவ்வாறு கூறுகிறான்.

﴿وَإِن طَآئِفَتَانِ مِنَ ٱلۡمُؤۡمِنِينَ ٱقۡتَتَلُواْ فَأَصۡلِحُواْ بَيۡنَهُمَا﴾ الحجرات: ٩

***விசுவாசிகளிலுள்ள இரு கூட்டத்தினர் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டால் அவ்விருவருக்கிடையே சமாதானம் செய்து வையுங்கள். (அல்ஹுஜ்ராத் : 9)***

﴿ إِنَّمَا ٱلۡمُؤۡمِنُونَ إِخۡوَةٞ فَأَصۡلِحُواْ بَيۡنَ أَخَوَيۡكُمۡ﴾ الحجرات: ١٠

***நிச்சயமாக விசுவாசிகள் (ஒருவர் மற்றவருக்கு) சகோதர்களே ஆகவே (சண்டையிட்டுக் கொள்ளும்) உங்களுடைய இரு சகோதரர்களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். (அல்ஹுஜ்ராத் : 10)***

(இது ஷரஹ் அத்தஹாவிய்யாவில் இருந்து சுருக்கப்பட்ட உரை)

## பெரிய கு.ஃ.ப்ர் சிறிய கு.ஃ.ப்ர் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு

1-பெரிய கு.ஃ.ப்ர் மனிதனை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றுகிறது. இன்னும் அவனின் அமல்களையும் வீணாக்கி விடுகிறது. சிறிய கு.ஃ.ப்ர் இஸ்லாத்தை விட்டும் மனிதனை வெளியாக்கி விடாது. ஆனால் அந்த கு.ஃ.ப்ரைப் பொறுத்து நன்மைகள் குறைக்கப்படும். மேலும் அந்த அடியானுக்கு தண்டனைகளும் உண்டு.

2-பெரிய கு.ஃ.ப்ர் மனிதனை நரகத்தில் நிரந்தரமாக இருக்கச் செய்கிறது. சிறிய கு.ஃ.ப்ர் மனிதனை நரகத்தில் நிரந்தரமாக இருக்கச் செய்யாது. சிறிய கு.ஃ.ப்ரில் ஈடுபடுபவன் பாவமன்னிப்புச் செய்தால் இறைவன் மன்னிக்கிறான். மேலும் நரகத்தில் நுழையாமல் அவனைப் பாதுகாக்கின்றான்.

3-பெரிய கு.ஃ.ப்ர் உயிர் உடைமை இரண்டையும் ஆகுமாக்கின்றது. சிறிய கு.ஃ.ப்ர் உயிர் உடமை இரண்டையும் ஆகுமாக்காது.
4-பெரிய கு.ஃ.ப்ரில் ஈடுபடுவனுக்கும் மு.ஃ.மீன்களுக்கும் மத்தியில் பெரும் பகைமையை ஏற்படுத்துகிறது. அவனை அன்பு கொள்வதும், அவனைத் தலைவனாக ஏற்றுக் கொள்வதும் மு.ஃ.மீன்களுக்கு ஆகுமானதல்ல. அவன் மிக நெருக்கமானவனாக இருந்தாலும் சரியே. ஆனால் சிறிய கு.ஃ.ப்ர் தலைமைத்துவத்தை பொதுவாக தடுக்காது, எனினும் அவனிடம் இருக்கும் ஈமானைப் பொறுத்து அன்பு வைக்கப்படுவான். தலைமைத்துவம் கொடுக்கப்படுவான். மேலும் அவனிடம் இருக்கும் பாவத்திற்கேற்ப கோபமும், பகைமையும் கொள்ளப்படுவான்.

## அன்னிபா.ஃ.க்

விளக்கம்: மார்க்க அடிப்படையில் நிபா.ஃ.க் என்றால் சிறந்தவைகளையும், இஸ்லாத்தையும் வெளிப்படுத்தலும், தீயவைகளையும், (குப்.ஃ.ர்) நிராகரிப்பையும் மறைத்தலுமாகும்.
இது இவ்வாறு பெயர் கூறப்பட்ட காரணம் யாதெனில் : அவன் மார்க்கத்தில் ஒரு வாசலில் நுழைந்து மறுவாசலால் வெளியாகின்றான். இதனால் இறைவன் ஒரு வசனத்தில் பின்வருமாறு கூறுகிறான்.

﴿ إِنَّ ٱلۡمُنَٰفِقِينَ هُمُ ٱلۡفَٰسِقُونَ ﴾ التوبة: ٦٧

***நிச்சயமாக நயவஞ்சகர்கள் பாவிகளே ஆவார்கள். (அத்தௌபா : 67)***

அதாவது இவர்கள் மார்க்கத்தை விட்டும் வெளியானவர்கள். எனவே முனா.ஃ.பிகீன்களை இறைவன் காபீர்களை விட மோசமான இடத்தில் வைத்துள்ளான். இதை இறைவன் பின்வருமாறு குறிப்பிடுகிறான்.

﴿ إِنَّ ٱلْمُنَٰفِقِينَ فِى ٱلدَّرْكِ ٱلْأَسْفَلِ مِنَ ٱلنَّارِ ﴾ النساء: ١٤٥

***நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகவும் கீழான அடித்தட்டில் இருப்பார்கள். (அந்நிஸா : 145)***

﴿ إِنَّ ٱلْمُنَٰفِقِينَ يُخَٰدِعُونَ ٱللَّهَ وَهُوَ خَٰدِعُهُمْ ﴾ النساء: ١٤٢

***நிச்சயமாக நயவஞ்சகர்களான முனா.ஃ.பிகீன்கள் அல்லாஹ்வை ஏமாற்ற எண்ணுகிறார்கள் ஆனால் அவனோ அவர்களை ஏமாற்றி விடுகிறான். (அந்நிஸா : 142)***

﴿ يُخَٰدِعُونَ ٱللَّهَ وَٱلَّذِينَ ءَامَنُوا۟ وَمَا يَخْدَعُونَ إِلَّآ أَنفُسَهُمْ وَمَا يَشْعُرُونَ ۝٩ فِى قُلُوبِهِم مَّرَضٌ فَزَادَهُمُ ٱللَّهُ مَرَضًا ۖ وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌۢ بِمَا كَانُوا۟ يَكْذِبُونَ ﴾ البقرة: ٩ - ١٠

***அவர்கள் அல்லாஹ்வையும், ஈமான் (இறை நம்பிக்கை) கொண்டோரையும் ஏமாற்ற நினைக்கின்றார்கள், ஆனால் அவர்கள் (உண்மையில்) தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கிறார்களே தவிர வேறில்லை, எனினும் அவர்கள் (இதை) உணர்ந்து கொள்ளவில்லை. அவர்களுடைய இதயங்களில் ஒரு நோயுள்ளது, அல்லாஹ் (அந்த) நோயை அவர்களுக்கு இன்னும் அதிகமாக்கி விட்டான், மேலும் அவர்கள் பொய் சொல்லும் காரணத்தினால் அவர்களுக்குத் துன்பந்தரும் வேதனையுண்டு. (அல்பகரா : 9-10)***

## நிபா.ஃ.க்கின் வகைகள்

### நிபா.ஃ.க் இரண்டு வகைப்படும் :

**முதல் பிரிவு: அன் நிபா.ஃ.க் அல் இ.ஃ.திகாதி** : இது நிபா.ஃ.க் அல் அக்பர் எனும் பெரிய நிபா.ஃ.க்காகும். இது இஸ்லாத்தை வெளிப்படுத்தி நிராகரிப்பை மறைப்பதாகும். இந்தப் பிரிவு மனிதனை பூரணமாக இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றுகிறது. மேலும் இந்த நிபா.ஃ.க் உடையவன் நரகத்தின் அடித்தளத்தில் இருப்பான். இவர்களை அல்லாஹ் எல்லா தீய வர்ணனைகள் மூலமும் வர்ணித்துள்ளான். நிராகரிப்பு, நம்பிக்கை (ஈமான்) இல்லாதிருத்தல், இஸ்லாத்தையும் இஸ்லாத்தில் உள்ளவர்களையும் பரிகசித்தல், இன்னும் அவர்களை ஏளனமாக நினைத்தல், இஸ்லாத்திற்கு எதிராக காபீர்களுடன் பூரணமாக சேர்ந்து கொள்ளல், மேலும் இவர்கள் எல்லாக் காலங்களிலும் இருப்பார்கள். குறிப்பாக இஸ்லாம் மேலோங்கும் போது இவர்கள் அதைத் தாங்கிக் கொள்ள மாட்டார்கள். எனவே, அச்சமயத்தில் இவர்கள் இஸ்லாத்திற்கும், இஸ்லாத்தை பின்பற்றுபவர்களுக்கும் அந்தரங்கமாக மோசடிகள் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு இஸ்லாத்தில் நுழைய முயற்சி செய்வார்கள். மேலும் அவர்களின் உயிரும், உடமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக முஸ்லிம்களோடு இணைந்து வாழ்வார்கள். எனவே முனா.ஃ.பிக் இறைவனைப் பற்றியும், வானவர்கள், வேதங்கள், தூதர்கள், இறுதி நாள் பற்றியும் அவனுடைய விசுவாசத்தை வெளிப்படுத்துவான். ஆனால் அந்தரங்கத்தில் இவைகள் அனைத்துக்கும் மாற்றமாக இருப்பதோடு இவைகளை பொய்ப்பிக்கக்கூடியவனாகவும் இருப்பான். இறைவனை ஈமான் கொள்ளவும் மாட்டான்.

நபி (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட குர்ஆனில் இவர்களைப் பற்றி அல்லாஹ் தெளிவாக குறிப்பிடுகிறான். ***அந்த நபி (ஸல்) அவர்களை மனிதர்களுக்கு தூதராகவும், இறைவனின் அனுமதியுடன் மனிதர்களுக்கு நேர்வழி காட்டக்கூடியவராகவும், அந்த மனிதர்கள் செய்து கொண்டிருக்கும் விடயங்களை எச்சரிக்கை செய்யக் கூடியவராகவும், இறைவனின் தண்டனையைப் பற்றி அச்சம் ஏற்படுத்தவும் அவர்கள் அனுப்பட்டார்கள்.***

இந்த நயவஞ்சகம் உள்ள முனா.ஃ.பிகீன்களின் திரையை இறைவன் அகற்றி விட்டான். இவர்களுடைய இரகசியங்களையும் அல்லாஹ் குர்ஆனில் வெளிப்படுத்தி விட்டான். இவர்களுடைய விடயங்களில் அடியார்கள் பங்கு கொள்ளாமல் இருப்பதற்காகவும், அவைகளில் இருந்து எச்சரிக்கையாக இருப்பதற்கும் இறைவன் இவைகளை தெளிவு படுத்தியுள்ளான். ஸுரதுல் பகராவில் முதல் பகுதியில் மூன்று கூட்டத்தினரைப் பற்றி குறிப்பிட்டுள்ளான் :

**(1)மூ.ஃ.மீன்கள் (2) காபீர்கள் (3) முனா.ஃ.பிகீன்கள்.**

மு.ஃ.மீன்கள் விடயமாக 4 வசனங்களையும் காபீர்கள் விடயமாக 2 வசனங்களையும் முனா.ஃ.பிகீன்கள் விடயமாக 13 வசனங்களையும் குறிப்பிட்டுள்ளான். இவர்கள் அதிகமாக இருப்பதாலும் இவர்களுடைய சோதனைகள் பரவலாக இருப்பதனாலும் இஸ்லாத்திற்கும், இஸ்லாத்தில் உள்ளவர்களுக்கும் அவர்களால் கடினமான பிரச்சனைகள் இருப்பதாலும் இறைவன் அவர்களைப் பற்றி அதிகமாக குறிப்பிட்டுள்ளான். இஸ்லாத்தில் அவர்களது சோதனை மிகவும் கடினமானதாகும்.

ஏனெனில் அவர்கள் இதற்காகவே சாட்டப்பட்டவர்களாவர். மேலும் இஸ்லாத்தின் தலைமைத்துவம், இஸ்லாத்தின் வெற்றி இவைகளை அனைத்தும் இவர்களுக்கே சாட்டப்படடுள்ளது. உண்மையில் இவர்கள் இஸ்லாத்தின் எதிரிகளே. மேலும் இவர்களின் எதிர்ப்புகள் எல்லாக் காலங்களிலும் வெளியாகிக் கொண்டே இருக்கும். இவைகளை ஒரு மடையன் அறிவு என்றும், சீர்திருத்தம் என்றும் நினைப்பான். ஆனால் இது மடமையின் உச்ச நிலையும், பிரச்சனையுமாகும்.

## இந்த நிபா.ஃ.க் ஆறு வகைப்படும்:

1-நபி (ஸல்) அவர்களைப் பொய்ப்பித்தல்.
2-நபி (ஸல்) அவர்கள் மூலம் வந்த சில செய்திகளைப் பொய்ப்பித்தல்.
3-நபி (ஸல்) அவர்களை வெறுத்தல்.
4-நபி (ஸல்) அவர்கள் மூலம் வந்த சில செய்திகளை வெறுத்தல்.
5-நபி (ஸல்) அவர்களின் மார்க்கம் தோல்வி கானும் போது சந்தோஷப்படல்.
6-நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்கு வெற்றி கிடைக்கும் போது வெறுப்புக் கொள்ளல்.

**இரண்டாவது பகுதி: அன்னிபா.ஃ.க் அல்அமலி:** உள்ளத்தில் இறைநம்பிக்கை எஞ்சியிருக்க நயவஞ்சகர்களின் செயல்களில் ஈடுபடுதல். இது மனிதனை இஸ்லாத்தை விட்டும் வெளிப்படுத்தாது என்றாலும் இஸ்லாத்தை விட்டு வெளிப்படுவதற்கு ஒரு வழியாக இது அமைகிறது. இதில் ஈடுபடுபவன் ஈமானில் இருப்பதோடு, நயவஞ்சகத்திலும் இருப்பான். மேலே கூறப்பட்ட தன்மைகள் அதிகரிக்கும் போது அதனால் அவன் சுத்த முனா.ஃ.பிக்காக மாறிவிடுகிறான். இதற்கு பின்வரும் நபி மொழி ஆதாரமாக அமைகிறது : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'நான்கு பண்புகள் உள்ளன, இவை யாரிடம் உள்ளதோ அவன் சுத்த நயவஞ்சகனாகி விடுவான். இவைகளில் ஒரு பண்பு யாரிடம் உள்ளதோ அதை அவன் விடும் வரை நயவஞ்சகத்தின் ஒரு பகுதி அவனிடம் இருக்கும்.

நம்பிக்கை வைத்தால் மோசடி செய்வான், பேசினால் பொய் உரைப்பான், உடன்படிக்கை செய்தால் மாற்றம் செய்வான், விவாதம் ஏற்பட்டால் சண்டை போடுவான்’. (ஆதாரம்: புஹாரி முஸ்லிம்)
இந்த நான்கு பண்புகள் யாரிடம் ஒன்று சேருகிறதோ அவரிடம் தீங்கு சேர்ந்து விட்டது. மேலும் அவரிடம் நயவஞ்சகர்களின் பண்புகள் இணைந்து விடுகிறது. இவைகளில் ஒரு பண்பு யாரிடம் உள்ளதோ நயவஞ்சகத்தின் ஒரு பகுதி அவனிடம் இருக்கும். ஏனெனில் சில நேரங்களில் ஓர் அடியானிடம் நல்ல பண்புகளும், தீய பண்புகளும், ஈமானின் பண்புகளும், நிராகரிப்பின் பண்புகளும் சேர்கின்றன. அவன் செய்யும் கடமைகள், செயல்களைப் பொறுத்து நற்கூலிக்கும், தண்டனைக்கும் ஆளாகின்றான். அவைகளில் ஒன்றுதான் பள்ளியில் ஜமாத்துடன் தொழாமல் சோம்பல் காட்டுவது. ஏனெனில் இது முனா.ஃ.பிகீன்களின் பண்பாகும். எனவே நிபா.ஃ.க் என்பது மிக மோசமானதும், பயங்கரமானதுமாகும். இந்த மோசமான பண்பில் விழுவதை சஹாபாக்கள் அஞ்சினார்கள். இப்னு அபி மலீகா என்பவர் சொல்கிறார்: நபி (ஸல்) அவர்களின் 30 சஹாபாக்களை நான் சந்தித்தேன். அனைவரும் இந்த நிபா.ஃ.க்கை அஞ்சக்கூடியவர்களாகவே இருந்தனர்.

## பெரிய நிபா.ஃ.க் சிறிய நிபா.ஃ.க் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு:

1-பெரிய நிபா.ஃ.க் மனிதனை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றுகிறது. சிறிய நிபா.ஃ.க் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றாது.

2-பெரிய நிபா.ஃ.க் கொள்கையில் உள்ளும் புறமும் மாறுபடுவது, சிறிய நிபா.ஃ.க் கொள்கையல்லாது செயல்களில் உள்ளும் புறமும் மாறுபடும்.

3-பெரிய நிபா.ஃ.க் பொதுவாக மு.ஃ.மினிடமிருந்து வெளிப்படாது. சிறிய நிபா.ஃ.க் சில நேரம் மு.ஃ.மினிடம் வெளிப்படுகிறது.

4-பெரிய நிபா.ஃ.கில் ஈடுபடுபவன் பெரும்பாலும் மன்னிப்பு வேண்ட மாட்டான். அவ்வாறு மன்னிப்பு வேண்டினாலும் நீதிபதியிடத்தில் அதை ஏற்றுக் கொள்வதில் கருத்து வேறுபாடு உள்ளது. சிறிய நிபா.ஃ.க் இதற்கு மாற்றமாகும். இறைவனிடத்தில் இவன் மன்னிப்பு வேண்டினால் இறைவன் அவனை மன்னித்து விடுவான்.

பெரிய நிபா.ஃ.க் உடையவர்களைப் பற்றிக் கூறும் போது இறைவன் இவ்வாறு கூறுகிறான்.

﴿صُمٌّۢ بُكۡمٌ عُمۡيٞ فَهُمۡ لَا يَرۡجِعُونَ﴾ البقرة: ١٨

***(அவர்கள்) செவிடர்களாக, ஊமையர்களாக, குருடர்களாக, இருக்கின்றனர் எனவே அவர்கள் (நேரான வழியின் பக்கம்) மீள மாட்டார்கள்.(அல் பகரா:18)***
அதாவது அந்தரங்கத்தில் இஸ்லாத்தின் பால் மீள மாட்டார்கள். மீண்டும் அவர்களைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகிறான்:

﴿أَوَلَا يَرَوۡنَ أَنَّهُمۡ يُفۡتَنُونَ فِي كُلِّ عَامٖ مَّرَّةً أَوۡ مَرَّتَيۡنِ ثُمَّ لَا يَتُوبُونَ وَلَا هُمۡ يَذَّكَّرُونَ﴾ التوبة: ١٢٦

***ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு முறையோ இரு முறையோ அவர்கள் சோதிக்கப்படுகிறார்கள் என்பதை அவர்கள் காணவில்லையா? அப்படியிருந்தும் அவர்கள் தவ்பா செய்து மீள்வதுமில்லை (அது பற்றி) நினைவு கூர்ந்து நல்லுணர்ச்சி பெறுவதுமில்லை.***
ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: நிபா.ஃ.க் வெளிரங்கத்தில் அறியப்படாத ஒன்றாதலால் அதனுடையவர்களின் தவ்பாவை

வெளிரங்கத்தில் ஏற்றுக் கொள்வதில் கருத்து வேறுபாடு உள்ளது. ஏனெனில் அவர்கள் எப்போதும் இஸ்லாத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

# தற்கால இணைவைப்பின் வெளிப்பாடுகள்

## அடக்கஸ்தலங்கள், சமாதிகள் ஆகியவற்றிற்கு நன்கொடைகள், நேர்ச்சைகள், நரபலி என்பன வழங்குதல் தற்கால உலகின் இணை சார்ந்த அம்சங்களாகும்

மனிதனை ஷிர்க் எனும் பெரும்பாவத்திற்கு எடுத்துச் செல்லும் அனைத்துப் பாதைகளையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். அவைகளை அதிகமாக எச்சரிக்கையும் செய்துள்ளார்கள். அவைகளில் ஒன்றுதான் கப்ரு வணக்கமாகும்.
இந்த கப்ரு வணக்கத்திலும், கப்ரில் அடக்கம் செய்யப்பட்டவர்கள் மீது அளவு கடந்து செல்லும் விடயத்திலும் நபி (ஸல்) அவர்கள் உறுதியான தடைகளை வைத்துள்ளார்கள்.

அவைகள் பின்வருமாறு:
1-**அவ்லியாக்கள், நல்லடியார்கள் விடயத்தில் அளவு கடந்து போவதை நபி (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.** ஏனெனில் அவ்வாறு அளவு கடந்து செல்லல் அவர்களை வணங்க வழிவகுக்கின்றது. எனவே நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘அளவு கடந்து செல்வதை நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். அளவு கடந்து செல்வதுதான் உங்களுக்கு முன்னிருந்தவர்கள் அழியக் காரணமாக இருந்தது’. (ஆதாரம் : திர்மிதீ, இப்னுமாஜ.்., அஹ்மத்)
மேலும் கூறினார்கள்: **‘**மர்யமின் மகன் ஈஸாவை கிறிஸ்தவர்கள் உயர்த்திப் புகழுவது போல என்னை நீங்கள் உயர்த்திப் புகழ வேண்டாம். நிச்சயமாக நான் ஒரு அடிமை. எனவே என்னை அல்லாஹ்வின் அடிமை என்றும் அல்லாஹ்வின் தூதர் என்றுமே கூறுங்கள்’. (ஆதாரம்: புஹாரி)
2- **கப்ருகள் மீது கட்டிடம் கட்டுதலையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.**

அபுல் ஹய்யாஜ் அல் அஸதி (ரஹ்) அறிவிக்கிறார்கள்:
روى أبو الهياج الأسدي: قال لي علي بن أبي طالب رضي الله عنه : ألا أبعثك على ما بعثني عليه رسول الله أن لا تدع تمثالاً إلا طمسته. ولا قبراً مشرفاً إلا سويته (رواه مسلم)

அலி (ரலி) அவர்கள் எனக்குச் சொன்னார்கள்: நபி (ஸல்) அவர்கள் என்னை எதற்காக அனுப்பி வைத்தார்களோ அதே நோக்கத்திற்காக உன்னையும் நான் அனுப்பி வைக்கட்டுமா? ஒரு சிலையையும் வைக்காமல் உடைக்குமாறும், மதிக்கப்படும் கப்ருகளை உடைத்து நாசப்படுத்தாமல் விட வேண்டாம் என்றும் சொல்லி அனுப்பி வைத்தார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)
3- **அந்தக் கப்ருகளில் நிறம் பூசுவதையும், அதன் மீது கட்டிடம் கட்டுவதையும் தடுத்தார்கள்.**

عن جابر رضي الله عنه: قال: نهى رسول الله صلى الله عليه وسلم عن تجصيص القبر وأن يقعد عليه وأن يبني عليه بناء (رواه مسلم)

கப்ருகள் மீது நிறம் பூசுவதையும், அதன் மீது அமர்வதையும், அதன் மீது கட்டிடம் கட்டுவதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள் என ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஆதாரம் முஸ்லிம்)
4- **கப்ருகளுக்கு அருகில் தொழுகை நடத்துவதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள்.**

عن عائشة رضي الله عنها: قالت لما نزل برسول الله طفق يطرح خميصة له على وجهه فإذا اغتم بها كشفها، فقال وهو كذلك "لعنة الله على اليهود والنصارى اتخذوا قبور أنبياءهم مساجد" يحذر ما صنعوا، ولو لا ذلك أبرز قبره ، غير أنه خشي أن يتخذ مسجدا.

நபி (ஸல்) அவர்கள் மரணத்தறுவாயில் இருக்கும் போது தம்முடைய போர்வையை தம் முகம் மீது போடலானார்கள். அது முகத்தை மறைத்த போது அதை நீக்கி விட்டு பின்வருமாறு சொன்னார்கள்: "யூதர்களையும் கிறித்தவர்களையும் அல்லாஹ் சபிப்பானாக! அவர்கள் தங்களின் நபிமார்களது மண்ணறைகளை வணக்கஸ்தலங்களாக ஆக்கிவிட்டார்கள்' எனக் கூறினார்கள். இந்த பயம் மட்டும் இல்லாதிருந்தால் நபி(ஸல்) அவர்களின் கப்ரும் திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருக்கும். எனினும் நபி(ஸல்) அவர்களின் கப்ரும் வணக்கத்தலமாக ஆக்கப்பட்டு விடும் என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. (ஆதாரம்: புஹாரி முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களுக்கு முன்னிருந்தவர்கள் நபிமார்களின் அடக்கஸ்தலங்களை பள்ளிவாசல்களாக எடுத்துக் கொண்டார்கள். அவ்வாறு நீங்களும் அடக்கஸ்தலங்களை பள்ளியாக (வணங்குமிடமாக) எடுத்துக் கொள்ள வேண்டாம். அதை விட்டும் நான் உங்களை தடுக்கின்றேன்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பள்ளிகளாக தேர்ந்தெடுப்பதென்பது அந்த இடத்தில் தொழுகை நடத்துவதாகும். அந்த அடக்கஸ்தலங்கள் மீது கட்டிடம் கட்டப்படாமல் இருந்தாலும் சரியே! எந்த இடத்தையும் தொழுகை என்று நாடினால் அந்த இடத்தை பள்ளியாக எடுத்து கொண்டார்கள் என்றே பொருள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'பூமி எனக்கு வணங்குமிடமாகவும், சுத்தமானதாகவும் ஆக்கப்பட்டுள்ளது'. (ஆதாரம் புஹாரி) எனவே, இந்த அடக்கஸ்தலங்களில் பள்ளி வாசல் கட்டப்பட்டால் அதன் நிலை மிக கடினமானதாகும். இந்த எச்சரிக்கைகளை பொரும்பாலான மக்கள் அலட்சியம் செய்து தடுக்கப்பட்ட விடயங்கைளைச் செய்து ஷிர்க்கிலே வீழ்ந்து விட்டிருக்கின்றனர். கப்ருகள் மீது பள்ளிகளையும் ஸியாரத்துக்களையும் மகாம்களையும் கட்டுகின்றனர்.கப்ருகளைத் தரிசிப்பதற்குரிய இடங்களாக மாற்றி அவ்விடத்தில் அறுத்துப்பலியிடல், அதில் அடங்கப்பட்டவர்களிடம் பிரார்த்தித்தல், உதவி தேடல், அவர்களுக்காக நேர்ச்சை செய்தல் போன்ற பெரிய ஷிர்க்குகளைச் செய்கின்றனர்.

அல்லாமா இப்னு கையிம் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: கப்ரில் நிறைவேற்றப்படும் வழிபாடுகளையும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளையும் அவர்களின் ஏவல்கள், விலக்கல்களையும், நபித் தோழர்கள் செய்தவற்றையும் ஒருவன் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்றுடன் ஒன்று முரண்படுவதைப் பார்ப்பான். இரண்டும் ஒன்றோடு ஒன்று சேராதவாறு எதிர் மாற்றமாக இருப்பதைக் காணலாம். கப்ருகள் உள்ள இடங்களில் தொழுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். ஆனால் இவர்கள் அந்த இடங்களில் தொழுகையை நிறைவேற்றுகின்றனர். அந்த இடங்களை பள்ளியாக எடுத்துக் கொள்வதை நபி (ஸல்) தடை செய்தார்கள். ஆனால் இவர்கள் அதன் மீது பள்ளிகளைக் கட்டுகின்றனர். மேலும் அல்லாஹ்வுடைய வீடுகளுக்கு அவைகளை ஒப்பாக வைத்து அவைகளைத் தரிசனத்திற்குரிய இடமென்று பெயரும் சூட்டுகின்றனர். மேலும் அந்தக் கப்ருகள் மீது விளக்குகள் ஏற்றுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். ஆனால் இவர்கள் விளக்குகளை ஏற்றி வைக்கின்றனர். அந்த இடங்களைக் கொண்டாடும் இடமாக எடுப்பதைத் தடுத்தார்கள். ஆனால் இவர்கள் அந்த இடங்களை கொண்டாடும் இடமாகவும், வணக்கங்கள் நிறைவேற்றும் இடமாகவும் எடுத்துக் கொள்கின்றனர். பெருநாள்

தினங்களுக்கு ஒன்று கூடுவதை விட அல்லது அதை விட அதிகமானோர் அங்கு ஒன்று கூடுகின்றனர்.
மேலும் நபி (ஸல்) அவர்கள் அந்தக் கப்ருகளை உடைத்து தரைமட்டமாக்குமாறு ஏவினார்கள். இமாம் முஸ்லிம் அவர்கள் அறிவிக்கிறார்கள்: அபுல் ஹய்யாஜ் அல் அஸதி (ரஹ்) அவர்கள் அலி (ரலி) அவர்கள் எனக்குச் சொன்னார்கள் என அச்செய்தியை பின்வருமாறு கூறுகிறார்: 'எந்த ஓவியங்களையும் வைக்காமலும், உடைக்காமலும், கண்ணியப் படுத்தப்படும் எந்தக் கப்ருகளையும் உடைத்து தரமட்டமாக்காமலும் விட வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் என்னை அனுப்பி வைத்தார்கள் அதே போன்று உன்னையும் நான் அனுப்பி வைக்கட்டுமா என்றார்கள்'.

இன்னும் சமாமா இப்னு ஷுபிய்யைத் அவர்களைத் தொட்டும் முஸ்லிமில் அறிவிக்கப்படுகிறது: 'ரோம் தேசத்தில் (பிரவ்தஸ்) எனும் இடத்தில் புழாளா இப்னு உபைத் என்பவரோடு நாம் இருந்தோம். அச்சமயம் எங்களோடு இருந்த ஒரு தோழர் இறந்து விட்டார். பழாளா என்பவர் அவரின் கப்ரை பூமியுடன் மட்டமாக வைக்கும்படி ஏவினார்கள். பின்பு நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு மட்டம் செய்யுமாறு ஏவியதை நான் கேட்டுள்ளேன் என்றார்கள்.
இவர்கள் இந்த இரண்டு நபி மொழிகளுக்கும் மாற்றம் செய்வதை பார்க்கமுடிகிறது. பூமியை விட்டும் கப்ருகளை உயர்த்துகிறார்கள். அதன் மீது குப்பாக்களையும் அமைக்கின்றார்கள்.
மேலும் இமாமவர்கள் கூறுகையில் : நபியவர்கள் காட்டிய வழிமுறை, மேற்கூறப்பட்டவற்றிலிருந்து அவர்கள் தடுத்த நோக்கம் ஆகியவற்றுக்கும், இவர்கள் உருவாக்கிய வழிமுறை அதன் நோக்கம் என்பவற்றுக்கிடையிலுள்ள பாரிய வேறுபாட்டைக் கவனித்துப் பாருங்கள். இதில் கணிப்பிட முடியாதளவு தீய விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை யாராலும் மறுக்கமுடியாது.
பின்பு இமாமவர்கள் அந்தப் பிரச்சினைகளையும், விளைவுகளையும் குறிப்பிடுகிறார்கள் அவைகள் பின்வருமாறு:
கப்ருகளை தரிசிக்கும் போது மறுமையை ஞாபகப்படுத்தல், தரிசிக்கப்படுவருக்கு நல்லது செய்தல், அவருக்காக இறைவனிடம் பிராத்தனை செய்தல், அவர் மீது அன்பு காட்டல், அவருக்காக மன்னிப்பு வேண்டல், அவருக்காக நல்வாழ்வை வேண்டுதல் போன்றவைகளே நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளாகும். எனவே தரிசிப்பவர் தனக்கும் தனது உள்ளத்திற்கும் நல்லது செய்பவராகவே இருப்பார்.
ஆனால் இந்த இணை வைப்பாளர்கள் இவ்விடயத்தை (தரிசிப்பதன் நோக்கத்தை) தலைகீழாக மாற்றிவிட்டனர். இறந்தவரைக் கொண்டு இணை வைத்தல், அவரை அழைத்தல், அவரைக் கொண்டு பிராத்தனை செய்தல், அவரவர்களுடைய தேவைகளை இறந்தவர்களிடம் கேட்டல், இறந்தவரிடமிருந்து பரக்கத் கிட்டுமென எதிர்பார்த்தல், இவர்களுடைய எதிரிகளுக்கு எதிராக உதவி செய்வார் என்று நினைத்தல் போன்றவைகளை செய்யலானார்கள். இவர்கள் தனக்கும் இறந்தவர்களுக்கும் தீயதையே செய்யலானார்கள்.
நேர்ச்சைகளையும், பலிகளையும் இறந்தவர்களுக்காக முன்வைத்தல் பெரிய ஷிர்க்காகும் என்பது இதனால் தெளிவாகின்றது. காரணம் நபி (ஸல்) அவர்கள் கப்ருகளை எந்த நிலையில் வைக்கச் சொன்னார்களோ அந்த நிலைக்கு மாற்றமாக இருப்பதனாலாகும். கப்ருகள் மீது கட்டுவதையும், அதன் மீது பள்ளிவாசல்கள் உருவாக்குவதையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். ஏனெனில் அதன் மீது குப்பாக்களும், பள்ளிகளும் கட்டப்பட்டதால் அங்கு அடக்கம் செய்யப்பட்டிருப்பவர்கள் மனிதர்களுக்கு நல்லதை அல்லது தீங்கை செய்வார்கள் என மடையர்கள் நம்பிக்கை வைத்தார்கள். மேலும் அடக்கம் செய்யப்பட்டிருப்பவர்களிடம் உதவி வேண்டினால் உதவி செய்வார்கள் என்றும்

இவர்களிடம் வருபவர்களின் தேவைகளை நிறைவேற்றுவார்கள் என்றும் நம்பிக்கை வைத்து நேர்ச்சைகளையும், பலிகளையும் முன்வைக்கலானார்கள். எதுவரைக்கு மென்றால் அல்லாஹ்வை விட்டுவிட்டு சிலைகள் வணக்கப்படும் அளவிற்கு ஆகிவிட்டது.

قال النبي صلى الله عليه وسلم: اللهم لا تجعل قبري وثناً يعبد (رواه مالك وأحمد)

'இறைவா! எனது கப்ரை வணங்கப்படும் சிலையாக மாற்றி விடாதே என்று பிராத்தனை செய்தார்கள் நபி (ஸல்) அவர்கள்'. (ஆதாரம் : மாலிக், அஹ்மத்)

நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு பிரார்த்திக்கக் காரணம் பிற்காலத்தில் சில கப்றுகள் இதுபோல் ஆக்கப்படும் என்பதனாலேயே. இஸ்லாமிய நாடுகள் என்று சொல்லப்படும் அதிகமான நாடுகளில் இவ்வாறு நடக்கின்றது. ஆனால் நபி (ஸல்) அவர்களின் துஆவின் பரகத்தைக் கொண்டு அவர்களின் கப்ரை இறைவன் பாதுகாத்துள்ளான். என்றாலும் பித்அத்துகளை பின்பற்றக் கூடிய சில மடையர்களால் சில முரணான விடயங்கள் நபி (ஸல்) அவர்களின் பள்ளியில் நட்பதை காண முடிகிறது. என்றாலும் அவர்களின் கப்ரை அவர்களால் அடைய முடியாது. ஏனெனில் அவர்களுடைய கப்ரு அவர்களின் வீட்டில் இருக்கிறது, பள்ளியில் அல்ல. மேலும் அவர்களின் கப்ரு சுவர்களால் சூழப்பட்டுள்ளது. அல்லாமா இப்னு கையூம் (ரஹ்) அவர்கள் அதனை ஒரு பாடலில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

فاستجاب رب العالمين دعاءه وأحاطه بثلاثة الجدران

அகிலத்தாரின் இரட்சகன் நபிகளாரின் அழைப்புக்கு விடை கொடுத்து விட்டான்.
எனவே மூன்று சுவர்கள் கொண்டு அதனைப் பாதுகாத்தான்.

## அல் பித்ஆ

அதன் விளக்கம்: அகராதியில் பித்அத் என்றால், அல் பித.'. என்ற வார்த்தையிலியிலிருந்து எடுக்கப்பட்டதாகும். எந்தவொரு முன் உதாரணமும் இல்லாமல் புதிதாக உருவாக்கப்பட்டவைகளாகும். இறைவன் இவ்வாறு கூறுகிறான்.

﴿بَدِيعُ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ﴾ البقرة: ١١٧

***'வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றி அவன் படைத்தவன்'***. (அல்பகரா : 117)

அதாவது எந்த முன்மாதிரியுமின்றி அவைகளை இறைவன் புதிதாக படைத்துள்ளான். மேலும் கூறுகிறான் :

﴿قُلْ مَا كُنتُ بِدْعًا مِّنَ ٱلرُّسُلِ﴾ الأحقاف: ٩

(நபியே அவர்களிடம்) நீர் கூறுவீராக: (அல்லாஹ் அனுப்பிய) தூதர்களில் நான் புதியவனாக இருக்கவில்லை. (அல் அஹ்கா.்.ப்:9)
அதாவது, இறைவனிடத்தில் இருந்து மனிதர்களுக்கு முதன் முதலாக தூதுத்துவத்தை கொண்டு வரவில்லை என்றாலும் பல தூதர்கள் என்னை முந்திக் கொண்டார்கள்.
மேலும் சொல்வார்கள் : ஒரு அடியான் ஒரு பித்அத்தை உருவாக்குகின்றான் என்றால் அதாவது இதற்கு முன் இல்லாத ஒரு பாதையை ஆரம்பித்தான் என்றே பொருள்.

**புதிதாக உண்டுபண்ணுதல் இரண்டு வகைப்படும்.**

- அன்றாட பழக்க வழக்கங்களில் புதிதாக உருவாக்குதல் : உதாரணமாக நவீன கண்டு பிடிப்புகள். இவைகள் ஆகுமானவையாகும். ஏனெனில் வணக்கங்கள் அல்லாத உலக வழக்காறுகளில் தடுக்கப்பட்டவை தவிர்ந்த அனைத்தும் ஆகுமானவையாகும் என்பதே பொதுவிதியாகும்.
- மார்க்கத்தில் புதுமையைப் புகுத்தல் : இது தடுக்கப்பட்டவையாகும். ஏனெனில் இதன் அடிப்படை நிறுத்தப்பட்டுள்ளது. (அல்லாஹ்வும் அவனது தூதரும் வணக்கமாக அறிமுகப்படுத்தியது தவிர்ந்த அனைத்தும் தடுக்கப்பட்டவையாகும் என்பதே பொதுவிதியாகும்.)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

قال النبي صلى الله عليه وسلم : "من أحدث في أمرنا هذا ما ليس منه فهو رد" وفي رواية : "من عمل عملاً ليس عليه أمرنا فهو رد" (متفق عليه)

'யார் இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்குகிறாரோ அது நிராகரிக்கப்பட்டதாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'.(ஆதாரம் புஹாரி முஸ்லிம்) இன்னோர் அறிவிப்பில், 'எமது வழிகாட்டல் இல்லாத ஒரு செயலை யார் செய்கிறாரோ அது நிராகரிக்கப்பட்டதாகும்'.(ஆதாரம் முஸ்லிம்)

## பித்அத்தின் வகைகள்

மார்க்கத்தில் பித்அத் இரண்டு வகைப்படும்:

முதல் பகுதி:

கொள்கை சார்ந்த பித்அத் : இதற்கு உதாரணமாக ஜஹ்மிய்யா, மு.்.தஸிலா, ராபிழா இது போன்ற வழிகெட்ட கூட்டத்தினரின் கொள்கைக் கோட்பாடுகளைக் கூறலாம்.

இரண்டாவது பகுதி:

வணக்க வழிபாடுகளில் பித்அத் : உதாரணமாக, கடமையாக்கப்படாத ஒன்றை வணக்கம் என்று இறைவனுக்காக செய்தல், இது பல வகைப்படுகிறது.

**முதல் பிரிவு:** வணக்கங்களில் அடிப்படையில் இருந்து ஏற்படுபவைகள். அதாவது மார்க்கத்தில் எந்த அடிப்படையும் இல்லாமல் ஒரு வணக்கத்தை உருவாக்குதல். உதாரணமாக, மார்க்கத்தில் இல்லாத தொழுகை, நோன்பு, பெருநாள் தினங்களை உண்டு பண்ணுதல் அல்லது கடமையில்லாத பெருநாள் தினங்களை உண்டு பண்ணுதல், பிறந்தநாள் விழா இன்னும் இது போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

**இரண்டாவது பிரிவு:** ஆகுமாக்கப்பட்ட வணக்கங்களில் அதிகமாக செய்தல். உதாரணமாக, லுஹர் அல்லது அஸ்ர் தொழுகையில் ஐந்தாவது ஒரு ரக்அத்தை அதிகப்படுத்துவதாகும்.

**மூன்றாவது பிரிவு:** இஸ்லாம் விதித்த இபாதத்தை ஷரீஅத் காட்டித்தராத பிரகாரம் செய்தல். உதாரணமாக, ஆகுமான திக்ருகளை கூட்டாக சப்தமிட்டு ஓதல், மேலும் சில வணக்கங்களில் நபி (ஸல்) அவர்களின் சுன்னாவை தாண்டிச் செல்லும் அளவிற்கு தன்னை வறுத்திக் கொள்ளல்.

**நான்காவது பிரிவு:** இஸ்லாம் விதித்த ஒரு வணக்கத்தை எவ்வித ஆதாரமுமின்றி சில குறிப்பிட்ட தினங்களில் அல்லது நேரங்களில் செய்யவென்று தாமாக ஏற்படுத்திக் கொள்ளல். உதாரணமாக, ஷ.்பான் மாத நடுப்பகுதியில் நோன்பு வைத்தலும் அந்த இரவை நின்று வணங்குவதாகும். நோன்பு வைத்தல், நின்று வணங்குதல் ஆகியவை அடிப்படையில் ஆகுமானதாகும். ஆனால் அவைகளுக்கு ஒரு நேரத்தை குறிப்பிடுவதற்கு தகுந்த ஆதாரம் தேவைப்படுகிறது.

## மார்க்கத்தின் பெயரில் உருவான பித்அத் பற்றிய சட்டம்

மார்க்கத்தில் எல்லா பித்அத்துகளும் தடுக்கப்பட்டவையும், வழிகேடுமாகும்.

لقوله صلى الله عليه وسلم : وإياكم ومحدثات الأمور فإن كل محدثة بدعة وكل بدعة ضلالة. (رواه الترمذي)

புதிதாக உருவாகக் கூடிய நவீனங்களை விட்டும் நான் உங்களை எச்சரிக்கின்றேன். புதிய நவீனங்கள் அனைத்தும் பித்அத்தாகும். இன்னும் எல்லா பித்அத்துகளும் வழிகேடேயாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் திர்மிதீ)

وقوله : من أحدث في أمرنا هذا ما ليس منه فهو رد. (متفق عليه).

‘எவர் எமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்கிறாரோ அது நிராகரிக்கப்படும்’. (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

وفي رواية : من عمل عملاً ليس عليه أمرنا فهو رد" (رواه مسلم)

‘எமது வழிகாட்டல் இல்லாத ஒரு செயலை யார் செய்கிறாரோ அது நிராகரிக்கப்பட்டதாகும்’. என இன்னுமொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : முஸ்லிம்)

எனவே, ஒவ்வொரு நவீனங்களும் பித்அத் என்பதையும், எல்லா பித்அத்துகளும் மறுக்கப்பட்ட வழிகேடாகும் என்பதையும் மேலே குறிப்பிட்ட இரண்டு ஹதீஸ்களும் வலியுறுத்துகிறது. இதனுடைய அர்த்தம் யாதெனில் நம்பிக்கையிலும், வணக்கங்களிலும் பித்அத் (நவீனங்கள்) ஹராமானதாகும். ஆனால் பித்அத்தின் தன்மைக்கேற்ப அதுபற்றிய கண்டிப்பும் வித்தியாசப்படும்.

பித்அத்களில் சில தெளிவான இறை நிராகரிப்பாகும் : உதாரணமாக, இறந்தவர்களை நெருங்கலாம் என்று அவர்களின் கப்ருகளை தவா.்.ப் செய்தல் இன்னும் இறந்தவர்களுக்காக நேர்ச்சைகளையும், பலிகளையும் முன்வைத்தல், கப்ரில் அடக்கம் செய்யப்பட்டிருப்பவரை பிராத்தனை செய்து அழைத்தல், அவர்களைக் கொண்டு உதவி தேடல், இன்னும் ஹஜ்மிய்யா மு.்.தசிலா என்ற பிரிவினரில் தீவிரப்போக்குள்ளவர்களின் கூற்றுக்களையும் குறிப்பிடலாம்.

பித்அத்துக்களில் சில இணைவைப்பின்பால் வழிவகுக்கக்கூடியது : உதாரணமாக, கப்ருகள் மீது கட்டுதல், அதன் அருகில் தொழுகை நடத்துதல், அந்த இடத்தில் பிராத்தனை செய்தல் போன்றவைகளாகும்.

பித்அத்துக்களில் சில கொள்கை ரீதியான குற்றமாகும் : உதாரணமாக, கவாரிஜ், கதரிய்யா, முர்ஜிஆ போன்ற பிரிவினர்களின் ஷரீஅத்திற்கு மாற்றமான சொற்கள், கொள்கைக் கோட்பாடுகளைக் குறிப்பிடலாம்.

அவற்றில் சில பாவமாகும் : உதாரணமாக, இபாதத்தில் இன்பம் காண துறவறத்தைக் கடைபிடித்தல், நன்மை நாடி நோன்புடன் சூரியவெப்பத்தில் நிற்றல், உடலுறவிலுள்ள ஈடுபாட்டை இல்லாமல் செய்ய ஆண்மை நீக்கம் செய்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

## முக்கிய குறிப்பு

யார் பித்அத்தை பித்ஆ ஹஸனா, பித்ஆ சையியா அதாவது நல்ல பித்அத், கெட்ட பித்அத் என்று பிரிக்கின்றார்களோ அவர்கள் தவறிழைத்து விட்டார்கள். ஏனெனில் இது :

"فإن كل بدعة ضلالة"

‘எல்லா பித்அத்துகளும் வழகேடாகும்’ என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கு நேர்முரணானதாகும். ஏனெனில் அனைத்து பித்அத்துகளும் வழி கேடு என்றே நபி (ஸல்) தீர்ப்பளித்துள்ளார்கள். ஆனால் இவர்கள் அனைத்து பித்துகளும் அல்ல என்றாலும் அங்கு நல்ல பித்அத் என்றும் ஒன்று உள்ளது என்று கூறுகிறார்கள்.

ஷரஹ் அல் அர்பஈன் என்ற புத்தகத்தில் ஹாபிழ் இப்னு ரஜப் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: ‘அனைத்து பித்அத்துகளும் வழிகேடு என்ற நபி (ஸல்) அவர்களின் வாக்கானது ஜவாமியுல் கலிம் எனும் ரத்தினச் சுருக்க வாத்தைகளில் ஒன்றாகும். அதை விட்டும் எந்த ஒரு அம்சமும் வெளியாகாது. இது மார்க்கத்தின் முக்கியமான அடிப்படைகளில் ஒன்றாகும். மேலும் இந்த வாக்கு நபி (ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீசுக்கு ஒப்பானதாக இருக்கிறது.

"من أحدث في أمرنا ما ليس منه فهو رد"

‘எவர் எமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்கிறாரோ அது நிராகரிக்கப்படும்’.

மார்க்கத்தில் புதிதாக எவ்வித ஆதாரமும் இல்லாமல் உருவாக்கப்படும் அனைத்தும் வழிகேடாகும். இப்படி உருவாகும் அமல்கள், கொள்கைகள், இரகசியமான பரகசியமான வார்த்தைகள், அனைத்தையும் விட்டும் மார்க்கம் தூய்மையானதாக இருக்கிறது'. இத்துடன் ஹாபிழ் பின் ரஜப் அவர்களின் விளக்கம் முடிவடைகிறது. (பார்க்க : 'ஜாமிஉல் உலூமி வல்ஹிகம்' பக்கம் : 233)

பித்அத் ஹஸனா என்று ஒன்று உள்ளது என்பதற்கு தராவீஹ் தொழுகை பற்றி உமர் (ரலி) அவர்களின் வார்த்தையைத் தவிர வேறு ஆதாரம் இவர்களுக்கில்லை

(نعمت البدعة هذه) இது பித்துகளில் சிறந்ததாகும் என உமர் (ரலி) கூறினார்கள்.

அல்குர்ஆனை ஒன்று திரட்டியது, ஹதீஸ்களை எழுதி நூலுருப்படுத்தியது போன்ற பலவிடயங்கள் புதிதாக உருவாக்கப்பட்டும் அவற்றை ஸலபுஸ் ஸாலிஹீன்கள் என்பவர்கள் மறுக்கவில்லையே இதுவே பித்அத்தில் நல்லதும் உண்டு என்பதற்கான சான்றாகும் என்று இவர்கள் கூறுகின்றனர்.

இதற்கான பதில் யாதெனில், நிச்சயமாக இவற்றுக்கு ஓர் அடிப்படை உள்ளது அவை புதிதாக உருவாக்கபட்டவை அல்ல. ***பித்அத்துகளில் சிறந்தது இது''*** என்ற உமர் (ரலி) அவர்கள் வார்த்தை அரபுப் பாஷையில் பித்அத்தின் அர்த்தத்தை குறிக்கிறது. மார்க்க ஷரிஅத்தின் அடிப்படையிலல்ல. ஷரீஅத்தில் ஒரு விடயத்திற்கு அடிப்படை இருந்தால் அதனை வைத்து செயற்பட முடியும். நிச்சயமாக இது பித்அத் என்று கூறப்பட்டால் அது அகராதியில் மாத்திரமே பித்அத் ஆகும், மார்க்க ஷரிஅத் அடிப்படையில் அல்ல. ஏனெனில் ஷரிஅத் அடிப்படையில் பித்அத் என்றால், எந்த அடிப்படையும் மார்க்கத்தில் இல்லாதிருப்பதே பித்அத்தாகும். குர்ஆன் ஒரு புத்தக வடிவில் சேர்க்கப்பட்டதற்கு மார்க்கத்தில் அடிப்படை உள்ளது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் குர்ஆனை எழுதுமாறு ஏவிக்கொண்டே இருந்தார்கள். என்றாலும் குர்ஆன் எழுதப்பட்டு பல பகுதிகளில் இருந்தது. அவைகளை ஸஹாபாக்கள் ஒரு புத்தகத்தில் ஒன்று சேர்த்தார்கள். அதை பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒன்று சேர்த்தார்கள். தராவீஹ் தொழுகையைப் பொறுத்த வரை நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களுக்கு அத்தொழுகையை நடத்தினார்கள். இறுதியில் அவர்கள் மீது அது கடமையான ஒரு தொழுகையாக மாறிவிடுமோ என அஞ்சி ஸஹாபாக்களை விட்டும் தவிர்ந்து கொண்டார்கள். ஆனால் ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களில் காலத்தில் பல பிரிவினர்களாக பல பகுதிகளிலும் தொடர்ச்சியாக தொழுது கொண்டிருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் இறந்தற்குப் பிறகு உமர் (ரலி) அவர்கள் அனைவரையும் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் எவ்வாறு தொழுதார்களோ அதே போன்று ஒரு இமாமுக்குக் கீழ் ஒன்று சேர்த்தார்கள். இது மார்க்கத்தில் பித்அத் (நவீனம்) என்று கூற முடியாது. மேலும் ஹதீஸ்கள் எழுதப்பட்டதும் இதே போன்றுதான். அதற்கு ஷரிஅத்தில் அடிப்படை உள்ளது. ஹதீஸ்களை எழுதுவதற்கு சில ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்ட போது எழுத அனுமதி கொடுத்தார்கள். ஹதீஸ்களை எழுதுவதில் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் குர்ஆனில் இல்லாதவைகள் நுழைந்து விடும் என்ற அச்சம் பொதுவான ஒரு எச்சரிக்கையாக இருந்தது. நபி (ஸல்) அவர்கள் இறந்த பின் இந்த எச்சரிக்கை போய் விட்டது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் இறப்பதற்கு முன் குர்ஆன் பூரணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு விட்டது. எனவே அதன் பிறகு முஸலீம்கள் ஹதீஸ் இழந்து விடாமல் பாதுகாப்பதற்காகவே கோர்வை செய்தார்கள். இஸ்லாத்திற்கும், முஸ்லீம்களுக்கும் அல்லாஹ் நற்கூலியைக் கொடுப்பானாக! இறைவனின் வேதத்தையும், நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளையும் இழந்து விடாமல் தீயவர்கள் அதில் விளையாடாமலும் பாதுகாத்தார்கள்.

## நவீன கால பித்அத்துகளின் ஒரு பகுதி

அவைகள் பின்வருமாறு:
1-நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை கொண்டாடுதல்.
2-வணக்கங்களிலும், அல்லாஹ்வுக்கு நெருங்குவதிலும் உள்ள பித்அத்துகள்.
நபித்துவத்தின் காலத்தை விட்டும் மிகவும் பின்தங்கிய காலம் என்பதாலும், அறிவின் குறைவாலும், பித்அத்தின் பாலும், இஸ்லாத்திற்கு மாற்றமான வழி முறைகளின் பாலும் அழைப்பாளர்கள் அதிகமானதாலும், இறைநிராகரிப்பாளர்களுக்கு ஒப்பானதாலும் நவீன கால பித்அத்துகள் அதிகமாக உள்ளது.
நபி (ஸல்) அவர்களின் பின்வரும் ஹதீஸ் இதை உண்மைப்படுத்துகிறது :

قال النبي صلى الله عليه وسلم : لتبعثن سنن من كان قبلكم .

'நிச்சயமாக உங்களுக்கு முன்னிருந்தவர்களின் வழிமுறைகளை நீங்கள் பின் தொடருவீர்களென நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'. (ஆதாரம் : திர்மிதீ). எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை சற்று விரிவாகப் பார்ப்போம்.

## 1-நபியவர்களின் பிறந்ததின விழா :

ரபீஉல் அவ்வல் மாதம் நபி (ஸல்) பிறப்பை முன்னிட்டு கொண்டாட்டம் நடத்தல். இது கிறிஸ்தவர்கள் ஈஸா நபியின் பிறப்பை முன்னிட்டு கிறிஸ்மஸ் கொண்டாடுவதைப் போன்று முஸ்லிம்களில் மடையர்களும், அல்லது வழிகெட்ட அறிஞர்களும் நபி (ஸல்) அவர்களின் பிறப்பை முன்னிட்டு கொண்டாடுகிறார்கள். சிலர் இவ்விஷேட நிகழ்ச்சியை பள்ளிகளிலும், வேறுசிலா் தமது வீடுகளிலும், இன்னும் சிலா் அதற்கென பிரத்தியேக இடங்களை ஏற்படுத்தியும் கொண்டாடுகின்றனர். இந்த வைபவத்தில் அவர்களின் பாட்டனார்களும், மனிதர்களில் அந்தஸ்துப் பெற்றவர்களும், இன்னும் பலரும் கலந்து கொள்வார்கள். நபி ஈஸா (அலை) அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் எவ்வாறு நவீன வைபவங்களை நடத்துகின்றனரோ அதே போன்று அவர்களுக்கு ஒப்பாக இவர்களும் நடத்துகின்றனர். இன்னும் நிச்சயமாக இந்த வைபவம் பித்அத்தாகவும், கிறிஸ்தவர்களுக்கு ஒப்பாகவும் இருப்பது மாத்திரமல்லாது வெறுக்கப்பட்ட ஷிர்க்கானவைகளும் இதில் இடம்பெற்றிருப்பதை காணமுடிகிறது. உதாரணமாக நபி (ஸல்) அவர்களின் உரிமைகளில் அளவு கடந்து பாடல்களையும், கவிதைகளையும் பாடுகின்றனர். அல்லாஹ்வை விட்டு அவர்களிடம் பிராத்தனை செய்யும் அளவுக்கும், அவர்களிடம் உதவி தேடுமளவுக்கும் சென்று விட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் தன்னை புகழ்வதில் மக்கள் அளவு கடந்து போவதை தடுத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

لا تطروني كما أطرت النصارى ابن مريم إنما عبد فقولوا عبد الله ورسوله.

'மர்யமின் மகன் ஈஸாவை கிறிஸ்தவர்கள் அளவுகடந்து புகழ்வது போல என்னை அளவுகடந்து புகழ வேண்டாம். நிச்சயமாக நான் ஓர் அடிமை, எனவே அல்லாஹ்வின் அடிமை என்றும் அவனுடைய தூதர் என்றுமே கூறுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'. (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)
மேற்கூறப்பட்ட நபி மொழியில் (அல் இத்ரா) என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இதன் அர்த்தம் யாதெனில், ஒருவரை அளவு கடந்து புகழ்வது என்பதாகும்.
சில நேரங்களில் நபி (ஸல்) அவர்கள் இவர்களின் வைபவங்களுக்கு வருகை தருகிறார்கள் என்று எண்ணுகின்றனர். மேலும் இந்த வைபவங்களில் நிகழும் வெறுக்கத்தக்க செயல் யாதெனில், கூட்டாக அமர்ந்து ராகத்துடன் பாடல்கள் பாடுவதும், தபேலாக்களைத் தட்டுவதும் ஆகும். இது போன்று இன்னும் சூபிய்யாக்களின் நவீன திக்ருகளையும் பாடுவார்கள். மேலும் இவ்வாறான வைபவங்கள் ஆண், பெண் கலப்பு ஏற்படுவதோடு பிரச்சனைகளும் விபச்சாரம் போன்ற பாவங்களும் ஏற்படக் காரணமாக உள்ளது. மேலே குறிப்பிட்ட குறைகள் இந்த வைபவங்களில் இல்லாமல் ஒன்று கூடுதலும்,

உண்ணலும், சந்தோஷத்தை வெளிப்படுத்தலும் மாத்திமே இருந்தாலும் இதுவும் நவீன பித்அத்தாகும். புதிதாக உருவாகக் கூடியவை பித்அத்தாகும். மேலும் எல்லா பித்அத்துகளும் வழிகேடாகும்.
மேலும் அது மற்றைய வைபவங்களில் இடம் பெறும் வெறுக்கப்பட்ட மோசமானவைகள் ஏற்பட வழியாகவும் அமைகின்றது.
மேலும் இதை பித்அத் என்று சொன்னோம். காரணம் யாதெனில், குர்ஆனிலோ, ஸுன்னாவிலோ, ஸலபுஸ் ஸாலிகீன்கள் செய்ததாகவோ அல்லது சிறந்த நூற்றாண்டுகள் என்று ஹதீஸில் சொல்லப்பட்ட காலங்களில் யாரும் செய்ததாகவோ எந்த ஆதாரமும் அடிப்படையும் இல்லை. ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே தான் இது ஏற்பட்டது. ஷீயாக்களின் பாதிமியீன்களே இதை ஏற்படுத்தினர்.

இமாம் அபூ ஹ.்.ப்ஸ் தாஜுதீன் அல்பாக்ஹானி (ரஹ்) அவர்கள் கூறிகிறார்கள்:
ரபீஉல் அவ்வல் மாதம் மனிதர்கள் ஒன்று கூடுவதைப் பற்றியும் அதற்கு நபியின் பிறப்பு என பெயர் சூட்டுவதைப் பற்றியும் முபாரகீன் எனும் ஒரு கூட்டத்தில் கேள்வி அதிகமானது. இதற்கு மார்க்கத்தில் அடிப்படை உண்டா என்பதே கேள்வியாக இருந்தது. இதிலிருந்து தெளிவையையும், குறிப்பாக இதைப் பற்றி விளக்கத்தையும் நாடினார்கள். எனவே அல்லாஹ்வின் துணை கொண்டு ஆரம்பித்து அவர்களுக்குச் சொன்னேன். ‘இந்த மௌலிதுக்கு குர்ஆனிலோ ஸுன்னாவிலோ எவ்வித அடிப்படையையும் நான் காணவில்லை. இஸ்லாமிய உம்மத்தின் முன்மாதிரிகளாகத் திகழ்ந்த அறிஞர் பெருமக்கள் யாரும் இதனைச் செய்ததாகவும் எவ்வித சான்றுகளுக் இல்லை. உண்மையில் இது போலிகளாலும், சில வயிறு வளர்ப்போராலும் உருவாக்கப்பட்ட ஒரு பித்அத்தே.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: சில மனிதர்கள் கிறிஸ்தவா்களுக்கு ஒப்பாகவோ அல்லது நபியவா்களின் மீது கொண்டுள்ள அன்பு மரியாதையின் காரணமாகவோ ஏற்படுத்தியிருக்கின்ற மீலாத்விழாக்களைப் பொருத்தவரையில் ஸலபுகள் எவரும் இதனைச் செய்யவில்லை. உண்மையில் நன்மை தரக்கூடியதாக இருந்திருந்தால் எம்மைவிட அவா்களே இதில் அதிக ஆர்வம் காட்டியிருப்பாா்கள். ஏனெனில் எம்மைவிட அவா்கள் நபியவா்கள் மீது அதிக அன்பும் மரியாதையும் வைத்திருந்தாா்கள். நன்மையின்பால் அதிக நாட்டம் கொண்டிருந்தனா். ஊண்மையிலே நபி (ஸல்) அவர்கள் மீது வைக்கும் மதிப்பும் மரியாதையும் அவர்களைப் பின்பற்றுவதிலும், அவா்களது ஸுன்னாவை உயிர்ப்பித்து, அதை மக்களுக்கு மத்தியில் பரப்புவதற்காக உள்ளம், கரம், நாவு ஆகியவற்றைக் கொண்டு போரடுவதிலுமே தங்கியிருக்கிறது.இதுதான் முன் சென்ற முஹாஜிர்கள், அன்ஸலரிகள், அவா்களைத் துயரந்தவா்கள் அனைவரதும் வழிமுறையாக இருந்தது.
இந்த நவீன பித்அத்தை எதிா்த்து பல புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் ஆரம்பகாலங்களிலும், நவீன காலங்களிலும் எழுதப்பட்டுள்ளன. இவைகள் பித்அத்தாகவும், மற்ற மதங்களுக்கு ஒப்பாகவும் இருப்பதோடு அவ்லியாக்கள், ஷைகுமார்கள், தலைவர்கள், போன்றவர்களின் பிறப்புகளையும் கொண்டாட வழிவகுக்கின்றது. எனவே அதிகமான தீய வாசல்களை இது திறந்து விடுகிறது.

## 2-அல்லாஹ்வை நெருங்குவதிலும், வணக்கங்களிலும் ஏற்படும் பித்அத்கள் :

வணக்கங்களில் ஏற்படுத்தப்பட்ட பித்அத்துகள் இக்காலத்தில் அதிகமாக உள்ளன. இபாபத் எனும் வணக்கங்களில் அடிப்படை குர்ஆன், ஹதிஸ் மாத்திரமே. எனவே வணக்கங்களில் எதுவும் ஆதாரமின்றி கடமை படுத்தப்படாது. எதன்மீது ஆதாரம் முன்வைக்கப்படவில்லையோ அது பித்அத்தாகும்.

من عمل عملاً ليس عليه أمرنا فهو رد" (رواه مسلم)

'எமது வழிகாட்டல் இல்லாத ஒரு செயலை யார் செய்கிறாரோ அது நிராகரிக்கப்பட்டதாகும்'. என இன்னுமொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் : முஸ்லிம்)

தற்போது ஆதாரமில்லாமல் வணக்கங்கள் என்று பரிமாரக் கூடியவைகள் அதிகமாக உள்ளன:

- சப்தத்தை உயர்த்தி தொழுகைக்காக நிய்யத் வைத்தல்: இறைவனுக்காக இவ்வாறு இவ்வாறு தொழுகிறேன் என்று நிய்யத்து வைத்தல். இது பித்அத்தாகும் ஏனெனில் அது நபி (ஸல்) அவர்களின் வழிமுறையில் உள்ளது அல்ல, இறைவனும் இதை பின்வருமாறு கூறுகிறான்:

﴿قُلْ أَتُعَلِّمُونَ ٱللَّهَ بِدِينِكُمْ وَٱللَّهُ يَعْلَمُ مَا فِى ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِى ٱلْأَرْضِ ۚ وَٱللَّهُ بِكُلِّ شَىْءٍ عَلِيمٌ﴾ الحجرات: ١٦

***நீங்கள் உங்கள் மார்க்க (வழிபாடுகள்) பற்றி அல்லாஹ்வுக்கு அறிவிக்(கவிரும்பு ) கிறீர்களா? அல்லாஹ்வோ வானங்களிலுள்ளவற்றையும் நன்கு அறிகிறான்- அன்றியும் அல்லாஹ் எல்லாப் பொருள்களையும் நன்கறிகிறவன் என்று (நபியே) நீர் கூறும்.*** (அல்ஹுஜுராத் : 16) உள்ளம் தான் எண்ணத்தின் இடமாகும். எனவே இது உள்ளத்தினால் ஏற்படும் செயலாகும், நாவின் செயல் அல்ல

- தொழுகைக்குப் பின் கூட்டாக திக்ரு செய்தலும் இந்த பித்அத்களில் அடங்கும். ஏனெனில் தொழுகைக்குப் பின் கூறப்படும் துஆக்களை ஒவ்வொரு மனிதரும் தனியாக ஓதுவதுதான் கடமையாகும்.
- மேலும் குறிப்பிட்ட வைபவங்களில் இறந்தவர்களுக்காக துஆ ஓதிவிட்டு இறுதியில் பாதிஹாவை ஓதுதல்.
- இறந்தவர்களுக்காக வைபவங்களை ஏற்படுத்தி விஷேட உணவுகளை சமைத்து மேலும் ராகங்களோடு ஓதக் கூடியவர்களையும் அழைப்பார்கள். இதை இவர்கள் துக்கம் அனுஷ்டிப்பதாகவும், இறந்தவருக்கு பயனளிக்குமென்றும் எண்ணுகின்றனர். இவைகள் அனைத்தும் பித்ஆத்துகளாகும், அவைகளுக்கு மார்க்கத்தில் எந்த அடிப்படையும் கிடையாது.
- இஸ்ரா மி.ஃ.ராஜ், நபியவர்களின் ஹிஜ்ரத் பயணம் போன்ற மார்க்கத்தின் விஷேட நிகழ்வுகளை வைபவங்களாகக் கொண்டாடுதல். இந்த சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தப்படும் இவ்வாறான வைபவங்களுக்கு மார்க்கத்தில் எந்த அடிப்படையும் கிடையாது.
- ரஜப் மாதத்தைக் குறிப்பட்ட அதில் நோன்பு, தொழுகை போன்ற வணக்கங்களை மேலதிகமாகச் செய்தல். ஏனெனில், மற்றைய மாதங்களை விட இந்த மாதத்தில் தொழுகை, நோன்பு, பலியிடுதல், வேறு வணக்கங்கள் நிறைவேற்றுவதில் எந்தச் சிறப்பும் இல்லை.
- சூபிய்யாக்களின் பல வகையான திக்ருகள் இது போன்ற பித்அத்துக்களிலுள்ளதாகும். இவைகள் அனைத்தும் பித்அத்தாகும், புதிதாக உண்டானவைகளாகும். ஏனெனில் இந்த திக்ருகள் அதன் வார்த்தை, நேரம், அமைப்பு அனைத்திலும் மார்க்கத்திலுள்ள திக்ருகளுக்கு முரணாக உள்ளது.
- ஷ.ஃ.பான் மாத நடுப் பகுதி நாளின் இரவில் தொழுதலும், அந்த நாளில் நோன்பு வைத்தலும், பித்அத்துக்களில் உள்ளதாகும். இந்த நாளில் குறிப்பிட்ட செயல்கள் உள்ளதென நபி (ஸல்) அவர்களைத் தொட்டும் உறுதிப் படுத்தப் படவில்லை.
- கப்ருகள் மீது கட்டுதல், அவைகளை வணங்குமிடமாக எடுத்துக் கொள்ளல், அவைகளைக் கொண்டு (பரகத்) நன்மை வேண்டி தரிசித்தல், இறந்தவர்களிடம் உதவி வேண்டுதல் போன்ற ஷிர்க்கான விடயங்கள் யாவும் பித்அத்தும் வழிகேடுமாகும். நபி

(ஸல்) அவர்கள் தடுத்திருக்க பெண்கள் கப்ருகளை தரிசித்தலும் பித்அத்தாகும். கப்ருகளை தரிசிக்கும் பெண்களையும் அவ்விடங்களை பள்ளிகளாக (வணங்கும்) இடமாக எடுப்பதையும் அங்கு விளக்குகள் ஏற்றுபவர்களையும் நபி (ஸல்) அவர்கள் சபித்தார்கள்.

இறுதியாக, நிச்சயமாக பித்அத்துகள் அனைத்தும் இறை நிராகரிப்பின் வழி காட்டியாகும். அவை அல்லாஹ்வும் அவன் தூதரும் கடமையாக்காத மேலதிக மார்க்கமாகும். பித்அத் பெரும் பாவங்களை விடக் கெட்டதாகும். பெரும் பாவங்களைச் செய்பவனை விட பித்அத்துகளைச் செய்பவனைப் பார்த்து ஷைத்தான் மகிழ்ச்சி அடைகிறான். ஏனெனில் பாவம் செய்பவன் அது பாவமென்று அறிந்து கொண்டு செய்கிறான், பின்பு தவ்பா (மன்னிப்பு) வேண்டுகிறான். ஆனால் பித்அத்தை செய்பவன் இது மார்க்கம் என்றும் இறைவனை நெருங்கச் செய்யும் என்றும் எண்ணுகிறான். எனவே அதிலிருந்து அவன் தௌபாச் செய்யமாட்டான். இன்னும் பித்அத் சுன்னத்தை அடியோடு அழிக்கின்றது. பித்அத் செய்வது சுன்னாவை நிறைவேற்றுவதையும், சுன்னாவை பின்பற்றுபவர்களையும் வெறுக்கச் செய்கிறது. மேலும் பித்அத் இறைவனை விட்டும் தூரமாக்குவதோடும், அவனுடைய கோபத்திற்கும், தண்டனைக்கும் ஆளாக்கின்றது. மேலும் உள்ளங்கள் வழிகெடுவதற்கும் உள்ளங்களில் பிரச்சினை ஏற்படுவதற்கும் காரணமாக உள்ளது.

## எல்லாப் புகழும் இறைவனுக்கே!

بسم الله الرحمن الرحيم

# ஃபிக்ஹு

# 3


தமிழில் : மவ்லவி இம்ரான் (கபூரி)
மீள்பரிசீலனை : எம். அஹ்மத் (அப்பாஸி)


# فقه

(اللغة التاملية)


ترجمة: محمد عمران بن جمال الدين
مراجعة : أحمد بن محمد



المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة
ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH
P.O.BOX 29465 RIYADH 11457 - TEL 4454900 - 4916065
FAX 4970126 - E-Mail:rabwah@www.com

| வாரம் | விடயம் | நேர அளவு |
|---|---|---|
| 1 | ஸகாத் பற்றிய விளக்கம், அதன் சட்டம், பயன்பாடுகள், நிபந்தனைகள் | 45 நிமிடங்கள் |
| 2 | ஸகாத் விதியாகும் பொருட்கள் (1) | 45 நிமிடங்கள் |
| 3 | ஸகாத் விதியாகும் பொருட்கள் (2) | 45 நிமிடங்கள் |
| 4 | ஸகாத் பெறத் தகுதியானவர்கள் | 45 நிமிடங்கள் |
| 5 | நோன்பு பற்றிய விளக்கம், அதன் சட்டம், சிறப்பு, பயன்பாடுகள் | 45 நிமிடங்கள் |
| 6 | நோன்பின் பிரதான கடமைகளும் நிபந்தனைகளும் | 45 நிமிடங்கள் |
| 7 | நோன்பின் ஸுன்னத்துக்களும், வெறுக்கப்பட்டவைகளும், நோன்பை விட அனுமதிக்கப்பட்டவர்களும் | 45 நிமிடங்கள் |
| 8 | மாதாந்தப் பரீட்சை | 45 நிமிடங்கள் |
| 9 | நோன்பை முறிப்பவையும், ஸுன்னத்தான நோன்புகளும் (1) | 45 நிமிடங்கள் |
| 10 | ஸுன்னத்தான நோன்புகளும் (2), நோன்பு நோற்கத் தடுக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட நாட்கள் | 45 நிமிடங்கள் |
| 11 | ஸகாதுல் பித்ர் | 45 நிமிடங்கள் |
| 12 | இஃதிகாஃப் | 45 நிமிடங்கள் |
| 13 | உம்ரா பற்றிய விளக்கம், அதன் சட்டம், சிறப்பு, நிபந்தனைகள் | 45 நிமிடங்கள் |
| 14 | உம்ராவின் பிரதான ருகூன்கள், வாஜிப்கள், நிய்யத் வைக்கும் இடங்கள் | 45 நிமிடங்கள் |
| 15 | இஹ்ராம், அதில் தடுக்கப்பட்டவைகள், அதற்காக வழங்கப்படும் பரிகாகரங்கள், தவாஃ , ஸஈ | 45 நிமிடங்கள் |

# அஸ் ஸகாத்

ஸகாத்தின் விளக்கம்: அது, குறிப்பிட்ட பொருட்களில், குறித்த நேரத்தில், குறிப்பிடப்பட்ட சாராருக்கு கட்டாயம் கொடுக்கப்பட வேண்டிய ஒரு பகுதி.

ஸகாத்தின் நிலை: இஸ்லாத்தின் மூன்றாவது கடமையாகும். இறைவன் அவனது திருமறையில் அதிகமான இடங்களில் தொழுகையுடன் இணைத்துச் சொல்கிறான்.

﴿وَأَقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ وَءَاتُوا۟ ٱلزَّكَوٰةَ وَٱرْكَعُوا۟ مَعَ ٱلرَّٰكِعِينَ﴾ البقرة: ٤٣

“மேலும் நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள் ஸகாத்தையும் நீங்கள் கொடுங்கள், (நீங்கள் ருகூஉ செய்து) குனிபவர்களுடன் நீங்களும் (ருகூஉ செய்து) குனியுங்கள்.” (அல்பகரா : 43)

மேலும் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் :
“இஸ்லாம் ஐந்து அம்சங்களைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அல்லாஹ்வைத் தவிர வேறு வணங்குவதற்கு யாருமில்லை என்றும், முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி சொல்லுதல். (2) தொழுகையை நிலை நாட்டல் (3) ஸகாத்தை கொடுத்து வரல் (4) ஹஜ் கடமையை நிறைவேற்றல் (5) ரமழானில் நோன்பு வைத்தல் என்பனவாகும்.”
அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி).
ஆதாரம் : புஹாரி : 8, முஸ்லிம் : 16.

- இந்த ஸகாத் ஹிஜ்ரி 2ம் ஆண்டு கடமையாக்கப்பட்டது.
- யார் அதை மனமுரண்டாக மறுக்கிறாரோ அதைக் கொண்டு அவர் நிராகரிப்பாளன் ஆகின்றார். அவர் ஸகாத்தை கொடுத்தாலும் அல்லது கொடுக்காவிட்டாலும் சரியே. யார் அதை கடமையென்று ஏற்று அதை கொடுப்பதில் பாராமுகமாகவும் கஞ்சத்தனமாகவும் இருக்கிறாரோ அவர் தீயவனாவார்.
- ஒரு சமுதாயம் அந்த ஸகாத்தை தடுப்பதற்கு ஒன்று சேர்ந்தால் அவர்களுக்கெதிராக போரிட வேண்டும். அவர்களும் சரணடையாமல் திருப்பித் தாக்கினால் காபிர்களாகி விடுவார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள் நபியவர்களின் மரணத்திற்குப் பின் ஸகாத் தர மறுத்த கூட்டத்தாருடன் போர் புரிந்தார்கள்.

## ஸகாத்தின் சிறப்புகள்

1- ஸகாத் மனத் தூய்மையும், செல்வத்தில் தூய்மையும் ஏற்படுத்துகிறது. அது குற்றப்பரிகாரமோ, மாதாந்திரக் கட்டணமோ அல்ல. மாறாக, அது செல்வத்தை அதிகப்படுத்துவதோடு, பரக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

﴿خُذْ مِنْ أَمْوَٰلِهِمْ صَدَقَةً تُطَهِّرُهُمْ وَتُزَكِّيهِم بِهَا﴾ التوبة: ١٠٣

“(நபியே) அவர்களுடைய செல்வங்களிலிருந்து தர்மத்தை (ஸகாத்தை) எடுப்பீராக அதனால் அவர்களை நீர் சுத்தப்படுத்தி அவர்களின் அங்கங்களை தூய்மையாக்கி வைப்பீராக.” (அத்தௌபா : 103)

2- ஸகாத் சமுதாயத்திற்குச் செய்யும் நலவே. மேலும் அது தனிநபர் மற்றும் சமுதாயம் மத்தியில் ஒரு இணைப்பை ஏற்படுத்துகிறது.

3- அது கடமையானவன் மீது ஒரு சோதனையாகும். அதைக் கொடுப்பதின் மூலமாக இறைவனின் பால் அடியான் நெருங்குகிறான்.

## ஸகாத் கடமையாவதற்கான நிபந்தனைகள்

1- முஸ்லிமாக இருத்தல் : ஏனெனில் ஸகாத் தூய்மைப்படுத்தக்கூடியது, இணை வைத்தவன் அசுத்தமானவனாவான்.
2- சுதந்திரமாக இருத்தல் : ஏனெனில் அடிமைக்கு செல்வம் இல்லை. அவனுடைய செல்வங்கள் அனைத்தும் அவனுடைய எஜமானுக்கே.
3- நிஸாப் (குறிப்பிட்ட அளவை) அடைந்திருத்தல் : மார்க்கம் திட்டமிட்டபடி அதன் அளவை அடைந்திருத்தல். இன்னும் அது கடமையாகியவற்றில் கொடுக்கப்பட வேண்டும்.
4- சொத்தில் இஸ்திரத்தன்மையிருத்தல். சேதத்திற்கு உட்படக்கூடியதாகவோ அல்லது பிறருக்கும் பங்குள்ளதாகவோ இருக்கக் கூடாது.
5- வருடம் பூரணமாகுதல் : செல்வம் தன் கரம் வந்ததில் இருந்து ஒரு வருடம் பூரணமாக சென்றிருத்தல்.

## ஸகாத் விதியாகும் பொருட்கள்

1- தங்கம், வெள்ளி, நாணயம்
2- பூமி வெளிப்படுத்தக் கூடியவை (தானியங்கள், பழவகைகள்)
3- வியாபாரப் பொருட்கள்
4- கால் நடைகள்

| பொருள் | அளவு | கடமையான தொகை |
|---|---|---|
| தங்கம், வெள்ளி, நாணயம் :<br>தங்கம்<br>வெள்ளி<br>நாணயம் | <br>85 கிராம்<br>595 கிராம்<br>தங்கம் அல்லது வெள்ளியின் அளவை அடையும் போது | <br>2.5%<br>2.5%<br>2.5% |
| பூமியில் இருந்து வெளிப்படக் கூடியவைகள் :<br>மழை நீரினால் அல்லது ஊற்றுகளால் தண்ணீர் பாய்ச்சினால்<br><br>கிணறுகள் மூலம் தண்ணீர் பாய்ச்சினால் | 618 கிலோ கிராம் 300 ஸாஊ (1 ஸாஊ 4 கைப்பிடியளவு)<br><br>618 கிலோ கிராம் 300 ஸாஊ | 10%<br><br>5% |
| வியாபார பொருட்கள் :<br>லாபம் கருதி விற்பதற்கும், வாங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டவைகள் | தங்கம் அல்லது வெள்ளியின் அளவை அடையும் போது | 2,5 % |
| **கால்நடைகள்:**<br>**(ஒட்டகம், ஆடு, மாடு)**<br>அதன் நிபந்தனைகள் : | | |

| | | |
|---|---|---|
| 1-அதிகமாக பெருக வேண்டுமென நினைத்தல், வேலைக்காக இருப்பது அல்ல.<br>2- மேய்க்கக்கூடியதாக இருக்க வேண்டும். | | |
| ஆடு | 40-120<br>121-200<br>201-அதற்கு மேல்<br>பின் ஒவ்வொரு 100க்கும் | ஒரு ஆடு<br>2 ஆடுகள்<br>3 ஆடுகள்<br>1 ஆடு வீதம் (400- 4ஆடுகள், 500- 5 ஆடுகள்) |
| மாடு | ஒவ்வொரு 30க்கும்<br><br>ஒவ்வொரு 40க்கும் | 1 தபீ: (ஒரு வருடம் பூர்த்தியானது)<br>1 முஸின்னஹ் (2 வருடம் பூர்த்தியானது) |
| ஒட்டகம் | 25-ஐ விட குறைவாக இருந்தால்<br><br>25-35<br><br>36-45<br><br>46-60<br><br>61-75<br><br>76-90<br><br>91-120<br><br>121 மேல் | ஒவ்வொரு 5க்கும் ஒரு ஆடு (5-1, 10-2, 15-3, 20-4)<br><br>1 பின்து மஹால் (ஒரு வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகை)<br>அது முடியாவிட்டால் 1 இப்னு லபூன் (2 வருடம் பூர்த்தியான ஆண்)<br><br>1 பின்து லபூன் (2வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகை)<br><br>1 ஹிக்கா (3வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகை)<br><br>ஜஸ்ஆ (4 வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகை)<br><br>பின்தா லபூன் (2வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகை இரண்டு)<br><br>ஹிக்கதான் (3 வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகை இரண்டு)<br><br>ஒவ்வொரு 40க்கும் பின்து |

| | | |
|---|---|---|
| | | லபூன் (2 வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகை) ஒவவொரு 50க்கும் ஹிக்கா (3வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகை) |

## ஸகாத் பெறத் தகுதி பெற்றவர்கள்

﴿ إِنَّمَا ٱلصَّدَقَٰتُ لِلۡفُقَرَآءِ وَٱلۡمَسَٰكِينِ وَٱلۡعَٰمِلِينَ عَلَيۡهَا وَٱلۡمُؤَلَّفَةِ قُلُوبُهُمۡ وَفِي ٱلرِّقَابِ وَٱلۡغَٰرِمِينَ وَفِي سَبِيلِ ٱللَّهِ وَٱبۡنِ ٱلسَّبِيلِۖ فَرِيضَةٗ مِّنَ ٱللَّهِۗ وَٱللَّهُ عَلِيمٌ حَكِيمٞ ﴾ التوبة: ٦٠

இறைவன் கூறுகிறான்:
“தர்மங்களெல்லாம் வறியவர்களுக்கும், ஏழைகளுக்கும், அதற்காக (வசூல் செய்வது கணக்கிடுவது போன்ற வேலைகளில்) உழைப்பவர்களுக்கும், (புதிதாக இஸ்லாத்தை தழுவியோரில்) எவர்களின் இதயங்கள் அன்பு செலுத்தப்பட வேண்டுமோ அத்தகையோருக்கும், இன்னும் (அடிமைகளின்) பிடரிகளை விடுதலை செய்வதற்கும் கடனில் மூழ்கியவருக்கும் அல்லாஹ்வுடைய பாதையில் செலவழிப்பதிலும், வழிப்போக்கருக்கும் உரித்தானதாகும். (இது) அல்லாஹ் ஏற்படுத்திய கடமையாகும். மேலும் அல்லாஹ் நன்கறிகிறவன், தீர்க்கமானவன். (அத்தௌபா : 60)

1. **அல்ஃபுகரா** : இவர்கள் தன் வாழ்க்கைச் செலவைப் பெற்றுக் கொள்ளாதவர்கள்.

2. **அல்மஸாகீன்** : இவர்கள் தங்கள் வாழ்க்கைச் செலவின் அதிகப் பகுதியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள்.

3. **அல் ஆமிலீன் அலைஹா** : வசூல் செய்வது கணக்கிடுவது போன்ற வேலைகளில் அதற்கென சம்பளம் என்று ஒன்றைப் பெறாதவர்கள்.

4. **அல் முஅல்லபதிகுலுகுபுஹும்** : புதிதாக இஸ்லாத்தை தழுவி ஈமான் உறுதியாக வேண்டுமென எதிர்பார்க்கப்படுபவர்கள்.

5. **அர்ரிகாப்** : எந்த உதவியும் பெறாத உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள். இவ்வாறே முஸ்லிம் சிறைக்கைதியை விடுதலை செய்யவும் பயன் படுத்தலாம்.

**6. அல் காரிமீன்:** கடன் பட்டோர். இவர்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம் :
**பிறருக்காக கடன் பட்டோர்** : இரு தரப்பினருக்கிடையில் சமாதானம் செய்து வைத்தல் போன்ற பொது நலன்களுக்காக கடன் பட்டோர் இப்பிரிவில் அடங்குவர்.

**தனக்காக கடன்பட்டோர்** : வாழ்க்கைச் செலவு, திருமணம் முடித்தல், வீடு கட்டுதல், வைத்தியச் செலவு, போன்றவற்றிற்காக கடன் பட்டோர் இப்பிரிவில் அடங்குவர்.
இவ்விரு பிரிவுகளிலும் கடன் பட்டு அதனை அடைக்க சக்தி இல்லாமல் இருப்பவர்களுக்கு ஸகாத்தில் அக்கடனை செலுத்தப் போதுமான தொகை வழங்கப்படும்.

7. **பீஸபீலில்லாஹ்:** எவ்வித ஊதியமுமின்றி அல்லாஹ்வின் பாதையில் போராடும் போராளிகள்.

8. **இப்னுஸபீல்:** (பணத்தட்டுப்பாட்டால்) தான் மேற்கொண்ட பயணத்தை தொடர முடியாத நிலையில் உள்ள பயணி.

## ஸகாத்தின் பொதுவான குறிப்புகள்.

1. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பிரிவினருக்கும் ஸகாத்தைக் கொடுக்கலாம் அல்லது ஒரு பிரிவினருக்கு மாத்திரமும் கொடுக்கலாம்.
2. வசதி உள்ளவர்களுக்கும், ஹாஷிம், முத்தலிப் கோத்தினருக்கும் கொடுக்கக்கூடாது.
3. தனது செலவுக்கீழ் இல்லாத, ஸகாத் பெறத் தகுதியான தனது உறவினர்களுக்கு கொடுப்பது விரும்பத்தக்கது.
4. தனது செலவுக்குக் கீழாலிருப்பவர்களுக்கு ஸகாத் வழங்குவது கூடாது.
5. ஸகாத் கொடுப்பவரின் ஊர் வெளியூராக இருந்தால் அங்கு ஸகாத்தை அனுப்பி வைப்பதில் எக்குறையும் இல்லை.
6. மனைவி தன் கணவனுக்கு கொடுப்பது ஆகுமானதாகும்.
7. சொந்தமாக அன்றாடம் உபயோகிக்கும் நகைகளுக்கு ஸகாத் கடமையில்லை, ஆனால் அவைகளுக்கு கொடுப்பது சிறந்ததாகும்.
8. கூலிக்காக வைத்திருக்கும் பொருளின் லாபத்திலே ஸகாத் கொடுக்கப்படும். அதன் பெறுமதியில் அல்ல.
9. பூமியில் விளையக் கூடியவைகளுக்கு அதைப் அறுவடை செய்யும் காலம் வந்ததும் ஸகாத் கொடுக்க வேண்டும்.
10. புதையலுக்குரிய ஸகாத் (பழைய காலங்களில் புதைத்து வைக்கப்பட்டவைகள்) இதில் ஐந்தில் ஒரு பகுதியை கொடுக்க வேண்டும்.
11. ஸகாத் கடமையான நேரத்தில் அதை கொடுக்க வேண்டும். (சில நேரம் அதை முற்படுத்தியும் கொடுக்கலாம். அது மையித்தின் பொறுப்பிலிருக்கும் ஒரு கடனைப் போன்றாகும். அதை நிரபராதியாக்குவது கடமையாகும்.)

# ஸகாத்துல் ஃபித்ர்

**விளக்கம்** : பெருநாள் தொழுகைக்கு முன் ஏழைகளுக்காக ஒரு ஸாஉ அளவு கொடுப்பதாகும். நோன்பாளியின் வீணான அல்லது தவறான காரியங்களுக்கு அது ஒரு பரிகாரமாகும்.

**அதன் அளவு**: ஊரில் உணவாக கருதப்படுபவற்றில் இருந்து ஒரு ஸாஉ ஆகும். (ஸாஉ என்பது கிட்டத்தட்ட 3 கிலோ கிராமைக் குறிக்கும்). மேலும் அது நான்கு முத்துகளாகும். (முத்து என்பது நடுத்தர மனிதனின் இரண்டு கைகள் நிறைந்த தானிய அளவாகும்.

இது கடமையாக்கப்பட்ட நோக்கம்: நோன்பில் ஏற்படும் தவறுகள், வீணான பேச்சுகளுக்கு பரிகாரமாகவும், ஏழைகளுக்கு உணவாகவும் பெருநாள் தினத்தில் ஏழைகள் மற்றவர்களை கேட்காமல் இருப்பதற்கும், கடமையான நோன்பு பூரணமாகுவதற்கும், மேலும் இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் உள்ளது.

**யாருக்கு கடமை :** சிறியவர் பெரியவர் என அனைத்து முஸ்லீம்கள் மீதும் அது கடமையாகும். மேலும் தன் பொறுப்பில் இருக்கும் மனைவி, குழந்தைகள், குடும்பத்தினர் அனைவருக்காக வேண்டியும் கொடுப்பதுது கடமையாகும். இன்னும் கற்பில் உள்ள குழந்தைக்கும் கொடுப்பது விரும்பத்தக்கது.

عن عبد الله بن عمر رضي الله عنهما قال: قال فرض رسول الله صلى الله عليه وسلم زكاة الفطر صاع من شعير على العبد والحر والذكر والأنثى والصغير والكبير من المسلمين. (متفق عليه)

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார்கள் : "முஸ்லிம்களில் பெரியவர், சிறியவர், ஆண், பெண், அடிமை, சுதந்திரமானவன் ஆகியோர் அனைவரும் கோதுமை அல்லது அரிசியில் இருந்து ஒரு ஸாஉ கொடுப்பதை நபி (ஸல்) அவர்கள் கடமையாக்கினார்கள்". (ஆதாரம் புஹாரி முஸ்லிம்).

ஸகாதுல் பித்ரை பெறும் தகுதியுடையவர்கள் முஸ்லிம் ஏழைகளாகும்.

அதை கொடுக்கும் நேரம் :

பெருநாள் தொழுகைக்கு முன் அதைக் கொடுக்குமாறு நபி (ஸல்) அவர்கள் ஏவினார்கள். ஒரு நாள் அல்லது இரண்டு நாள் முற்படுத்துவது ஆகுமானதாகும். ஆனால் பெருநாள் தினம் தொழுகைக்கு முன் கொடுப்பது சிறந்ததாகும். பெருநாள்த் தொழுகையை விட பிற்படுத்தலாகாது.

## நோன்பு

**அகராதியில்** நோன்பு என்றால், தவிர்ந்து கொள்ளல்.
**இஸ்லாத்தின் பார்வையில்** : அல்லாஹ்வுக்காக ∴பஜா் உதயமாவதில் இருந்து சூரியன் மறையும் வரை உண்ணல், பருகல், உடலுறவு கொள்ளல் போன்றவற்றில் இருந்து வணக்கம் என்ற அடிப்படையில் தவிர்ந்து கொள்வதாகும்.

**நோன்பு கடமை என்பதற்கான ஆதாரம்**
பின்வரும் வசனத்தினுடாகவே இறைவன் நோன்பைக் கடமையாக்கினான்.

﴿ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ كُتِبَ عَلَيۡكُمُ ٱلصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى ٱلَّذِينَ مِن قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُونَ ﴾ البقرة: ١٨٣

"விசுவாசம் கொண்டோரே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் நோன்பு (நோற்பது) கடமையாக்கபட்டிருக்கிறது. அதனால் நீங்கள் (உள்ளச்சத்தை பெற்று) பயபக்தியுடையவா்களாகலாம்". (அல்பகரா : 183)

﴿ فَمَن شَهِدَ مِنكُمُ ٱلشَّهۡرَ فَلۡيَصُمۡهُ ﴾ البقرة: ١٨٥

உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்கட்டும். (அல்பகரா : 185)

وقال صلى الله عليه وسلم: بني الإسلام على خمس ..... وصوم رمضان

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து விடயங்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. அதில் நோன்பும் ஒன்றாகும்.

**நோன்பின் பிரயோஜனங்கள்:** நோன்பில் ஈமான், சமுதாயம், ஆரோக்கியம் சார்ந்த பல பிரயோஜனங்கள் இருக்கின்றன.

1- உள்ளத்தை தூய்மைப் படுத்தி, கெட்ட குணங்களில் இருந்து அதைப் பாதுகாக்கின்றது.
2- உலகில் பற்றற்ற தன்மையை ஏற்படுத்தி மறுமையில் விருப்பத்தை எற்படுத்துகிறது
3 - வணக்கத்திற்கும், பொறுமைக்கும் வழிகாட்டுகிறது.
4- ஏழைகளுக்கு இரக்கம் காட்டத் தூண்டுகிறது, மேலும் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஐக்கியத்தையும் ஏற்படுத்துகிறது.
5- மேலதிக உணவைக் குறைத்து குடலுக்கு ஓய்வை வழங்குகிறது.
6- இறையச்சத்தைப் பலப்படுத்தும் காரணிகளுள் நோன்பு மிகப் பிரதான மானதாகும்.
7- ஷைத்தானின் ஊசலாட்டங்களைக் கட்டுப்படுத்துகின்றது.
8- வாலிபப் பருவத்தில் திருமணம் செய்ய வசதியற்றவர்களுக்குப் பயனுள்ள பரிகாரமாக இருக்கின்றது.

## நோன்பின் சிறப்புகள்

قال رسول الله صلى الله عليه وسلم: "الصيام جنة"

“நோன்பு ஒரு கேடயம்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் : (புஹாரி, முஸ்லிம்)

عن أبي هريرة رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: "من صام رمضان إيماناً واحتساباً غفر له ما تقدم من ذنبه" (متفق عليه)

யார் ஈமானுடனும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் ரமழானில் நோன்பு வைக்கிறாரோ அவர் முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். ஆதாரம்: (புஹாரி முஸ்லிம்)

عن أبي هريرة رضي الله عنه قال: قال رسول الله صلى الله عليه وسلم: قال الله: كل عمل ابن آدم له إلا الصيام فإنه لي وأنا أجزئ به والصيام جنة وإذا كان يوم صوم أحدكم فلا يرفث ولا يصخب فإن سابه أحد أو قاتله فليقل إني امرؤ صائم. والذي نفس محمد بيده لخلوف فم الصائم أطيب عند الله من ريح المسك، للصائم فرحتان يفرحهما : وإذا لقي ربه فرح بصومه" (متفق عليه)

ஆதமுடைய மகனின் எல்லாச் செயல்களும் அவனுக்குரியதே, நோன்பைத் தவிர. ஏனெனில் நோன்பு எனக்குரியது. அதற்குரிய கூலியை நானே வழங்குவேன். இன்னும் நோன்பு என்பது ஒரு கேடயமாகும். யாராவது திடடினால் அல்லது சண்டை செய்ய முற்பட்டால் நான் ஒரு நோன்பாளி என சொல்லட்டும். முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக, நோன்பாளியின் வாயில் இருந்து வரும் வாடை இறைவனிடத்தில் கஸதூரியை விட வாசமாக இருக்கும். நோன்பாளி மகழ்ச்சியடையும் இரண்டு சந்தர்ப்பங்கள் உள்ளன. ஒன்று அவன் நோன்பு திறக்கும் போது அடையும் மகிழ்ச்சி, மற்றது தனது றப்பை சந்திக்கும் போது மகழ்ச்சியடைகிறான். (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

عن أبي هريرة رضي الله عنه أن رسول الله صلى الله عليه وسلم قال: "إذا جاء رمضان فتحت أبواب الجنة" (متفق عليه)

ரமழான் வந்து விட்டால் சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன என நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.
அறிவிப்பாளர் அபூ ஹுரைரா (ஆதாரம் : புஹாரி)

## ரமழான் நுழைவதை அறிந்து கொள்ளல்

**முதலாவது** : அம்மாதத்தின் பிறையை பார்த்தல் அல்லது பிறை பார்த்தலுக்கு நேர்மையான சாட்சி இருத்தல்

﴿ فَمَن شَهِدَ مِنكُمُ الشَّهْرَ فَلْيَصُمْهُ ﴾ البقرة: ١٨٥

உங்களில் எவர் அம்மாதத்தைப் அடைகிறாரோ அவர் அதில் நோன்பு நோற்று விடவும்.

عن أبي هريرة رضي الله عنه قال: قال النبي صلى الله عليه وسلم: صوموا لرؤيته وأفطروا لرؤيته" (رواه البخاري)

பிறை கண்டு நோன்பு பிடியுங்கள், பிறை கண்டு விடுங்கள் என நபி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள். அறிவிப்பாளர் அபூ ஹுரைரா (ஆதாரம் : புஹாரி)

**இரண்டாவது** : ஷ.்.பான் மாதத்தை 30 நாட்களாக பூரணப்படுத்தல்

عن عبد الله بن عمر رضي الله عنهما: قال النبيﷺ : فإن غم عليكم فاقدروا له" (متفق عليه)

உங்களுக்கு மேகமூட்டம் ஏற்பட்டால் மாதத்தை முப்பதாகக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் அப்துல்லா இப்னு உமர். (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)
மாதத்தின் இறுதி முடிவுக்கு நேர்மையான இரண்டு பேருடைய சாட்சிகள் தேவை

## நோன்பின் வகைகள்

- **கட்டாயமான நோன்பு** : 1- ரமழான் 2- குற்றப்பரிகாரம் 3- நேர்ச்சை (நத்ர்)
- **கட்டாயமல்லாத நோன்புகள்** : 1- சுன்னத்தானவை 2- வெறுக்கப்பட்டவை

3- தடுக்கப்பட்டவை.

## நோன்பின் கடமைகள்

1- நிய்யத் 2- பஜ்ர் தொடக்கம் ம.்.ரிப் வரை உணவு, குடிபானம், உடலுறவு போன்றவற்றிலிருந்து தவிர்ந்திருத்தல்.

## நோன்பின் விதியாவதற்கான நிபந்தனைகள்

1- இஸ்லாம் 2- பருவமடைதல் 3- புத்தி 4- ஊரில் தங்கியிருத்தல்

பெண்களாக இருப்பின் மாதவிடாய், பிரசவ இரத்தம் போன்றவற்றில் இருந்து சுத்தமாக இருத்தல்.

## நோன்பை செல்லுபடியாவதற்கான நிபந்தனைகள்

1-இஸ்லாம் 2- எண்ணம் 3- புத்தி 4- பிரித்தறிதல் 5- மாதவிடாய் நின்று விடல். 6- பிரசவ இரத்தம் நின்று விடல்.

## நோன்பின் சுன்னத்துகள்

1- நோன்பு திறப்பதை அவசரப்படுத்தல்

قال عليه الصلاة والسلام : لا يزال الناس بخير ما عجلوا الفطر" (متفق عليه)

“நோன்பு திறப்பதை வேகப்படுத்தும் காலமெல்லாம் மனிதர்கள் நலவிலே இருப்பார்கள்” என நபி (ஸல்) கூறினார்கள். (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

2- கனிந்த அல்லது சாதாரண பேரித்தம் பழம் அல்லது தண்ணீரைக் கொண்டு நோன்பு திறத்தல்.

لقول أنس: ﷺ كان النبي :ﷺ يفطر قبل أن يصلي على رطبات فإن لم تكن رطبات فتمرات فإن لم تكن تمرات حسا حسوات من ماء" (رواه أحمد وأبو داود والترمذي)

நபி (ஸல்) அவர்கள் கனிந்த பேரித்தம் பழம் கொண்டு நோன்பு திறப்பார்கள். கனிந்த பேரித்தம் பழம் கிடைக்கவில்லையெனில் சாதாரண பேரித்தம் பழங்களை எடுத்துக் கொள்வார்கள். அதுவும் கிடைக்கவில்லையெனில் சில தண்ணீர் முடக்குகளைக் கொண்டு நோன்பு திறப்பார்கள். (ஆதாரம் : அபூதாவூத், திர்மிதீ, அஹ்மத்)

3- ஸஹர் செய்வதை பிற்படுத்துதல்
4- நல்லமல்களை அதிகமாகச் செய்தல்
5- குர்ஆனை ஓதுதல்,
6- உம்ராவை நிறைவேற்றல்.
7- இரவுத் தொழுகையை நிறைவேற்றல்
8- பள்ளியில் இ.்.திகாப் இருத்தல்.
9- தர்மம் மற்றும் இதர நல்ல செயல்களை அதிகப்படுத்துதல்

## நோன்புடன் தவிர்ந்து கொள்ள வேண்டிய வெறுக்கத்தக்க செயல்கள் :

1- வாய்கொப்பளிப்பதிலும் மூக்கினுள் நீர் செலுத்துவதிலும் அளவுக்கதிகம் செய்தல்.
2- இச்சையைத் தூண்டும் காரியங்களில் ஈடுபடாமலிருத்தல்.

## நோன்பை விட அனுமதிக்கப்பட்ட காரணிகள் :

1- பிரயாணம்.
2- நோய்.
3- ஆபத்திலிருப்பவரைக் காப்பாற்றுதல், கர்ப்பந்தரித்தல், பாலூட்டுதல் (இவை இரண்டும் தாய்க்கோ சேய்க்கோ பாதிப்பு ஏற்படுமென்று பயந்தால்).

## நோன்பை முறிப்பவை :

1- உண்ணல், பருகல்.
2- உடலுறவு கொள்ளல்.
3- வேண்டுமென்றே வாந்தியெடுத்தல்.
4- விந்தை வெளிப்படுத்தல்.
5- மாதவிடாய் அல்லது பிரசவ இரத்தம் வெளியாகுதல்.
6- அதிகளவு இரத்தம் வெளியேற்றுதல்.

மேற்கண்டவற்றை பின்வரும் நிலைகளில் செய்தால்தான் நோன்பு முறியும் :
1- அறிந்து கொண்டே செய்தால். (நோன்பின்) சட்டம் பற்றியோ அல்லது நேரம் பற்றியோ அறியாமல் செய்தால் நோன்பு முறியாது.
2- வேண்டுமென்றே செய்தால். மறதியாகச் செய்தால் நோன்பு முறியாது.
3- சுயவிருப்பத்துடன் செய்திருத்தல். பலவந்தப்படுத்தப்பட்டால் நோன்பு முறியாது.

## நோன்பை கழாச் செய்தல்

விட்ட ஒவ்வொரு நோன்பையும் மீண்டும் பிடிப்பது சக்தி வாய்ந்தவர்கள் மீது கடமையாகும். ஆனால் மனைவியுடன் உடலுறவில் ஈடுபட்டவனைத் தவிர. ரமழான் மாதம் பகல் நேரங்களில் மனைவியோடு உடலுறவில் ஈடுபட்டவர் மீது பின்வருவன கடமையாகும்
1-ஒரு அடிமையை உரிமையிடுதல் (அடிமை இல்லையெனில்)
2-தொடர்ந்து இரண்டு மாதம் நோன்பு வைத்தல். இதற்கும் சக்திபெறவில்லையெனில்
3- 60 ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.

## விரும்பத்தக்க நோன்புகள்

1- ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு வைத்தல். இது தாவூத் (அலை) அவர்களின் நோன்பு முறை. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான தொழுகை தாவூத் (அலை) அவர்களின் தொழுகையாகும். அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான நோன்பு தாவூத் (அலை) அவர்களின் நோன்பாகும். அவர்கள் இரவின் பாதியளவு தூங்கிவிட்டு மூன்றிலொரு பகுதி தொழுவார்கள். பின்பு உ‡தமுள்ள நேரத்தில் ஆறிலொரு பகுதி தூங்குவார்கள். மேலும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு வைப்பார்கள். (அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி) அவர்கள், ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்).

2- திங்கள், வியாழன் ஆகிய வாராந்த நாட்களில் நோன்பு வைத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : திங்களும் வியாழனும் அமல்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. என்னுடைய அமல் எடுத்துக்காட்டப்படும் போது நான் நோன்பாளியாக இருக்க விரும்புகிறேன். (அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : திர்மிதி).

3- ஒவ்வொரு மாதத்திலும் 3 நாட்கள். அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : என்னுடைய தோழர் (ஸல்) அவர்கள் எனக்கு மூன்று விடயங்களை வஸிய்யத் செய்தார்கள். நான் உயிர்வாழும் வரை அவற்றை ஒரு போதும் விடப்போவதில்லை : (1) ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள் நோன்பு நோற்றல்.

(2) ளுஹாத் தொழுகை. (3) வித்ருத் தொழாமல் தூங்கக் கூடாது. (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

4- ஷவ்வால் மாத 6 நோன்புகள். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் : யார் ரமழான் மாதம் நோன்பு பிடித்து, அதனைத் தொடர்ந்து ஷவ்வால் மாதம் 6 நாட்கள் நோன்பு நோற்கிறாரோ அவர் காலம் முழுவதும் நோன்பு பிடித்ததற்குச் சமனாவார். (அறிவிப்பவர் : அபூ அய்யூப் அல்அன்ஸாரீ (ரலி), ஆதாரம் : முஸ்லிம்).

5- அரபா∴. நோன்பு (ஹஜ் செய்யாதவர்களுக்கு). நபி (ஸல்) அவர்களிடம் அரபா நோன்பு பற்றிக் கேட்கப்பட்டது. அது சென்ற வருடத்துடையவும், நடப்பு வருடத்துடையவும் பாவங்களுக்குப் பரிகாரமாக அமையும் எனக் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூ கதாதா∴. (ரலி), ஆதாரம் : முஸ்லிம்).

6- ஆஷுரா முஹர்ரம் மாதம் 9வது, 10வது நாட்கள். நபி (ஸல்) அவர்களிடம் ஆஷுரா நோன்பு (முஹர்ரம் 10ம் நாள்) பற்றிக் கேட்கப்பட்டது. அது சென்ற வருடத்துடைய பாவங்களுக்குப் பரிகாரமாக அமையும் எனக் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூ கதாதா∴. (ரலி), ஆதாரம் : முஸ்லிம்). மேலும் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அடுத்த வருடம் நான் (உயிருடன்) இருந்தால் 9ம் நாளும் நோன்பு நோற்பேன். (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (ரலி), ஆதாரம் : முஸ்லிம்).

7- முஹர்ரம் மாதத்தின் பெரும் பகுதி நோன்பு நோற்றல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ரமழானுக்குப் பின் சிறந்த நோன்பு முஹர்ரம் மாதத்தில் நோற்கப்படும் நோன்பாகும். (அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : முஸ்லிம்).

8- ஷ∴பான் மாதத்தில் பெரும் பகுதி நோன்பு நோற்றல். ஆஇஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் : ரமழானைத் தவிர எந்த மாதத்திலும் முழுமையாக நபி (ஸல்) அவர்கள் நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை. ஷ∴பானைத் தவிர (ஸுன்னத்தான நோன்பு) அதிகம் நோற்ற ஒரு மாதத்தையும் நான் காணவில்லை. (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்).

9- துல்ஹஜ் மாதத்தின் முதல் 9 தினங்களில் நோன்பு நோற்றல்.

குறிப்பு : நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு மாதத்திலும் பொதுவாகத் தான் 3 தினங்கள் நோன்பு நோற்றுள்ளார்கள். குறிப்பாக 13, 14, 15ம் நாட்களில் என்று தெளிவான, வலுவான ஆதாரங்களிள் கிடையாது. முாதத்தின் ஆரம்பத்திலும் நோற்பார்கள். இறுதியிலும் நோற்பார்கள். ஆதாரம் இல்லாமலிருக்கும் போது அத்தினங்களைக் குறிப்பாக்கலாகாது.

## நோன்பு வைக்க வெறுக்கப்பட்ட தினங்கள்

1- ஹஜ் கடமையில் இருப்பவர் அரபா∴. தினம் நோன்பு வைத்தல் கூடாது
2- குறிப்பாக வெள்ளிக் கிழமை நாடகளில் நோன்பு வைத்தல்.

3- நோன்பு திறக்காமல் இரண்டு அல்லது மூன்று நாள் தொடரச்சியாக நோன்பு வைத்தல்.
4- சந்தேக நாள் அதாவது ஷ.ஃபான் மாத இறுதி நாள்
5- தொடர்ச்சியாக நோன்பு வைத்தல்
6- கணவன் அனுமதியின்றி மனைவி (ஸுன்னத்தான) நோன்பு வைத்தல்.
7- ரஜப் மாதத்தில் நோன்பு வைத்தல் (சிறப்பு எனும் பெயரில்)

## நோன்பு வைக்க தடுக்கப்பட்ட நாட்கள்

1- இரண்டு பெருநாள் தினங்கள்
2- பெண்களுக்கு மாதவிடாய், பிரசவ இரத்தம் ஏற்படும் நாட்கள்
3- நோன்பு மூலம் உயிர் பிரியும் என நினைப்பவர்கள்.
4- அய்யாமுத் தஷ்ரீக் (துல் ஹஜ் மாத 11,12,13 வது நாட்கள்). ஹஜ்ஜின் போது கிரான் அல்லது தமத்து.ஃ. மூலம் ஹஜ் செய்து, அதற்குப் பரிகாரமாக அறுத்துப் பலியிட வசதியற்றவர்கள் இத்தினங்களில் நோன்பு நோற்கலாம்.

## அல் இ.ஃ.திகாப்.ஃ.

**அகராதியில் இ.ஃ.திகாப.ஃ. என்றால்** : ஓர் இடத்தில் தரித்து நிற்றலாகும்.

**மார்க்க அடிப்படையில்** : அல்லாஹ்வை வழிப்படும் நோக்கில் பள்ளியில் தரித்திருத்தலாகும்.

**இ.ஃ.திகாபின் நோக்கம் :**

1- அல்லாஹ்வை வணங்குவதிலிருந்தும், அவனை நினைப்பதிலிருந்தும் திசைதிருப்பக்கூடிய வேலைப் பளுக்களை விட்டும் உள்ளத்தை வெறுமையாக்குதல்.
2- அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு அவனிடத்திலிருக்கும் கூலிகளை எதிர்பார்த்தல்.

**இ∴திகாபின் வகைகள் :**

1- கடமையானது. இது ஒருவர் இ∴திகாப் இருப்பதாக நேர்ச்சை வைத்தால் அவர் மீது கடமையாகிவிடும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் அல்லாஹ்வுக்கு வழிப்பட நேர்ச்சை வைத்தாரோ அவர் அதனை நிறைவேற்றட்டும். (ஆதாரம் : புஹாரி).
2- ஸுன்னத்தானது. இது ரமழான் மாத்தின் இறுதிப் பத்து நாட்களிலாகும். நபி (ஸல்) அவர்கள் (ரமழானில்) முதல் பத்தில் இ∴திகாப் இருந்தார்கள். பின்பு நடுப்பத்தில் இ∴திகாப் இருந்தார்கள். பின்பு, லைலதுல் கத்ர் இறுதிப் பத்தில் தான் உள்ளது என்பதாக அவர்களிடம் கூறப்பட்டது. (அறிவிப்பவர் : அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி), ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்).

**இ∴திகாபின் கடமைகள் :**

1- இ∴திகாப்∴ இருப்பவர் : அல்லாஹ்வை வணங்குதல் என்ற நோக்கத்துடன் (பள்ளியில்) திரித்திருப்பதை எண்ணிக் கொள்ள வேண்டும்.
2- இ∴திகாப்∴ இருக்குமிடம் : கூட்டுத் தொழுகை நடைபெறும் ஒரு பள்ளியில்தான் இ∴திகாப்∴ இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : “நீங்கள் பள்ளியில் தரித்திருக்கும் நிலையில் (உங்கள் மனைவியராகிய) அவர்களுடன் உறவு கொள்ளாதீர்கள்.” (அல்பகரா : 187). மேலும் கூட்டுத்தொழுகையும் கடமையான ஒன்று. எனவே ஜமாஅத் தொழுகை நடக்காத தக்கியாக்கள், ஸாவியாக்கள் போன்றவற்றில் இ∴திகாப்∴ இருக்கலாகாது. அதுவும் ஜும்ஆப் பள்ளியாக இருந்தால் இன்னும் சிறந்தது.

**இ∴திகாபின் நிபந்தனைகள் :**

1- முஸ்லிமாயிருத்தல்.
2- விபரமுள்ளவராக இருத்தல்.
3- ஜனாபத், மாதவிடாய், பிரசவ இரத்தம் போன்ற குளிப்புக் கடமையாக் கூடிய பெருந் தொடக்குகளை விட்டும் சுத்தமாயிருத்தல்.

**இ∴திகாபை முறிப்பவை :**

1- தேவையின்றி பள்ளியிலிருந்து வெளியே செல்லல். (அவசியத் தேவைகளுக்காகச் செல்லலாம்).
2- உடலுறவு கொள்ளல். அல்லாஹ் கூறுகின்றான் : “நீங்கள் பள்ளியில் தரித்திருக்கும் நிலையில் (உங்கள் மனைவியராகிய) அவர்களுடன் உறவு கொள்ளாதீர்கள்.” (அல்பகரா : 187).
3- இ∴திகாபின் நிபந்தனைகளில் ஒன்று விடுபடல்.

**இ∴திகாப் இருப்பவருக்குச் செய்ய முடியுமானவை :**

அவசியத் தேவைக்காக வெளியே செல்லல். அவை :

1- மலசல கூடங்களுக்குச் செல்லல்.
2- உண்ணல், பருகல்.
3- கடமையான குளிப்பை நிறைவேற்றச் செல்லல்.
4- வுழூச் செய்யச் செல்லல்.
5- ஜும்ஆவுக்குச் செல்லல்.

நோயாளரை விசாரிக்கவோ, ஜனாஸாவில் கலந்து கொள்ளவோ முடியாது. அதனை ஏற்கனவே நிபந்தனையாக நிய்யத்தின் போது கூறியிருந்தால் முடியும்.

இ.்.திகாப்.். இருப்பவர் செய்ய வேண்டிய விரும்பத்தக்கவைகள் :

1- தனித்திருந்து குர்ஆன் ஓதல், ஸிக்ரு செய்தல், தடை செய்யப்படாத நேரங்களில் ஸுன்னத்தான தொழுகைகளில் ஈடுபடல் போன்றவற்றின் மூலம் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முயற்சித்தல்.
2- தனக்குத் தேவையற்ற விடயங்களை விட்டுவிடுதல்.

## லைலதுல் கத்ர்

பொதுவாக இரவுகளில் சிறந்தது லைலதுல் கத்ர் இரவாகும். அதில்தான் அல்குர்ஆன் அருளப்பட்டது. அல்லாஹ் கூறுகின்றான் : நிச்சயமாக இவ்வேதத்தை மகத்துமிக்க இரவில் இறக்கி வைத்தோம். (அல்கத்ர் : 1). அதே அத்தியாயத்தில் இவ்விரவு ஆயிரம் மாதங்களைக் காணச் சிறந்ததெனக் கூறியுள்ளான். நபி (ஸல்) அவர்கள் ரமழானின் முதல் பத்தில் அதனைத் தேடினார்கள். பின்பு நடுப்பத்தில் தேடினார்கள். பின்பு இறுதிப்பத்தில் தேடினார்கள். (புஹாரி 2016). அதனைத் தேடும் முகமாக நபியவர்கள் ரமழானின் இறுதிப்பத்தில் இ.்.திகாப் இருந்தார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள் : யார் இறைநம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் லைலதுல் கத்ரில் நின்று வணங்குகின்றாரோ அவருடைய முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படும். (அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி), ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்).

“அல்லாஹும்ம இன்னக அபு.்.வ்வுன் துஹிப்புல் அப்.்.வ ப.்.பு அன்னீ” என்ற துஆவை லைலதுல் கத்ர் இரவை அடைந்து கொண்டால் ஓதும்படி நபியவர்கள் அன்னை ஆஇஷா (ரலி) அவர்கள் கேட்ட போது கற்றுக் கொடுத்தார்கள். (ஆதாரம் : அஹ்மத், திர்மிதீ, நஸாஈ). அதனை நாமும் ஓதுவது விரும்பத்தக்கது.

## அல் உம்ரா

**அகராதியில்** உம்ரா என்பது தரிசித்தல் என்பதைக் குறிக்கும்.
**மார்க்க அடிப்படையில் :** க.்.பாவை வலம் வருதல், ஸ.்.பா, மர்வா ஓட்டம், தலை முடியை சிறைத்தல் போன்றவைகளை வணக்கம் என்ற ரீதியில் நிறைவேற்றுதல்.
**உம்ராவின் சட்டம்:** வாழ்வில் ஒரு முறையாவது நிறைவேற்றுவது கடமையாகும்.
**எப்போது கடமையாகும்:** உடனே நிறைவேற்றுவது கடமையாகும்.

حديث عائشة رضي الله عنها: حيث قالت للنبي ﷺ هل على النساء جهاد ؟ قال نعم عليهن ولا قتال فيه الحج والعمرة " (ابن ماجه)

பெண்கள் மீது ஜிஹாத் உண்டா என ஆயிஷா (ரலி) நபி (ஸல்) அவர்களைக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் "ஆம் என்றார்கள். அவர்கள் மீது ஜிஹாத் உண்டு ஆனால் போர் (சண்டை) கிடையாது. அதுவே ஹஜ்ஜும் உம்ராவும் என்றார்கள்". (ஆதாரம் : இப்னு மாஜ.ஃ., அஹ்மத்)

## உம்ராவின் நிபந்தனைகள்

1- முஸ்லிமாக இருத்தல்
2- சுதந்திரப் பிரஜையாக இருத்தல். (அடிமையின் உம்ரா ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் அவன் மீது கடமையில்லை.)
3- பருவத்தை அடைந்திருத்தல் (சிறுவனிடம் இருந்து ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் அவன் மீது கடமையில்லை).
4- புத்தி உள்ளவராக இருத்தல்.
5- சக்தி உள்ளவராக இருத்தல் (உடம்பு, பொருளாதாரம், தன் தேவையை பூரணப்படுத்தும் உணவு அனைத்தையும் குறிக்கும்).
6- பெண்ணாக இருப்பின் மஹ்ரம் இருத்தல் (கணவன் அல்லது திருமணம் முடிக்க தடையானவர்கள்).

## உம்ராவின் முக்கிய கடமைகள் (ருகுன்)

1. நிய்யத் வைத்தல் 2. தவாப்.ஃ. செய்தல் 3. ஸபா, மர்வாக்கிடையில் ஓட்டம் ஓடுதல்.
இவைகளில் ஒன்றை விட்டால் அதை மீண்டும் செய்யும் வரை உம்ரா நிறைவேறாது.

## உம்ராவின் வாஜிபுகள் (முக்கியமானவைகள்)

1. மீகாதில் இஹ்ராம் அணிதல் 2.முடியை சிறைத்தல் அல்லது மொட்டை அடித்தல்.

## எல்லைகள் (மீகாத்)

எல்லை என்பது காலங்களும், இடங்களும் குறிப்பிடப்பட்டவையாகும். அவை இரண்டு வகையாகும்.
**காலம்**: இதைக் கொண்டு நாடுவது ஹஜ்ஜுடைய மாதங்களாகும். ஷவ்வால், துல்க.ஃ.தா, துல் ஹஜ்ஜு.

**இடங்கள்** : அவைகள் ஐந்தாகும்
1. **துல் ஹுலைபா** : இது மதீனாவிற்குச் சமீமமாக உள்ள ஒரு கிராமமாகும். தற்போது இதற்கு அப்யார் அலி எனக் கூறப்படுகிறது. இது மதீனா வாசிகளுக்குரிய எல்லையாகும்.
2. **அல் ஜுஹ்பா** : இது ராபி.ஃ.க் என்னும் ஊருக்கு சமீபமாக உள்ள ஒரு சிறிய ஊராகும். மிஸ்ர் மற்றும் ஸிரியா மக்களின் எல்லையாகும்.
3. **யலம்லம்** : தற்போது இதை அஸ்ச.ஃ.தியா என்று அழைக்கிறார்கள். இது யமன் வாசிகளின் எல்லையாகும்.

4. **கர்னுல் மனாஸில்** : (இதை சைலுல் கபீர் என்றழைக்கிறார்கள்) இது நஜ்த் (ரியாத்) வாசிகளின் எல்லையாகும்.

5. **தாதுல் இர்க்** : இது இராக் வாசிகளின் எல்லையாகும்.

**அல் ஹில் :** இது மக்காவாசிகளின் எல்லையாகும்.
ஹஜ் அல்லது உம்ரா செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு யார் இந்த எல்லைகள் வழியாக செல்கிறார்களோ அவர்கள் இந்த இடங்களில் இஹ்ராம் அணிவது கடமையாகும். இந்த எல்லைகளுக்கு உள்ளே உள்ளவர்கள் அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து இஹ்ராம் அணிய வேண்டும். (ஆதாரம் : புஹாரி 1524)

## அல் இஹ்ராம்

விளக்கம் : வணக்கத்தில் நுழையும் எண்ணமாகும்.

**இஹ்ராமுக்கு முன்னர் சுன்னத்தானவை**

1- குளித்தல்.
2- சுத்தம் செய்தல் : நீக்க வேண்டிய முடிகளை நீக்குதல் (மா்மஸ்தானம், கமக்கட்டு, மீசைமுடி, நகங்கள்).
3- நறுமணம் பூசுதல் (உடையில் அல்லாமல் உடம்பில் பூச வேண்டும்.)
4- தைக்கப்பட்ட ஆடைகளை தவிர்ந்து கொள்ளல்.(அவ்ரத்தை வெளிப்படுத்தாமல் இருக்க வேண்டும்) இது ஆண்களுக்கு மாத்திரம் குறிப்பானது.

### நிய்யத்தின் நிபந்தனை

இஹ்ராம் துணியை அணிவது தான் இஹ்ராமென அதிகமானவர்கள் நினைக்கிறார்கள். இது தவறானதாகும். இஹ்ராம் என்பது (நிய்யத்) எண்ணமாகும்.

### இஹ்ராம் அணிந்த பின் தவிர்ந்து கொள்ள வேண்டியவைகள்

பொதுவாக ஆண் பெண் மீது உள்ள தடைகள்:

1. தலைமுடி மற்றும் உடம்பின் ஏனைய பாகங்களிலுள்ள முடிகளை நீக்குதல், நகங்களை வெட்டுதல்.

2. மணம் பூசுதல்.
3. திருமணம் நடத்தல், திருமணம் பேசுதல் (இதற்கு குற்றப் பரிகாரம் இல்லை)
4. மனைவியை இச்சையோடு கட்டியணைத்தல் (இந்திரியம் வெளியானால் ஒரு மாட்டை குர்பான் கொடுக்க வேண்டும்)
5. இந்திரியம் வெளிப்படாவிட்டால் : அந்த தவறுக்காக குற்றப்பரிகாரம் கொடுக்க வேண்டும்.
6. உடலுறவு கொள்ளல் (பாரிய தெண்டம்.)
7. பிராணிகளை வேட்டையாடுதல் : (அதற்கு கூலியாக குற்றப்பரிகாரம் கொடுக்க வேண்டும்.

## ஆண்கள் தவிர்ந்து கொள்ள வேண்டியவைகள்

1-தலையை மறைத்தல்
2-தைத்த ஆடைகளை அணிதல்

## பெண்கள் தவிர்ந்து கொள்ள வேண்டியவைகள்

- கை உறைகள், முகம் மூடிகளை அணிதல்.

## குறிப்புகள்

- எல்லைகளை அடையுமுன் இஹ்ராம் துணியை அணிந்து கொள்ளலாம். ஆயினும் இஹ்ராமுடைய நிய்யத் குறித்த எல்லைகளில் வைத்து இடம் பெற வேண்டும்.
- இஹ்ராம் துணியை மாற்றிக் கொள்ளலாம். மேலும் அதைக் கழுவிக் கொள்ளலாம்.
- நீர் தொடக்குகளை விட்டும் தூய்மையான நிலையில் இல்லையானாலும் இஹ்ராமுடைய நிய்யத்தை வைத்துக் கொள்ள முடியும். இருப்பினும் தூய்மையான நிலையில் இஹ்ராம் நிய்யத்தை வைத்துக் கொள்வதே சிறப்பானது.

**தல்பியா :**

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ ، لَبَّيْكَ لا شَرِيْكَ لَكَ لَبَّيْكَ ، إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكْ ، لا شَرِيْكَ لَكَ

**பொருள் :**
உனக்கு பதிலளித்து விட்டேன், இறவைா உனக்கு பதிலளித்து விட்டேன். உனக்கு பதிலளித்து விட்டேன், உனக்கு நிகராக யாருமில்லை உனக்கு பதிலளித்து விட்டேன். நிச்சயமாக புகழ், அருட்கொடை, ஆட்சி அனைத்தும் உனக்கே உரியது. உனக்கு நிகராக யாருமில்லை.

நோக்கம் : தல்பியாவின் பொருளைப் பார்த்தவுடன் இதன் நோக்கம் என்னவென்று புரியலாம். இறைவனை ஒருமைப்படுத்துவதும் , நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் கஃபாவைப் புணர்நிர்மானம் செய்து முடித்ததும் அல்லாஹ்வின் ஏவலின் பிரகாரம் விடுத்த அழைப்பிற்குப் பதிலளிப்பதுமே இந்த தல்பியாவின் நோக்கமாகும்.
ஆரம்பத்தில் ஹஜ், உம்ரா செய்யும் போது மக்கா குரைஷிகள் கஃபாவிலும் ஸபா, மர்வாவிலும் பல சிலைகளை வைத்துக் கொண்டே தமது வணக்கங்களை செலுத்தி வந்தனர். அதனை இல்லாதொழிக்கும் முகமாகவே இத்தல்பியா வாசகம் அமைந்துள்ளது.

# தவா.்.ப்

ஹஜ், உம்ரா ஆகிய வணக்கங்களில் பிரதான கடமைகளுள் தாவபும் ஒன்று. புனித க.்.பாவை ஏழு தடவைகள் வலம் வருவதையே தவாப் என்கிறோம்.

**தவாபின் வகைகள் :**

**கடமையான தவாப்கள் :**
1- ஹஜ்ஜுடைய தவாப்.
2- உம்ராவுடைய தவாப்.
3- நேர்ச்சையுடைய தவாப்.

**வாஜிபான தவாப் :**
1- தவாபுல் வதா.். (ஹஜ் முடிந்து இறுதியாகச் செய்யும் தவாப்).

**ஸுன்னத்தான தவாப் :**
1- தவாபுல் குதூம். (க.்.பாவைச் சென்றடைந்தவுடன் ஒரு ஹாஜி செய்யும் தவாப்).
2- இதர தவாப்கள்.

**தவா.்.ப் செய்யும் முறை :**

1- சிறு தொடக்கு, பெரு தொடக்கிலிருந்து சுத்தமாகி வுழூச் செய்து கொள்ள வேண்டும்.
2- நிய்யத் வைத்ததிலிருந்து சொல்லிக் கொண்டிருந்த தல்பியாவை தவா.்.ப் ஆரம்பிக்கும் போது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

3- க.்.பாவை நெருங்கியதும் அது எமது இடது புறத்திலிருக்குமாறு நாம் திரும்பி நின்று ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிட முடியுமென்றால் முத்தமிட வேண்டும். (அடுத்தவர்களைத் துன்புறுத்தலாகாது). அவ்வாறு முடியாவிட்டால் கையினால் தொட்டு அக்கையை முத்தமிட வேண்டும். அதுவும் இல்லையெனில் கையில் தடி இருந்தால் அதனால் தொட்டு அத்தடியை முத்தமிட வேண்டும். மேற்கூறிய அனைத்தும் இயலாத பட்சத்தில் கையினால் சைகை மாத்திரம் செய்து பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று கூறி தவாபை ஆரம்பிக்க வேண்டும். கையினால் சைகை செய்தால் அக்கையை முத்தமிடுவது ஸுன்னாவுக்கு மாற்றமானது என்பதை அவதானித்துக் கொள்ள வேண்டும்.

4- எமது இடதுபுறம் க.்.பாவிருக்க நாம் அவ்வாறே முன்னால் நகர்ந்து செல்ல வேண்டும். எமக்குத் தேவையான பிரார்த்தனைகளை நாம் கேட்டுக் கொள்ளலாம். ருக்னுல் யமானீ என்ற இடம் வந்ததும் "ரப்பனா ஆதினா ்.பித்துன்யா ஹஸனதன் வ.்.பில் ஆ.்.கிரதி ஹஸனதன் வகினா அதாபன் நார்" என்ற துஆவை ஓதிக் கொள்ள வேண்டும். இதுவல்லாமல் தவாபுக்கென்று வேறு பிரத்தியோக துஆக்கள் ஆதார பூர்வமாக இல்லை.

5- ஹஜருல் அஸ்லத்திலிருந்து ஆரம்பித்து மீண்டும் அதே இடத்தை அடையும் போது ஒரு சுற்றாகக் கணிக்கப்படும். இவ்வாறு ஏழு சுற்றுக்கள் முடிந்தால் அது ஒரு தவாபாகக் கணிக்கப்படும்.

6- ஏனைய சுற்றுக்களிலும் மேற்சொன்ன ஒழுங்கு முறைப்படி ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிட முயற்சிக்க வேண்டும். முதல் சுற்றைத் தவிர ஏனைய சுற்றுக்களில் ஆரம்பிக்கும் போது அல்லாஹு அக்பர் என்று மாத்திரம் கூறினால் போதுமானது. பிஸ்மில்லாஹ் என்பது ஒவ்வொரு சுற்றிலும் கூற வேண்டிய அவசியமில்லை.

7- ஏழு சுற்றுக்களும் முடிந்தால் தவாபுடைய ஸுன்னத்தான இரண்டு ரக்அத்கள் தொழு வேண்டும். முதல் ரக்அத்தில் குல் யா அய்யுஹல் காபிரூன் அத்தியாயமும் இரண்டாவது ரக்அத்தில் குல்ஹுவல்லாஹு அஹத் என்ற அத்தியாயமும் ஓதப் பட வேண்டும்.

## ஸஈ

**ஸஈ என்பது** மக்காவிலுள்ள ஸபா, மர்வா ஆகிய இரு மலையடிவாரங்களுக்கு இடையில் வேகமாக நடப்பதைக் குறிக்கின்றது.

**அதன் சட்டம் :** ஹஜ் மற்றும் உம்ராவின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாகும். அதனை விட்டால் அவ்வணக்கம் செல்லுபடியாக மாட்டாது.

**நோக்கம் :** இப்ராஹீம் (அலை) அவர்களின் புதல்வர் இஸ்மாஈல் (அலை) அவர்கள் பச்சிளம் குழந்தையாக இருக்கும் போது அவர்களையும் தாயார் ஹாஜர் அவர்களையும் மக்காவில் தனிமையில் விட்டுவிட்டு தந்தை இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் பலஸ்தீன் சென்றார்கள். அவ்வேளை தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக அவ்வம்மையார் இவ்விரு மலைகளுக்கும் ஏறி தண்ணீர் கிடைக்கின்றதா என்று மாறி மாறி போய்க் கொண்டிருந்தார்கள். அதனை நினைவு கூறும் முகமாகவே இவ்வணக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஸஈ செய்யும் முறை :

1- தவாபைப் போன்று ஸஈக்கு வுழு அவசியமில்லை.

2- தவாப் தனியாகச் செய்வது போன்று ஸஈ செய்வதற்கு ஆதாரம் கிடையாது. ஹஜ், உம்ரா வணக்கங்களுடன் தொடர்பான ஸஈ மாத்திரமே உள்ளது.

3- ஏதாவதொரு தவாபைத் தொடர்ந்துதான் ஸஈ இடம்பெற வேண்டும்.

4- சிலர் நினைப்பதைப் போன்று மலைக்கு ஏறத் தேவையில்லை. மலையடிவாரத்தில் நின்று ஆரம்பிக்கலாம்.

5- தவாப் முடிந்ததன் பின்னர் ஸபா மலையடிவாரத்துக்குச் சென்று க.்.பாவை முன்னோக்கி

﴿ إِنَّ ٱلصَّفَا وَٱلْمَرْوَةَ مِن شَعَآئِرِ ٱللَّهِ فَمَنْ حَجَّ ٱلْبَيْتَ أَوِ ٱعْتَمَرَ فَلَا جُنَاحَ عَلَيْهِ أَن يَطَّوَّفَ بِهِمَا وَمَن تَطَوَّعَ خَيْرًا فَإِنَّ ٱللَّهَ شَاكِرٌ عَلِيمٌ ﴾ البقرة: ١٥٨

என்ற வசனத்தை ஓத வேண்டும்.

**பொருள் :**

நிச்சயமாக "ஸ.்.பா", "மர்வா" (என்னும் மலைகள்) அல்லாஹ்வின் அடையாளங்களில் நின்றும் உள்ளன. எனவே எவர் (க.்.பா என்னும்) அவ்வீட்டை ஹஜ் அல்லது உம்ரா செய்கிறார்களோ அவர்கள் அவ்விரு மலைகளையும் சுற்றி வருதல் குற்றமல்ல. இன்னும் எவனொருவன் உபரியாக நற்கருமங்கள் செய்கிறானோ, (அவனுக்கு) நிச்சயமாக அல்லாஹ் நன்றியறிதல் காண்பிப்பவனாகவும், (அவனுடைய நற்செயல்களை) நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான். (பகரா : 158)

6- பின்னர் பின்வரும் ஸிக்ரை ஓத வேண்டும் :

«لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ، أَنْجَزَ وَعْدَهُ، وَنَصَرَ عَبْدَهُ، وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ»

அதன் பின் தனக்குத் தேவையான பிரார்த்தனைகளைக் கேட்க வேண்டும்.

7- பின்னர் மர்வா நோக்கிச் செல்ல வேண்டும். இடையில் ஓதவென பிரத்தியேக துஆக்கள் எதுவும் கிடையாது. அல்குர்ஆன் ஓதுவதிலோ தேவையான பிரார்த்தனைகளைக் கேட்பதிலோ ஈடுபடலாம்.

8- இரு பச்சை மின்விளக்குகளுக்கு இடையில் சற்று ஓட வேண்டும். முடியாதவர்கள் வேகமாக நடக்க வேண்டும்.

9- இவ்வாறு நடந்து சென்று மர்வாவை அடைந்தால் ஸஈயில் முதலாவது சுற்றை முடித்து விட்டார். மர்வாவிலும் மேற்கண்ட குர்ஆன் வசனத்தைத் தவிர ஸிக்ருகளை ஓதி விட்டுத் தனக்குத் தேவையான பிரார்த்தனைகளைக் கேட்க வேண்டும். அதன்பின் மீண்டும் ஸபா நோக்கிச் செல்ல வேண்டும். அப்போதும் இரு பச்சை மின்விளக்குகளுக்கு இடையில் சற்று ஓட வேண்டும். முடியாதவர்கள் வேகமாக நடக்க வேண்டும்.

10- இவ்வாறு 7 சுற்றுக்கள் செய்ய வேண்டும். ஸபாவிலிருந்து மர்வா வரை ஒன்றாகவும், மர்வா முதல் ஸபா வரை இன்னொன்றாகவும் கணிக்கப்படும். இதனடிப்படையில் ஸபாவிலிருந்து ஆரம்பிக்கும் ஸஈயின் ஏழாவது சுற்று மர்வாவில் சென்று முடிவடைகின்றது.

11- ஒவ்வொரு சுற்றிலும் இரு மலையடிவாரங்களிலும் தேவையான பிரார்த்தனைகளைக் கேடக வேண்டும்.

இறைவனுக்கே எல்லாப் புகழும்

بسم الله الرحمن الرحيم

# நபிகளாரின் வரலாறு

தமிழில் : மவ்லவி இம்ரான் (கபூரி)
மீள்பரிசீலனை : எம். அஹ்மத் (அப்பாஸி)

# سيـرة الرسول صلى الله عليه وسلم

ترجمة: محمد عمران بن جمال الدين

مراجعة : أحمد بن محمد

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة
ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH
P.O.BOX 29465 RIYADH 11457 - TEL 4454900 - 4916065
FAX 4970126 - E-Mail:rabwah@www.com

| வாரம் | விடயம் | நேர அளவு |
|---|---|---|
| 1 | நபியவர்களின் வழித்தோன்றல் - சீர்திருத்த ஒப்பந்தம் | 45 நிமிடங்கள் |
| 2 | கடின வாழ்கை – கதீஜா (ரலி)யைத் திருமணம் செய்தல் - க.்.பா புணர்நிர்மானம் | 45 நிமிடங்கள் |
| 3 | உண்மையாளர், நம்பிக்கையாளர் - நபித்துவக் காலம் நெருங்குதல் | 45 நிமிடங்கள் |
| 4 | அழைப்புப் பணியின் ஆரம்பம் - நபித்துவத்தின் நோக்கங்கள் | 45 நிமிடங்கள் |
| 5 | குடுமபத்தில் அழைப்புணி செய்தல் - ஸபா மலைக் குன்றில் உபதேசம் செய்தல் | 45 நிமிடங்கள் |
| 6 | நபி (ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட அநீதிகள் | 45 நிமிடங்கள் |
| 7 | துன்புறுத்தக் குழுவமைத்தல் - ஹபஷாவுக்கான முதல் ஹிஜ்ரத் | 45 நிமிடங்கள் |
| 8 | மாதாந்தப் பரீட்சை | 45 நிமிடங்கள் |
| 9 | அபூதாலிபை எச்சரித்தல் - ஹம்ஸா (ரலி), உமர் (ரலி) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றல் | 45 நிமிடங்கள் |
| 10 | பள்ளத்தாக்கில் முற்றுகையிடல் - அபூ தாலிப் மற்றும் கதீஜா (ரலி) ஆகியோரின் மரணம் | 45 நிமிடங்கள் |
| 11 | இஸ்ராவும் மி.்.ராஜும் | 45 நிமிடங்கள் |
| 12 | முதலாம் அகபா உடன்படிக்கை | 45 நிமிடங்கள் |
| 13 | இரண்டாம் அகபா உடன்படிக்கை | 45 நிமிடங்கள் |
| 14 | ஹிஜ்ரத் பயணம் (1) | 45 நிமிடங்கள் |
| 15 | ஹிஜ்ரத் பயணம் (2) | 45 நிமிடங்கள் |

# நபி (ஸல்) அவர்களின் அழகிய வரலாறு

## நபிகளாரின் வழித் தோன்றல்

அவர் முஹம்மத் பின் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிப் பின் ஹாஷிம் பின் அப்து மனாப்.ஃ. பின் குஸைய் பின் கிலாப் பின் முர்ரஹ் பின் க.ஃ.ப் பின் லுஅய் பின் காலிப் பின் ஃ.பிஹ்ர் (குறைஷ்) பின் மாலிக் பின் அன்நள்ர் பின் கினானா பின் ஹுஸைமா பின் முத்ரிகா பின் இல்யாஸ் பின் முழர் பின் நிஸார் பின் முஇத் பின் அத்னான். அத்னான் இப்ராஹீம் நபியின் மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களின் சந்ததியில் வந்தவராவார் . அதன் வழியே நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள்.

## நபி (ஸல்) அவர்களின் தாயாரின் வழித்தோன்றல்

நபி (ஸல்) அவர்களின் தாயார் ஆமினா பனூ ஸஹ்ரா கோத்திரத் தலைவர் வஹ்ப் என்பவரின் மகளாவார். வஹ்ப் என்பவரின் வழித்தோன்றல் குறைஷ் என்று புனைப்பெயர் கொண்டு அழைக்கப்பட்ட பிஹ்ர் என்பவரை சென்றடைகிறது.
இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் அரேபியர்களின் சிறந்த கோத்திரத்தில், குலத்தில், குடும்பத்தில் தாயின் வழியாகவும் தந்தை வழியாகவும் சிறந்து விளங்குகிறார்கள்.

## நபி (ஸல்) அவர்களின் பிறப்பும் வளர்ச்சியும்

எமது நபி (ஸல்) அவர்கள் ஆனைவருடம் அதாவது (ஆமுல் பீல்) ரபீஉல் அவ்வல் மாதம் திங்கட்கிழமை சூரிய உதயத்திற்கு முன் சுபுஹ் வேளையில் புனித மக்கா நகரில் பிறந்தார்கள். அவர்களின் தந்தை அவரின் பிறப்புக்கு முன்னரே இறந்து விட்டார்கள். அந்தக் காலத்தில் நகரத்தின் பிரமுகர்களும் செல்வந்தர்களும் தம் குழந்தைகள் பிறந்து எட்டு நாட்களில் பாலூட்டவும், அவர்களை வளர்த்திடவும் கிராமங்களிலும், புறநகரங்களிலும் இருந்த செவிலித் தாய்களிடம் அனுப்பி வந்தனர். அவ்விடங்களிலுள்ள திறந்தவெளிகளின் தூய்மையான காற்றையும், சீதோசனமான காலநிலையையும் பெறுவதற்காக இவ்வாறு அனுப்பி வைத்தனர். இதனடிப்படையில் நபி (ஸல்) அவர்கள் ஹலீமா அஸ்ஸ.ஃ.திய்யா என்ற பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். இதன் பின் நபி (ஸல்) அவர்களை அப்பெண் ஆறு மாதத்திற்கு ஒரு முறை தம் தாயையும் தம் குடும்பத்தையும் பார்ப்பதற்காக அழைத்து வருவார்கள். இவ்வாறு இரண்டு வருடங்கள் பூர்த்தியானதும் பால் குடி நிறுத்தப்பட்ட பின் தம் தாயாரிடம் ஒப்படைப்பதற்காக ஹலீமா நபி (ஸல்) அவர்களை அழைத்து வந்தார்கள். மக்காவில் நிலவும் காலநிலையை விட கிராமப்புற சூழல் குழந்தைக்கு மிகவும் பொருத்தமானது எனக் கருதி அன்னை ஆமினா குழந்தையை மீண்டும் ஹலீமாவிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தனது நான்காம் வயதை அடைந்ததும் தாயார் ஆமினா தன் பராமரிப்பின் கீழ் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் ஆறு வயதை அடைந்த போது தம் தாயை இழந்தார்கள். அதன் பிறகு அவரின் பாட்டனார் அப்துல் முத்தலிப் பொறுப்பேற்றார்கள். நபி (ஸல்) அவர்கள் எட்டு வயதையும் பத்து நாட்களையும் எட்டிய போது பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்கள் மரணித்து விட்டார்கள். அதன் பிறகு அவர்களின் பெரிய தந்தையான அபூ தாலிப் அவர்கள் பொறுப்பேற்றார்கள். அபூ தாலிப் அவர்கள் நபி (ஸல்) அவர்களின் தந்தையின் நெருங்கிய சகோதரனாவார்.

## ஹில்∴புல் ∴புழூல் (சீர்திருத்தச் ஒப்பந்தம்)

அல் ∴பிஜார் யுத்தத்தின் முடிவையடுத்து சீர்த்திருத்த சங்கம் ஒன்று துல் க∴தா மாதம் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு குரைஷி கோத்திரங்கள் அனைத்தையும் அழைக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் அப்துல்லாஹ் பின் ஜத்ஆன் அத்தமீமி என்பவரின் வீட்டில் அவரின் வயதிற்கும் மதிப்பிற்கும் இடம் கொடுத்து ஒன்று கூடினார்கள். அதைத் தொடர்ந்து மக்காவில் உள்ள ஒருவருக்கோ அல்லது வேறு யாருக்கோ அநியாயமிழைக்கப்பட்டால் அவர் சார்பாக உதவி புரிவதெனவும், அநியாயமிழைக்கப்பட்டவரின் உரிமையை திரும்ப பெற்றுக் கொடுக்கும் வரை அவருக்குச் சார்பாக இருக்க வேண்டுமெனவும் ஒப்பந்தங்கள் எடுக்கப்பட்டன. இந்த ஒப்பந்தத்தில் நபி (ஸல்) அவர்களும் கலந்து கொண்டார்கள். அதன் பிறகு அவர்களை இறைவன் தூதுத்துவத்தைக் கொண்டு சங்கைப் படுத்திய போது பின்வருமாறு கூறினார்கள்: ""அப்துல்லாஹ் பின் ஜத்ஆன் என்பவரின் வீட்டில் சிறந்த ஒப்பந்தம் ஒன்றில் கலந்து கொண்டேன். இந்த ஒப்பந்தத்திற்குப் பகரமாக எனக்குச் சிவப்பு ஒட்டகங்கள் தரப்பட்டாலும் கூட நான் வாங்கிக் கொள்ள மாட்டேன். இன்றுகூட அத்தகைய ஓர் ஒப்பந்தத்திற்காக என்னை எவரேனும் அழைத்தால், நான் அதற்கு உடன்படத் தயாராக உள்ளேன்"". என்று கூறினார்கள். (ஆதாரம் : பைஹகீ)

## கடின வாழ்க்கை

வாலிப பருவத்தின் ஆரம்ப கட்டத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு சொந்தமான குறிப்பானதொரு தொழில் இருக்கவில்லை. அதிகமான அறிவிப்புகளின் படி அவர்கள் மக்காவில் பனூ ஸ∴த் கோத்திரத்தாருடைய ஆடுகளை சொற்பத் தொகைக்கு மேய்ப்பாளராக பணி புரிந்துள்ளார்கள். அத்தோடு அண்ணலாரின் 25 வது வயதில் அன்னை ஹதீஜா (ரலி) அவர்களின் பொருட்களை எடுத்துக் கொண்டு ஷாம் (ஸிரியாவும் அதைச் சூழ உள்ள பகுதிகளும்) தேசத்திற்கு வியாபாரியாகச் சென்றார்கள்.

## அன்னை ஹதீஜா(ரலி) அவர்களைத் திருமணம் செய்தல்

நபி (ஸல்) அவர்கள் வியாபாரத்தை முடித்து விட்டு மக்கா திரும்பிய போது அன்னை கதீஜா முன்னர் எப்போதும் காணாத லாபத்தை கண்டார்கள். மேலும் மய்ஸரா என்ற அன்னை கதீஜாவின் பணியாளர் நபி (ஸல்) அவர்களிடம் கண்ட நற்குணங்கள், நல்ல பண்புகள், நம்பிக்கை, நாணயம் போன்ற அனைத்துப் பண்புகளையும் அன்னை கதீஜாவிடம் எடுத்துச் சொன்ன போது, தனது நண்பியாக இருந்த நபீஸா பின்த் மனிய்யா என்பவரிடம் தனது மனதில் உள்ளதை எடுத்துச் சொன்னார்கள். அதன் பிறகு நபி (ஸல்) அவர்களிடமும் எடுத்துக் கூறப்பட்டபோது அன்னை ஹதீஜாவை மணந்து கொள்ள விருப்பம் தெரிவித்தார்கள்.

பிறகு நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தையரிடமும், அன்னை ஹதீஜாவின் பெரிய தந்தையரிடமும் கலந்துரையாடி முடிவு செய்யப்பட்ட பின் திருமணம் இனிதே நடந்தேறியது. மேலும் அவர்கள் செல்வம், அந்தஸ்த்து, குடும்பம், விவேகம் போன்ற பண்புகளில் அக்கால பெண்கள் மத்தியில் சிறந்து விளங்கினார்கள். அன்னை கதீஜா, நபி (ஸல்) அவர்களின் முதல் மனைவியாவார்கள். அவர்கள் மரணிக்கும் வரை வேறு எந்தப் பெண்ணையும் திருமணம் செய்யவில்லை. நபியவர்களின் ஏழு பிள்ளைகளில் ஆறு பிள்ளைகளை அன்னை கதீஜாவே பெற்றெடுத்தார்கள்.

# க.்.பா நிர்மாணமும், நியாயமான தீர்வும்

நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவத்திற்கு ஐந்து வருடங்களுக்கு முன் (நபியவர்களின் 35வது வயதில்) மக்காவை பெரியதோர் வெள்ளப் பிரளயம் பாதித்தது, அதன் காரணமாக இறைவனின் ஆலயம் க.்.பா நீரில் மூழ்கி இடிந்து விடும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது.

அதனைக் கண்ணுற்ற குறைஷிகள் க.்.பாவை அதன் மீது வைத்திருந்த கண்ணியம் காரணமாக மீண்டும் புதிதாக கட்டி எழுப்ப வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

அதே வேளை க.்.பாவை கட்டுவதற்காக நேர்மையான முறையில் உழைக்கப்பட்ட பணத்தை தவிர அதற்கு மாற்றமாக வட்டி, விபச்சாரம், அநீதியான முறையில் சம்பாதிக்கப்பட்ட பணத்தை உபயோகிக்கக் கூடாது என்றும் முடிவு செய்தார்கள். மேலும் க.்.பாவை கட்டுவதற்காக ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒவ்வொரு கல் சேர்க்கப்பட்டது. கட்டிடப் பணியில் பாகூம் என்பவர் பொறுப்பேற்றிருந்தார். ஹஜருல் அஸ்வத் எனும் கல் வைக்கப்பட வேண்டிய இடத்தை அடைந்ததும் அக்கல்லை யார் வைப்பது என்ற கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இப்பிரச்சனை நான்கு அல்லது ஐந்து நாட்களாக நீடித்தது. அது மாத்திரமின்றி புனித பூமியில் ஒரு படுமோசமான யுத்தமே ஆரம்பிக்கும் சூழ் நிலைக்கு மாறியது.

நிலைமை இவ்வாறிருக்க ஆபூ உமைய்யா பின் முகீரா அல் மஹ்சூமி அவர்கள் ஒரு தீர்வை முன்வைத்தார்கள். அதாவது நாளை அதிகாலை நேரத்தில் முதலாவதாக எவர் வருகிறாரோ அவரையே நடுவராக நியமித்துக் கொள்ள வேண்டும். என்று யோசனை கூறினார். எல்லோரும் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டனர். அதன் படி க.்.பாவில் முதலில் நுழையக் கூடியவர் நபி (ஸல்) அவர்களாக இருக்க இறைவன் நாடியிருந்தான். நபி (ஸல்) அவர்கள் நுழைவதைக் கண்ட மக்கள் இதோ இவர் நம்பிக்கைக்குரியவர் இவரை நாம் பொருந்திக் கொண்டோமென சந்தோஷக் கூச்சலிட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள், அவர்களை நெருங்கியதும் விடயத்தைக் கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்களின் கரத்தால் ஓர் ஆடையை விரித்து அதன் நடுவில் கல்லை வைத்தார்கள். பிறகு பிரச்சினைக்குட்பட்ட அனைத்துக் கோத்திரத்தாரிடமும் அவர்களுள் ஒரு தலைவரை நியமிக்கச் சொன்னார்கள். அதன் பின் அனைவரும் அந்த ஆடையை உயர்த்தி ஹஜருல் அஸ்வத் கல் வைக்கப்பட வேண்டிய இடம் வந்ததும் நபியவர்கள் தங்கள் கரங்களால் அதனைத் தூக்கி வைத்தார்கள். அனைத்து மக்களும் மனதிருப்தியுடன் இத்தீர்ப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

## உண்மையாளர், நம்பிக்கையாளர்

நபி (ஸல்) அவர்களிடம் இருந்த சிறந்த நற்பண்புகள், சீரிய ஒழுக்கங்கள் காரணமாக தம சமூகத்தினர் மத்தியில் மிகச் சிறந்த பண்பாளராக விளங்கினார்கள். மேலும் நற்பண்புகளில் சிறந்தவராகவும், அறிவு நாணயத்தில் மேலானவராகவும், உண்மையே பேசுபவராகவும், ஒழுக்க சீலராகவும், நன்மையே செய்பவராகவும் இருந்தார்கள். நல்ல செயல்கள் புரிவதாலும், வாக்குறுதியை நிறைவேற்றுவதாலும், அமானிதங்களை பாதுகாப்பதாலும், “அஸ்ஸாதிக்” உண்மையாளர், “அல் அமீன்” நம்பிக்கையாளர் என்று தம் சமூகத்தின் மத்தியில் பெயர் பெற்றார்கள். அண்ணலாரிடம் ஸாலிஹான தன்மைகளும் சிறந்த பண்புகளும் இணைந்திருந்ததால் அன்னை ஹதீஜா (ரலி) கூட பின் வருமாறு கூறினார்கள்: உறவுகளுடன் சேர்ந்து நடக்கின்றீர்கள். பிற மக்களின் சுமைகளை நீங்கள் தாங்கிக் கொள்கிறீர்கள், ஏழை எளியோர்களுக்கு உதவுகின்றீர்கள். விருந்தாளிகளை உபசரிக்கின்றீர்கள். மக்களின் துயரங்களை நீக்க பாடுபடுகின்றீர்கள் என்றார்கள்.

# நபித்துவத்தின் காலம் நெருங்குதல்

நபி (ஸல்) அவர்களுக்கு நாற்பது வயது நெருங்கிக் கொண்டிருந்த போது அவர்களுடைய சிந்தனை முன்பை விட தம் சமூகத்தைப் பற்றி அதிகமாகிக் கொண்டிருந்தது. அவர்களுக்கு தனிமையே மிகவும் விருப்பமானதாக இருந்தது. அதனால் அவரகள் தனக்குத் தேவையான உணவுகளையும், தண்ணீரையும் எடுத்துக் கொண்டு ஜபலுன் நூரில் உள்ள ஹீராக் குகைக்கு சென்று விடுவார்கள். மக்காவில் இருந்து கிட்டத்தட்ட இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் இந்த மலை அமைந்துள்ளது. அதில் அதிகமதிகம் சென்று வணக்கங்களில் ஈடுபடுவார்கள். மேலும் அங்கு வரும் ஏழைகளுக்கு உணவளிப்பார்கள். மேலும் தனது அதிகமான நேரத்தை இறைவனை வணங்குவதிலும், தம்மை சூழ உள்ள இறைவனின் படைப்புகளைப் பற்றி சிந்திப்பதிலும் கழித்து வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு நாற்பது வயது முழுமையானதும் நபித்துவத்தின் அடையாளங்கள் ஆரம்பித்தன.

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்களுக்கு ஆரம்பத்தில் இறைச் செய்தி தூக்கத்தில் தோன்றும் நல்ல கனவுகளிலே வந்தது. அப்போது இவர்கள் எந்தக் கனவு கண்டாலும் அது அதிகாலைப் பொழுதின் விடியலைப் போலத் தெளிவாக இருக்கும். பின்னர் தனிமையிலிருப்பது அவர்களின் விருப்பமாயிற்று. ஹிராக் குகையில் அவர்கள் தனித்திருந்தனர். தன் குடும்பத்தாரிடம் திரும்பி வருவதற்கு முன் பல இரவுகள் (அங்கே தங்கியிருந்து) வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தனர். அந்த நாட்களுக்கான உணவைத் தம்மோடு கொண்டு செல்வார்கள்.(அந்த உணவு முடிந்ததும்) மீண்டும் (தமது துணைவியார்) கதீஜா (ரலி) அவர்களிடம் திரும்பி வருவார்கள். அதே போன்று பல நாட்களுக்குரிய உணவைக் கொண்டு செல்வார்கள். இந்த நிலை ஹிரா குகையில் அவர்களுக்கு சத்தியம் வரும் வரை நீடித்தது. (ஒரு நாள்) ஒரு வானவர் அவர்களிடம் வந்து, ஓதுவீராக என்றார். அதற்கவர்கள் நான் ஓதத் தெரிந்தவனில்லையே! என்றார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்நிலையைப் பின்வருமாறு விளக்கினார்கள்:
அவர் என்னைப் பிடித்து நான் சிரமப்படும் அளவிற்கு இறுக்க கட்டியணைத்தார். பிறகு என்னை விட்டு விட்டு மீண்டும் ஓதுவீராக என்றார். (அப்போது) நான் ஓதத் தெரிந்தவனில்லையே! என்றேன். இரண்டாவது முறையும் அவர் என்னைப் பிடித்து நான் சிரமப்படும் அளவிற்கு இறுக கட்டி அணைத்து என்னை விட்டு விட்டு மீண்டும் ஓதுவீராக என்றார். (அப்போதும்) நான் ஓதத் தெரிந்தவனில்லையே! என்றேன். அவர் என்னைப் பிடித்து மூன்றாவது முறையும் கட்டி அணைத்து விட்டு, ***‘படைத்தவனாகிய உம்முடைய இரட்சகனின் திருப்பெயரால் ஓதுவீராக! அவன் தான் மனிதனை அலக்கில் (கருவளரச்சியின் ஆரம்ப நிலை) இருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இரட்சகன் கண்ணியமிக்கவன்’*** என்றார், மேலும் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுவதாவது: பிறகு இதயம் படபடத்தவர்களாக அந்த வசனங்களுடன் (தமது துணைவியார்) குவைலிதின் மகள் கதீஜாவிடம் வந்து என்னைப் போர்த்துங்கள்! என்னைப் போர்த்துங்கள்!! என்றார்கள். அன்னை ஹதீஜா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களைப் போர்த்தினார்கள். (நடுக்கம் தீர்ந்ததும்) கதீஜா (ரலி)விடம் நடந்த செய்தியை தெரிவித்து விட்டுத் தமக்கு ஏதும் நேர்ந்து விடுமோ எனத் தாம் அஞ்சுவதாகவும் கூறினார்கள். அப்போது கதீஜா (ரலி) அவ்வாறு கூறாதீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக உங்களை ஒரு போதும் அல்லாஹ் இழிவு படுத்த மாட்டான். (ஏனெனில்) தாங்கள் உறவினர்களுடன் சேர்ந்து நடக்குறீர்கள், (சிரமப்படுவோரின்) சுமைகளை தாங்கள் சுமந்து கொள்கிறீர்கள், வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள், விருந்தினரை உபசரிக்கிறீர்கள், உண்மையான சோதனைகளில் (ஆட்பட்டோருக்கு) உதவி புரிகிறீர்கள் என்றார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்களை தமது தந்தையின் உடன் பிறந்தவரான வரகத் பின் நௌபல் என்பவரிடம் அழைத்துச் சென்றார்கள்.

வரகா, அறியாமைக் காலத்திலேயே கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியவராக இருந்தார். மேலும் அவர் ஹிப்ரு மொழியில் எழுதத் தெரிந்தவராகவும் இஞ்சீல் வேதத்தை ஹிப்ரு மொழியில் எழுத வேண்டும் என்று அல்லாஹ் நாடிய அளவுக்கு எழுதுகிறவராகவும் கண் பார்வையற்ற வயோதிபராகவும் இருந்தார். அவரிடம் கதீஜா (ரலி), என் தந்தையின் சகோதரன் மகனே! உம் சகோதரன் மகன் கூறுவதைக் கேளுங்கள் என்றார்கள். அப்போது வரகா நபி (ஸல்) அவர்களிடம், என் சகோதரன் மகனே! நீர் எதைக் கண்டீர்? எனக் கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள் தாம் பார்த்த செய்திகளை அவரிடம் சொன்னார்கள். (அதைக் கேட்டதும்) வரகா, இவர்தாம் மூஸாவிடம் இறைவன் அனுப்பிய நாமூஸ் (ஜிப்ரீல்) ஆவார் என்று கூறிவிட்டு, உமது சமூகத்தார் உம்மை உமது நாட்டிலிருந்து வெளியேற்றும் சமயத்தில் நான் உயிருடன் திடகாத்திரமான இளைஞனாக இருந்திருக்க வேண்டுமே! என்றும் அங்கலாய்த்துக் கொண்டார்.

அப்போது நபி (ஸல்) அவர்கள், மக்கள் என்னை வெளியேற்றவும் செய்வார்களா? என்று கேட்டார்கள். அதற்கவர் ஆம்! நீர் கொண்டுவந்திருப்பது போன்ற சத்தியத்தை கொண்டு வந்த எந்த மனிதரையும் (மக்கள்) பகைத்துக் கொள்ளாமல் இருந்ததில்லை. (நீர் வெளியேற்றப்படும்) அந்நாளை நான் அடைந்தால் உமக்குப் பலமான உதவி செய்வேன் என்று கூறினார். அதன்பின் வரகா நீண்ட நாள் வாழாமல் இறந்து விட்டார். இந்த முதற்செய்தியுடன் வஹீ சிறிது காலம் நின்று போயிற்று. (ஸஹீஹுல் புஹாரி : 03)

## த.ஃவாவின் ஆரம்பம்

நபி (ஸல்) அவர்கள் அந்த நிகழ்வுக்குப் பிறகு வீட்டை அடைந்ததும் இஸ்லாமிய அழைப்புப் பணியை ஆரம்பித்தார்கள். முதல் நாளிளேயே தம் மனைவி கதீஜா (ரலி), தம் பெரிய தந்தையின் மகன் அலி (ரலி) (8வது வயது), தம் நண்பர் அபூ பக்கர் (ரலி), தம் பணியாளர் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) போன்றோர் இஸ்லாத்தைத் தழுவினார்கள். ஏனெனில் 40 வருட காலமாக நபி (ஸல்) அவர்களுடன் கூட இருந்து அவர்களின் சிறிய, பெரிய அனைத்து விடயங்களையும் நன்றாக அறிந்திருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த தூய்மையான வாழ்கையே அவர்களின் அழைப்பு உண்மையானது என்பதற்குப் பலமான ஆதாரமாகும்.
சில நாட்கள் கழிந்து பிலால் (ரலி), அம்ரு பின் அம்பசஹ் (ரலி), ஹாலித் பின் ஸ.ஃத் பின் ஆஸ் (ரலி) போன்றோர் இஸ்லாத்தைத் தழுவினர். அபூ பக்கர் (ரலி) அவர்கள் வியாபாரத்தில் தொடர்புடையவராக இருந்ததால் பெரும் செல்வந்தராகத் திகழ்ந்தார்கள். மக்காவில் துணி வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். இதனால் மக்களோடு மிகவும் தொடர்புடையவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் இருந்தார்கள். அவர் இஸ்லாத்தை ஏற்ற பின்னர் அதன் பால் அழைக்கும் பணியில் ஈடுபட்டார்கள். அவரின் அழைப்புப் பணி காரணமாக உஸ்மான் (ரலி) சுபைர் (ரலி) அப்துல் ரஹ்மான் பின் அவ்ப் (ரலி) தல்ஹா (ரலி) சயீத் பின் அபீ வக்காஸ் (ரலி) இஸ்லாத்தை ஏற்றார்கள். இவா்கள் ஐவரும் பிற்காலத்தில் நபியவர்களால் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டவா்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின் அபூ உபைதா ஆமிர் பின் ஜர்ராஹ் (ரலி) (இஸ்லாமிய சமூகத்தின் நம்பிக்கையாளர் என்று நபி (ஸல்) அவர்களால் பெயர் சூட்டப்பட்டவர்.), அப்துல் அஸத் பின் ஹிலால் (ரலி), உஸ்மான் பின் மல்ஊன்(ரலி), ஆமிர் பின் புஹைரா அல்அஸதி (ரலி), அபூ ஹுதைபா பின் உத்பா (ரலி), சாயிப் பின் உஸ்மான் பின் மல்ஊன் (ரலி), அர்கம் (ரலி) ஆகியோரும் பெண்களில் கதீஜா (ரலி) அவர்களுக்குப் பிறகு அஸ்மா பின்த் உமைஸ் (ரலி), அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரலி) உமர் (ரலி)யின் சகோதரி பாதிமா பின்த் ஹத்தாப் (ரலி) போன்றோர் இஸ்லாத்தை ஏற்றார்கள். இவர்கள் அனைவரும் தொழுகையை நிறைவேற்ற மக்காவுக்கு வெளியே உள்ள மலைகளின் பள்ளத்ததாக்குக்கு சென்று வருபவர்களாக இருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து மூன்று வருடங்களாக இரகசியமாக மனிதர்களை அழைத்துக் கொண்டிருந்தார்கள். அத்தோடு கற்களையும், மரங்களையும், சூரியனையும், சந்திரனையும் வணங்குவதை விட்டு அல்லாஹ்வை மாத்திரமே வணங்குங்கள் என்று மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார்கள்.

## நபித்துவத்தின் நோக்கம்

நிலைமை இவ்வாறிருக்க நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனிடம் இருந்து சில கட்டளைகள் வந்தன.

﴿ يَٰٓأَيُّهَا ٱلْمُدَّثِّرُ ﴿١﴾ قُمْ فَأَنذِرْ ﴿٢﴾ وَرَبَّكَ فَكَبِّرْ ﴿٣﴾ وَثِيَابَكَ فَطَهِّرْ ﴿٤﴾ وَٱلرُّجْزَ فَٱهْجُرْ ﴿٥﴾ وَلَا تَمْنُن تَسْتَكْثِرُ ﴿٦﴾ وَلِرَبِّكَ فَٱصْبِرْ ﴾ المدثر: ١ - ٧

*(போர்வை) போர்த்திக் கொண்டிருப்பவரே! நீர் எழுந்து (மக்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக. மேலும் உம் இறைவனை பெருமைப் படுத்துவீராக. உம் ஆடைகளைத் தூய்மையாக ஆக்கி வைத்துக் கொள்வீராக. அன்றியும் அசுத்தத்தை வெறுத்து (ஒதுக்கி) விடுவீராக. (பிறருக்கு கொடுப்பதையும் விட அவர்களிடமிருந்து) அதிகமாகப் பெறும் (நோக்கோடு) உபகாரம் செய்யாதீர். இன்னும், உம் இறைவனுக்காகப் பொறுமையுடன் இருப்பீராக. (அல் முத்தஸ்ஸிர் 1- 7)*

இத்திருமறை வசனங்கள் மூலம் தூதுத்துவத்தின் மற்றும் நபித்துவத்தின் சில நோக்கங்கள் தெளிவாகின்றன அவைகள் பின்வருமாறு:

(1) ஏகத்துவம்
(2) இறுதி நாள் நம்பிக்கை
(3) தீய மற்றும் வெறுக்கத்தக்க மானக்கேடான விடயங்களை விட்டும் தவிர்ந்து தம் ஆத்மாவை தூய்மைப்படுத்தி அதன் மூலம் சிறப்புகள் மற்றும் சிறந்த நற்பண்புகள் நன்மைகளை சம்பாதித்துக் கொள்ளல்.
(4) அனைத்து விடயங்களையும் அல்லாஹ்வின் மீது பொறுப்பு சாட்டல்.

மேலே கூறப்பட்ட அனைத்துக்கும் நிபந்தனை நபி (ஸல்) இவர்களை விசுவாசம் கொள்ளல், மற்றும் அவர்களின் சிறந்த தலைமைத்துவத்தின் கீழும், அவர்களின் சிறந்த வழிகாட்டலின் பிரகாரமும் நடப்பதேயாகும்.

## மக்கா வாசிகளுக்கான அழைப்பும் ஸபா மலைக்குன்றில் பிரச்சாரமும்

நபி (ஸல்) அவர்கள் பொதுவான அழைப்புப் பணியை தம் இறைவனின் கட்டளைப்படி செய்து வந்தார்கள். இதற்கு மத்தியில் குறிப்பாக தம் நெருங்கிய உறவினர்களை இஸ்லாத்தின் பால் அழைக்கும் படி இறைவசனம் இறங்கியது.

﴿ وَأَنذِرْ عَشِيرَتَكَ ٱلْأَقْرَبِينَ ﴾ الشعراء: ٢١٤

*இன்னும், உம்முடைய நெருங்கிய உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! (அஷ்ஷுஅரா : 214)*

நபி (ஸல்) அவர்களுக்கு அபூ தாலிப் அவர்கள் பாதுகாப்பு தருவதாக உறுதி மொழி அளித்தது ஊர்ஜிதமானதன் பின்னர் தம் ரப்பைப் பற்றி பிரச்சாரம் செய்ய எண்ணி ஸபா மலைக் குன்றின் மீது ஏறி யா ஸபாஹா என்று கூவினார்கள். ஆபத்து ஏதும் வந்து விட்டால் எவரேனும் ஒருவர், ஏதேனுமோர் உயர்ந்த இடத்தில் ஏறி நின்று இவ்வாறு கூவி மக்களை எச்சரித்திட அழைப்பதும், மக்கள் அந்தக் குரலைக் கேட்டு ஒன்று திரண்டு விடுவதும் அரபுகளின் வழக்கமாக இருந்தது. எனவே, ஸ∴பா மலைக் குன்றிலிருந்து அண்ணலார் (ஸல்) இந்தக் குரலை எழுப்பி குறைஷிகளை அழைத்தவுடன் ஏராளமான மக்கள் ஒன்று கூடிவிட்டனர். ஒன்று கூடிய மக்களை நோக்கி தவ்ஹீதின் பாலும் (ஏகத்துவம்) அவரின் தூதுத்துவத்தை விசுவாசம் கொள்ளுமாறும், இறுதி நாளை விசுவாசம் கொள்ளுமாறும் அழைத்தார்கள்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களைத் தொட்டும் இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் அச்சம்பவத்தின் ஒரு பகுதியை அறிவிப்புச் செய்கிறார்கள். அதாவது:
(உம் நெருங்கிய உறவினர்களுக்கு எச்சரிக்கை விடுப்பீராக) என்ற திருவசனம் இறங்கியதும் நபி (ஸல்) அவர்கள் ஸ.ஃபா மலைகுன்றின் மீது ஏறி பனூ பிஹ்ர், பனூ அதிய் என்று குரைஷிக் கோத்திரத்தினரை கூவி அழைத்தார்கள். இவ்வழைப்பை ஏற்று அனைவரும் ஒன்று கூடினர். அங்கு சமூகம் தர முடியாதவர்கள் தமக்குப் பகரமாக ஒருவரையேனும் அனுப்பி என்ன விடயமென பார்த்து வர அனுப்பி வைத்தார்கள். அக்கூட்டத்தில் அபூ லஹபும் சமூகமளித்திருந்தான். அவர்களை நோக்கி நபி (ஸல்) அவர்கள்: இம்மலைக்கு பின்னாலிருந்து ஒரு குதிரைப் படை உங்களைத் தாக்க வருகின்றது என்று கூறினால் நம்புவீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அனைவரும் ஆம் இது காலவரையில் உண்மை சொன்னதைத் தவிர வேறெதையும் நாம் உம்மில் அறியவில்லையே என்றனர். அப்படியெனில் நான் உங்களை ஒரே இறைவனை வணங்கி அவனுக்கே கீழ்படிந்து வாழும்படி அழைக்கிறேன். சிலைகளை வணங்குவதிலிருந்து காப்பாற்றிட விரும்புகிறேன். ஆனால் நீங்கள் என் சொல்லை ஏற்றுக் கொள்ளா விட்டால் நான் உங்களை மிகக் கடுமையான துன்பமிக்க வேதனையைக் கொண்டு எச்சரிக்கிறேன். இதைக் கேட்ட அபூ லஹப் வெகுண்டெழுந்து காலமெல்லாம் உனக்கு அழிவு உண்டாகட்டும் என்றதும் (அபூ லஹபின் இரு கரங்களும் நாசமாகட்டும்) என்ற திருவசனம் இறங்கியது. (புஹாரி : 4770, முஸ்லிம் : 207)

## நபி (ஸல்) அவர்களுடைய த.ஃவா ஈடுபாடும், முஷ்ரிகீன்களின் எதிர் நடவடிக்கைகளும்

நபி (ஸல்) அவர்கள் தம் பகிரங்க த.ஃவா பிரச்சாரத்தை ஆரம்பித்து அதை செய்தும் வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு தெருத்தெருவாகவும் கிராமமாகவும் சந்துகளாகவும் மக்கள் கூடக்கூடிய இடங்களுக்கெல்லாம் சென்று தவ்ஹீதின் பால் மக்களை அழைத்தார்கள். மேலும் மரங்கள், கற்கள், சிலைகளை வணங்குவதை விட்டும் தடுத்ததோடு பெண் குழந்தைகளை உயிருடன் புதைப்பதையும், விபச்சாரத்தில் ஈடுபடுவதையும் சூதாட்டத்தையும் தடுத்து வந்தார்கள்.
இந்த அழைப்பால் சிலை வணங்குவர்களும், இணை வைப்பாளர்களும் வழிகேடர்கள் என்ற குரல் ஒலித்ததைக் கேட்ட மக்காவாசிகள் கோபத்தால் கொதித்தெழுந்தனர். இப்புரட்சியை அடக்கிவிட வேண்டும் என்று குறைஷிக் கோத்திரத்தினர் களத்தில் இறங்கினர். இந்த அழைப்பின் விபரீதத்தை அவர்கள் அறிந்து கொண்டனர். அதாவது அல்லாஹ்வையன்றி வணங்கப்படக்கூடிய தெய்வங்களை மறுத்தல், தூதுத்துவம், மறுமை நாள் பற்றி நம்பிக்கை வைத்தல், இவைகளுக்கு பரிபூரணமாக கீழ்படிதல், பொதுவான அனைத்து விடயத்தையும் அல்லாஹ் ஒருவனுக்கே பொறுப்புசாட்டல் என்பவற்றைத்தான் இது சொல்கிறது என்பதை அறிந்து கொண்டார்கள். எனவே இதை இப்படியே விட்டுவைத்தால் இதை ஏற்றுக் கொண்டால் தம் சொத்தில், தம் சொந்த விடயங்களில் தமக்கு விரும்பிய விதத்தில் செயல்பட முடியாது போய்விடும். அப்படியெனில் தமது தலைமைத்துவமும், அரபியர் மீதுள்ள மதிப்பும் பறிபோய்விடும். இவ்விரண்டும்தான் அவர்களை மார்க்கத்தின் சொந்தக் காரர்களாக ஆக்கி வைத்துக் கொண்டிருந்தது. மேலும் அவர்கள் எந்த செயல்களையெல்லாம் பொருந்திக் கொண்டு செயல்பட்டார்களோ அவைகளை அல்லாஹ்வுடைய, அனுடைய தூதருடைய திருப்பொருத்தத்திற்கு முன்னால் வைக்க முடியாது போய்விடுகிறது. மேலும் தமக்குக் கீழிருந்த கோத்திரங்களுக்கு நாம் செய்து வந்த கொடுமை அநியாயங்களை விட்டும் தடுத்துவிடும். காலை மாலையென்று பாராமல் தாம் செய்து வந்த தீய விடயங்களை விட்டும் தடுத்துவிடுமென்பதை அறிந்து வைத்திருந்ததால் அவர்களுடைய உள்ளங்கள் இந்த அழைப்பை ஏற்க மறுத்ததே தவிர சங்கைக்காகவோ நன்மைக்காகவோ அல்ல.

## நபி (ஸல்) அவர்களுக்கு குரைஷியர்களின் துன்புறுத்தல்

தனது அழைப்புப் பணியை மேற்கொள்ளும் போது நபி (ஸல்) அவர்கள் பல துன்பங்களையும், இன்னல்களையும் சந்தித்தார்கள். அவர்கள் இரவின் இருளில் வரும் போது அவர்களின் பாதங்களை காயப்படுத்துவதற்காக வரும் பாதையில் முட்களையும் கற்களையும் பரப்பி வந்தனர். அதே போல் உம்மு ஜமீல் என்பவள் நபி (ஸல்) அவர்களின் வீட்டு வாசலுக்குக்கு முன்னால் அழுக்குகளைக் கொட்டி அவர்களை சஞ்சலப்படுத்தவும், வேதனைக்குள்ளாக்கவும் எண்ணினாள். எனினும் நபி (ஸல்) அவர்கள் பொறுமையுடன் அப்து மனாப் சந்ததியினரே! இது எந்த அண்டை வீட்டார் என்றே கேட்டுக் கொண்டிருந்தார்கள்.
அப்துல்லாஹ் பின் அம்ரு பின் ஆஸ் (ரலி) அவர்கள் தன் கண்ணால் கண்டதனை பின்வருமாறு அறிவிக்கிறார்கள் : ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் க..பாவின் பக்கமாக தொழுது கொண்டிருந்தார்கள். அச்சமயம் அங்கு வந்த உக்பா பின் முஈத் தனது துணியை கயிறு போல் சுற்றி நபி (ஸல்) அவர்கள் சுஜூது செய்து கொண்டிருக்கும் போது அதை கழுத்தில் போட்டு மூச்சித் திணறும் வரை கடுமையாக இறுக்கிக் கொண்டிருந்தான். ஆனால் நபி (ஸல்) அவர்கள் தம் சுஜூதிலிருந்து விடுபடாமல் மன அமைதியுடன் தொடர்ந்தும் இருந்தார்கள். இதைக் கண்ட அபூ பக்கர் (ரலி) அவர்கள் உக்பாவிடமிருந்து விடுவித்து நபி (ஸல்) அவர்களை எழுந்திருக்கச் செய்தார்கள். அத்தோடு (அல்லாஹ் ஒருவன் என்று சொன்னதற்கா ஒரு மனிதரை கொலை செய்கிறீர்கள். மேலும் நிச்சயமாக அவர் உங்களிடம் தெளிவான ஆதாரங்களுடன் வந்திருக்கிறார் என்ற திருமறை வசனத்தை அபூ பக்கர் (ரலி) அவர்கள் ஓதிக் காண்பித்தார்கள். (புஹாரி : 3678) அப்போது அங்கிருந்த அவர்களின் சிலர் அபூபக்ர் (ரலி) அவர்களை கடுமையாகத் தாக்கினார்கள்.
மற்றொரு முறை நபி (ஸல்) அவர்கள் க..பாவுக்குப் பக்கத்தில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது குரைஷியரில் சிலர் அங்கு நுழைந்து ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டார்கள். அவர்களில் அபூ ஜஹ்லும் இருந்தான். அவன் அவனோடு இருந்தவர்களை நோக்கி நான் இன்று மக்காவில் ஒரு இடத்தை குறிப்பிட்டு அங்கு ஒரு ஒட்டகம் அறுத்தேன். அதன் குடல்கள் இன்னும் அங்குதான் இருக்கிறது. உடனே உங்களில் ஒருவர் சென்று அதை எடுத்து வந்து முஹம்மதின் மீது போடவும் என்று கூறினான். பிறகு நபி (ஸல்) அவர்கள் சுஜூதில் இருந்த போது அவர்களின் மீது அந்த இரத்தம் தோய்ந்த குடல்களையும், கழிவுகளையும் போட்டு அவர்களை சூழ்ந்து கொண்டு அக்குரைஷியர்கள் விழுந்து விழுந்து சிரித்து மகிழ்ந்தனர். அப்போது இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களும் அவ்விடத்தில் இருந்தார்கள். ஆனால் குரைஷியர்கள் அதிகமானவர்களாக இருந்ததால் எதுவும் செய்வதறியாது நின்று கொண்டிருந்தார்கள். அப்போது நபிகளாரின் அருமை மகள் பாதிமா (ரலி) அவர்கள் வந்து தந்தையின் மேனியில் இருந்து கழிவுகளை அகற்றினார்கள். (புஹாரி : 520)

## முஸ்லீம்களுக்கு குரைஷிகளின் கொடுமை

இதனடிப்படையிலேயே அபூ தாலிபை நபி (ஸல்) அவர்களுடைய அழைப்புக்கு எதிர்ப்புக் காட்டும் படி குறைஷிகள் வற்புறுத்தி இஸ்லாத்தை எப்படியாவது தீர்த்துக் கட்டிட வேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தனர். இதற்காக பல வழிமுறைகளையும் கையாண்டார்கள்.
முதலாவது : இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அதிலிருந்து இஸ்லாத்தை துறக்கும் வரை கொடுமைப்படுத்தப்படுவதும், அதன் மூலம் புதிதாக எவரும் இஸ்லாத்தில் நுழையாமல் இருக்கச் செய்தல். இங்கு குறைஷிகள் அந்த முஸ்லீம்களுக்குச் செய்த வேதனை சோதனைகள் அனைத்தையும் சொல்லிவிடுவதென்பது இலேசான காரியமன்று. எனவே சுருக்கமாக அம்முஸ்லீம்கள் பட்ட துன்பங்கள் அவர்கள் அனுபவித்த இன்ன பல வேதனைகளை இங்கே எடுத்துக் காட்டாக குறிப்பிடுகிறோம்.

(1) பிலால் பின் ரபாஹ் என்ற ஸஹாபி உமையா பின் கல∴ப் என்பவனுக்கு அடிமையாக இருந்தார்கள். இவர்கள் ஹபஷா (எத்யோப்பியா) நாட்டைச் சேர்ந்தவராவார். பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தி உமையத் பின் கல∴ப் என்ற எஜமான் கேள்விப்பட்டதும் பல துன்பங்களை அவர்களுக்கு செய்து இஸ்லாத்தை விட்டு விடுமாறு வற்புறுத்திக் கொண்டே இருந்தான். அவன் அவர்களின் கழுத்தில் ஒரு கயிற்றை கட்டி அங்குள்ள சிறுவர்களிடம் கொடுத்து மக்காவெங்கும் இழுத்துத் திரியுமாறு பணிப்பான். அக்கயிற்றின் அடையாளம் அவர்களின் கழுத்தில் அப்படியே படிந்திருந்தது. அதுமாத்திரமின்றி மக்காவின் சுடு மணலில் அவர்களை படுக்கவைத்து அவர்களின் மேல் ஒரு பாராங்கல்லை ஏற்றி வைத்து விடுவான். அந்தோ பரிதாபம்! அவர்களின் கைகளிரண்டையும் கட்டி வைத்து சவுக்கால் அடிமேல் அடிப்பான். அதிகமாக அவன் அவர்களை சுட்டெரிக்கும் வெயிலிலே விட்டுவைப்பான் அல்லது உணவின்றி பட்டினிபோடுவான். ஆனால் பிலால் (ரலி) அவர்கள் இவ்வேதனைகளால் சற்றும் மனம் தளராமல் அஹத் அஹத் (அல்லாஹ் ஒருவன் அல்லாஹ் ஒருவன்) என்றே சொல்லிக் கொண்டிருந்தார்கள். கொடுமையைக் கண்ட அபூ பக்கர் (ரலி) அவர்கள் அவரை வாங்கி உரிமையிட்டார்கள்.

(2) அம்மார் (ரலி), அவர்களின் தந்தை யாஸிர் (ரலி), அவரின் தாயார் ஸுமையா (ரலி) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றமைக்காக அபூ ஜஹ்ல் பல வகை துன்பங்களைக் கொண்டு வேதனை படுத்தினான். ஆவர்கள் ஒரு நாள் வேதனை செய்யப்படுவதை நபி (ஸல்) அவர்கள் கண்ட போது பின்வருமாறு கூறினார்கள்: ""யாஸிர் குடும்பத்தினரே! பொறுமையாக இருங்கள். நிச்சயமாக உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட இடம் சுவர்க்கமாகும்."" (ஹாகிம் 5646) கொடுமையின் உச்சகட்டமாக அநியாயக் கார அபூ ஜஹ்ல் ஸுமையா (ரலி) அவர்களின் அபத்தில் ஈட்டியால் குத்தி கொலை செய்தான். அப்பெண்மணி தான் இஸ்லாத்தின் முதல் ஷஹீத் ஆவார்.

(3) அப்லஹ் என்ற இயற்பெயரைக் கொண்ட அபூ பகீஹா என்பவர் அவரின் இரு கால்களையும் கயிற்றால் கட்டி பாலைவன கடும் வெயிலில் இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

(4) ஹப்பாப் பின் அரத் (ரலி) அவர்களின் தலை முடிகள் பிடுங்கப்பட்டன, கழுத்து நெறிக்கப்பட்டது, மேலும் அவர்களின் முதுகுப் புறமாக நெருப்புத் தணலால் சூடு போடப்பட்டும் வேதனை செய்யப்பட்டார்கள்.

இக்கொடூரங்களை அக்குரைஷியர்கள் அடிமைகள், பலவீனர்களென்று பாராமல் இஸ்லாத்தை ஏற்ற தம் உறவினர்கள், தம் பிள்ளைகளுக்கும் செய்து வந்தார்கள்.

(5) உஸ்மான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற செய்தியினை அவரின் கொடிய சிறிய தந்தை அறிந்ததும், அவரை ஈத்த மரத்தில் கட்டி வைத்து அவரைச் சுற்றிலும் தீயை மூட்டி வேதனை செய்தான்.

(6) முஸ்ஹப் பின் உமைர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற காரணத்தினால் விட்டை விட்டு விரட்டப்பட்டார்கள். இஸ்லாத்தை ஏற்றதே அவர்களின் குற்றமாக இருந்தது.

(7) மேலும் அக்குரைஷியர்கள் சில ஸஹாபிகளுக்கு ஒட்டகை, மற்றும் மாட்டினுடைய தோலைப் போர்த்தி அவர்களை கொதிக்கும் பாலைவன மணலில் போட்டு வேதனை புரிந்தும், இன்னும் சிலருக்கு இரும்பினால் உடைகளை அணிவித்து நெருப்புத் தணல்களின் மேல் இட்டும் வேதனை செய்து வந்தார்கள். ஆக மொத்தத்தில் அவர்கள் கடுமையான வேதனைகளால் துன்புறுத்தப்பட்டு வந்தார்கள். யாரெல்லாம் உண்மையாக உறுதியாக இஸ்லாத்தை ஏற்றார்களோ அவர்களைத் தவிர மற்றவர்கள் இந்த சோதனைகளை தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது.

## கொடுமைக் குழு

நபி (ஸல்) அவர்களும், முஸ்லீம்களும் அனுபவிக்கும் துன்பங்களும், கொடுமைகளும் போதுமானது அல்ல என்று கண்ட குரைஷியர்கள் தனித்தனியாக நபி (ஸல்) அவர்களையும், ஸஹாபாக்களையும் வேதனை, சோதனைப் படுத்துவதற்கென்றே நிலையான ஒரு சங்கம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்தார்கள்.

## ஹபஷாவை நோக்கி முதல் ஹிஜ்ரத்

காபிர்களின் நோவினைகளும், துன்புறுத்தல்களும் நாளுக்கு நாள் அதிகமானது. மேலும் எல்லை மீறிச் சென்றது. இதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் யார் தன் ஈமானையும், உயிரையும் பாதுகாத்துக் கொள்ள விரும்புகின்றனரோ அவர்கள் ஹபஷாவை நோக்கி ஹிஜ்ரத் செல்லுமாறு அனுமதி வழங்கினார்கள். இந்த அனுமதிக்குப் பிறகு நுபுவ்வத் 5ஆம் ஆண்டு 11 ஆண்கள் 4 பெண்கள் கொண்ட மொத்தம் 15 நபர்களுடனான சிறியதோர் கூட்டம் இரவு நேரத்தில் யாருக்கும் தெரியாமல் வெளிக்கிளம்பி (ஷீபா) எனும் துறைமுகத்தில் வைத்து கப்பலேறி ஹபஷாவை நோக்கிச் சென்றார்கள். இச்சிறிய கூட்டத்தினருக்கு உஸ்மான் பின் அ.:ப்பான் (ரலி) அவர்கள் தலைவராக இருந்தார்கள். அவர்களோடு அவரின் மனைவியும், நபிகளாரின் அன்பு மகளுமான ருகைய்யா (ரலி) அவர்களும் இருந்தார்கள்.

## இரண்டாவது ஹிஜ்ரத்

இதற்குப் பிறகு இரண்டாவது முறையும் ஹபஷாவை நோக்கி 82 ஆண்கள் 18 பெண்களைக் கொண்டதோர் குழு ஹிஜ்ரத் மேற் கொண்டு சென்றது. அதில் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் மகன் ஜ.:பர் (ரலி) அவர்களும் அடங்குவார்கள். கடல் வரை குரைஷியர் அவர்களை பின் தொடர்ந்து சென்று தடுக்க முயற்சித்த போதிலும் குரைஷியர்கள் அவர்களை அடையுமுன்னரே அவர்கள் கப்பலேறி கடலில் தொலை தூரம் சென்று விட்டனர்.

## இஸ்லாத்தைப் பற்றி ஜ.:பர் (ரலி) அவர்களின் பிரசங்கம்

ஹபஷா நாட்டின் அரசர் கிறிஸ்தவராக இருந்தார். தமது வீடுகளை விட்டு வெளியேறிய முஸ்லீம்களை திரும்ப ஒப்படைக்கும் படி கேட்டு தம்முடன் பெறுமதி வாய்ந்த நன்கொடைகளை எடுத்துக் கொண்டு மக்கா காபீர்கள் அங்கு சென்றனர்.

அப்போது மன்னர் தம் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த முஸ்லீம்களை தமது அவையில் ஒன்று கூட்டி விடயத்தை கேட்டறிய நாடினார். முஸ்லீம்கள் சார்பாக நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையின் மகன் ஜ.:பர் (ரலி) அவர்கள் எழுந்து நஜாஷி மன்னரின் அவையில் ஓர் உரை நிகழ்த்தினார்.

அரசர் அவர்களே! நாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் அறியாமை காலத்தில் வழிகேட்டில் இருந்தோம். சிலைகளை வணங்கிக் கொண்டும், அசுத்தங்களை மூடிக் கொண்டும், இறந்தவைகளை புசித்துக் கொண்டும் இருந்தோம். மேலும் மானக்கேடான விடயங்களை நாம் செய்து கொண்டும், உறவுகளை துண்டித்துக் கொண்டும் அண்டை வீட்டாரை மறந்தும் வாழ்ந்து கொண்டிருந்தோம். அத்தோடு எமக்கென்று எந்தவொரு சட்டங்களோ ஒழுங்கு முறைகளோ இருக்கவில்லை. எம்மில் இருந்து ஒரு தூதரை இறைவன் அனுப்பும் வரை நாம் இவ்வாறே இருந்து வந்தோம். அந்த நபியைப் பற்றி அவர்களின் நம்பிக்கை, நாணயம், குடும்பம், கோத்திரம் அனைத்தையும்

நன்கறிவோம். அத்தோடு அவரின் இறையச்சம், பணிவுகளையும் அறிவோம். அவர் எம்மை ஏக இறைவன் ஒருவன் என்ற கோட்பாட்டின் கீழ் அழைத்தார்கள். மேலும் நாம் ஒரே இறைவனான அல்லாஹ்வுக்கு இணை வைப்பதை விட்டும் தவிர்ந்திருக்குமாறு எமக்குத் தெளிவுபடுத்தினார்கள். மேலும் கற்கள், சிலைகளை வணங்குவதை விட்டும் எம்மை தடுத்தார். உண்மையே உரைக்குமாறும், வாக்குறுதியை நிறைவேற்றுமாறும், பாவச் செயல்களை விட்டும் தூரமாகிக் கொள்ளும் படியும் எம்மை ஏவினார். மேலும் மானக்கேடான செயல்களை விட்டும் எம்மைத் தடுத்தார்.

மேலும் தொழுகையை நிறைவேற்றுமாறும், ஸகாத்தை கொடுத்துவருமாறும், நோன்பு வைக்குமாறும் எம்மை ஏவினார். இவைகளுக்காகவே எமது சமுதாயம் எம்மை நோவினை படுத்தியது. மேலும் ஒரே இறைவனான இணையற்ற அல்லாஹ்வை வணங்குவதை விட்டும் சிலைகளை வணங்கும்படி எம்மை ஏவினார்கள். அதற்காக முடியுமான எல்லா துன்பங்களையும் செய்து வந்தார்கள். அவர்களின் கைகளால் இன்னல்கள் துன்பங்களை தாராளமாக அனுபவித்தோம். இனியும் தாங்க முடியாமல் உங்கள் நாட்டுக்கு ஹிஜ்ரத் மேற்கொள்ள முடிவுசெய்தோம்.

பிரசங்கத்தைக் கேட்ட நஜாஷி மன்னன் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவனால் அருளப்பட்ட சில வசனங்களை ஓதிக் காண்பிக்குமாறு பணித்தார்கள். அதன் பிறகு ஜ.்.பர் (ரலி) அவர்கள் சூரா மர்யம் எனும் அத்தியாத்திலிருந்து சில வசனங்களை ஓதிக் காண்பித்தார்கள். இவ்வசனங்கள் நஜாசியின் உள்ளத்தை வெகுவாகத் தாக்கியது. பின்பு அவர் அழுது கொண்டே இவர் தான் முஹம்மத், மஸீஹ் ஈஸா (அலை) அவர்கள் அறிவித்த இறைத்தூதராவார். இந்த இறைத்தூதரின் காலத்தில் என்னை வாழவைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என்று கூறிவிட்டு, மக்கா காபிர்களை அவையை விட்டும் வெளியேற்றுமாறு கூறினார்கள். (முஸ்னத் அஹ்மத் : 1740)

## குரைஷியர்கள் அபூ தாலிபை எச்சரித்தல்

குரைஷி தலைவர்கள் அபூ தாலிபை அணுகி அபூ தாலிப் அவர்களே! எம்மிடத்தில் உமக்கு நல்ல மதிப்பும், மரியாதையும் அந்தஸ்தும் இருக்கிறது. உம் சகோதரரின் மகனை இஸ்லாமியப் பிரச்சாரத்தை விட்டும் தடுக்கும் படி வேண்டினோம். எனினும் நீர் அவரை அதை விட்டும் தடுக்கவில்லை. நிச்சயமாக இனியும் இதை நாம் பொறுத்துக் கொள்ள மாட்டோம். எம் முன்னோரை சாடுகிறார், எம் அறிவாளிகளை மடமை என்கிறார், எம் விக்கிரஹங்களை குறை கூறுகிறார். இவைகளை விட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும் அல்லது உமக்கும் அவருக்கும் எதிராக இவ்விடயத்திற்காக இரண்டில் ஒன்று அழியும் வரை போர்புரிவோம் என்று கூறினர்.

கடுமையான எச்சரிக்கை, அச்சுறுத்தல் அவரை சஞ்சலப்படுத்தியது. அவர் நபி (ஸல்) அவர்களை அழைத்து என் சதோதரனின் மகனே! உன் கூட்டத்தினர் என்னிடம் வந்தார்கள். இவ்வாறு இவ்வாறெல்லாம் சொல்லி விட்டுச் சென்றார்கள். எனவே என்னையும் உன்னையும் பாதுகாத்துக் கொள்வாயாக. என்னால் சுமக்க முடியாத விடயங்களை என் மீது சுமத்த வேண்டாம் என்றார். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், தம் சிறிய தந்தையும் உதவி செய்வதை விட்டு விட்டார், அவர் உதவி செய்வதை விட்டும் சக்தி இழந்து விட்டார் என எண்ணி, என் சிறிய தந்தையே! ‘அல்லாஹ்வின் மீது ஆணையாக, இப்பிரச்சாரத்தை விட்டுவிடுவதற்காக சூரியனை தனது வலக்கரத்திலும், சந்திரனை என் இடக்கரத்திலும் அவர்கள் வைத்தாலும் கூட அல்லாஹ் இந்தப் பிரச்சாரத்தை வெளிப்படுத்தும் வரை அல்லது அதற்காக நான் அழியும் வரை விட மாட்டேன்’ என்று கூறினார்கள். பின் அவர்களை கடந்து சென்று அழுதார்கள் பின் எழுந்து திரும்பி வர எத்தனித்த போது அபூ தாலிப் அவர்களை அழைத்தார்கள். நபி (ஸல்) அவர்கள் தம் சிறிய தந்தையை நோக்கிய போது ‘என் சகோதரின் மகனே! நீ விரும்பிதைச் சொல், அல்லாஹ்வின் மீது ஆணையாக என்றும் உன்னை விட்டுக் கொடுக்க மாட்டேன்’ என்றார்கள்.

## ஹம்ஸா (ரலி) இஸ்லாத்தை ஏற்றல்.

இன்னல்கள், கஷ்டங்கள் நிறைந்த மேகங்களுக்கு மத்தியில் என்ன செய்வதென்று தெரியாமல் வழிதடுமாறிக் கொண்டிருந்தவர்களுக்கு ஒரு மின்னல் பிரகாசித்து வெளிச்சம் காட்டிற்று. அதுதான் ஹம்ஸா (ரலி) அவர்களின் இஸ்லாமிய பிரவேசமாகும். அவர்கள் நபித்துவத்தின் ஆறாம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இஸ்லாத்தை ஏற்றார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்க காரணம், நபி (ஸல்) அவர்கள் ஸபா மலையடிவாரத்தில் ஒரு நாள் நின்று கொண்டிருந்த போது அபூ ஜஹ்ல் அப்பாதை வழியாக வந்தான். அவன் நபி (ஸல்) அவர்களை தகாத வார்த்தைகளால் திட்டினான். பொறுமையின் சிகரமான நபி (ஸல்) அவர்கள் எதுவும் பேசாமல் வாய்மூடி மௌனமாக நின்றார்கள். பின் அபூ ஜஹ்ல் ஒரு கல்லை எடுத்து நபி (ஸல்) அவர்களை தாக்கினான். அதனால் அவர்களின் தலை உடைந்து இரத்தம் வழிந்தன. பின்னர் அபூ ஜஹ்ல் க.்.பாவில் குறைஷியர் அமரும் இடத்துக்குச் சென்று அவர்களுடன் அமர்ந்து கொண்டான். இவை அனைத்தையும் ஸபா மலைக்குப் பக்கத்தில் தன் வீட்டிக்குள் இருந்து அப்துல்லாஹ் பின் ஜத்ஆன் என்பவரின் பணிப் பெண் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது வேட்டைக்குச் சென்று அவ்வழியே வந்து கொண்டிருந்த ஹம்ஸா (ரலி) அவர்களிடம் அப்பெண் அபூ ஜஹ்ல் நபி (ஸல்) அவர்களுக்குச் செய்த கொடுமையினை எடுத்துச் சொன்னாள். இதை கேட்ட ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு கோபம் மேலிட்டது, அவர்கள் குறைஷிய வாலிபர்களில் மிகவும் மதிப்புக்குரியவராகவும், வீரமுடையவராகவும் இருந்தார்கள். அவர்கள் அபூ ஜஹ்லைத் தேடி மிக வேகமாக சென்று கொண்டிருந்தார்கள். எவராலும் அவரை தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர்கள் அபூ ஜஹ்லை தாக்க வேண்டும் என்றே அப்படி வேகமாகச் சென்றார்கள். அப்போது அபூ ஜஹ்ல் க.்.பாவில் தம் தோழர்களோடு அமர்ந்து கொண்டிருப்பதைக் கண்டதும் நாசமாய்ப் போனவனே! நான் முஹம்மதின் மார்க்கத்தில் இருக்கும் போது என் சகோதரரின் மகனான அவரை நீ ஏசுவதா? என்று கேட்டு விட்டு தம் அம்பால் அபூ ஜஹ்லை பலமாகத் தாக்கினார்கள். அத்தாக்குதல் அவனை பெரிதாக காயப்படுத்தியது. இச்சம்பவத்தையடுத்து அபூ ஜஹ்லுடைய தெருவைச் சேர்ந்த பனூ மஹ்சூம் கோத்திரத்தினர் விருண்டெழுந்தனர். இதனை கண்ணுற்ற ஹம்ஸா ரலி அவர்களின் தெருவைச் சேர்ந்த பனூ ஹாஷிம் கோத்திரத்தினரும் விருண்டெழுந்தனர். இதைப் பார்த்த அபூ ஜஹ்ல் அபூ அம்மாரா (ஹம்ஸா)வை விட்டு விடுங்கள், நான் முஹம்மதான இவரின் சகோதரரின் மகனை இழிவாக மிகக் கேவலமாக திட்டினேன் என்றான். முதலில் ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்கக் காரணம் தனது அன்பிற்குரியவர் இழிவுபடுத்தப்படுவதை மறுத்ததே ஆகும். அதன் பின் இறைவன் அவரின் உள்ளத்தை தெளிவுபடுத்தினான். எனவே அறுந்து போகாத கயிற்றை அவர் பிடித்துக் கொண்டார். இவருடைய இஸ்லாமியப் பிரவேசம் முஸ்லீம்களுக்கு மிக மிக வெற்றியாகவும், கண்ணியமாகவும் இருந்தது. (நூல் : தபரானீ , ஹாகிம்) (இச்சம்பவம் அறிவிப்பாளர் அடிப்படையில் பலவீனமானதாகும்).

## உமர் (ரலி) அவர்களின் இஸ்லாமிய பிரவேசம்

நுபுவ்வத் ஆறாம் ஆண்டு கடைசிப் பகுதியில் இஸ்லாத்திற்கு இன்னும் பலம் கூடியது. ஹம்ஸா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற அதே வருடத்தின் கடைசிப் பகுதியில் இஸ்லாத்தின் பரம எதிரியாக இருந்த உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்கள்.

உமர் (ரலி) அவா்களின் மைத்துனரான (சகோதரியின் கணவா்) ஸஈத் பின் ஸைத் (ரலி) அவா்கள் : “உமர் இஸ்லாத்தை ஏற்கமுன் அதற்குக் கடும் எதிர்ப்புக் காட்டக்கூடியவராக இருந்ததை நான் கண்டுள்ளேன்” என்று கூறினார்கள். தனது மைத்துனா் ஸஈத் இஸ்லாத்தை ஏற்றதும் அவா்களைக் கட்டி வைத்துத் துன்புறுத்தினார்கள்.

உமர் (ரலி) அவா்களின் இந்த கடுமைப் போக்கிற்குப் பின்னால் அவா்களிடம் இரக்கக் குணமும் இருந்தது. உம்மு அப்தில்லாஹ் பின்த் அபீ ஹஸ்மா (ரலி) அறிவிக்கிறார்கள் :

“நாங்கள் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் போகத் தயாராகிக் கொண்டிருந்தோம். என்னுடைய கணவர் ஆமிர் தனது தேவைக்காக வெளியே சென்றிருந்தார். அப்போது அவ்வழியாக வந்த உமர் எங்களைக் கண்டு சற்று நின்றார்கள்.- நாங்கள் அவரிடமிருந்து கடுமையான வேதனைகளை அனுபவித்திருக்கிறோம்- . அவர் என்னைப் பார்த்து : உம்மு அப்தில்லாஹ் நீங்கள் (ஹஜ்ரத்) புறப்படவா (தயாராகின்றீா)? எனக் கேட்டார். ஆதற்கு நான் : “அல்லாஹ்வின் மீது சத்தியமாக நாம் புறப்படப் போகின்றோம். நீங்கள் எங்களைத் துன்புறுத்தி அடக்கியாண்டீர்கள். அல்லாஹ் எங்களுக்கு ஒரு விடிவு தரும் வரை அவனது பூமியில் நாம் வெளிப்பட்டுச் செல்லப்போகிறோம்” என்று கூறினேன். அப்போது அவர் : அல்லாஹ் உங்களுடன் இருப்பானாக என்று கூறினார்கள். முன் எப்பொழுதும் நான் கண்டிராத ஒரு மென்மையை அவரிடத்தில் நான் பார்த்தேன்” (ஸீரத் பின் ஹிஷாம்1 - 342)
நபி (ஸல்) அவர்களும் இறைவனிடம் உமரைக் கொண்டு அவனது மார்க்கத்திற்கு உதவுமாறு பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். “இறைவா உமர், அபூ ஜஹ்ல் ஆகிய இருவரில் உனக்கு விருப்பமானவரைக் கொண்டு இஸ்லாத்தை நீ பலப்படுத்து” என்று கூறுவார்கள். (அறிவிப்பவர் : இப்னு உமர் (ரலி). ஆதாரம் : திர்மிதி 3681) எனவே அல்லாஹ் நபியவர்களின் துஆவை ஏற்று அதனை உமருக்கு நாடி விட்டான். அவர்கள் இஸ்லாத்தில் நுழைந்தார்கள்.
உமர் (ரலி) இஸ்லாத்தில் இணைந்ததன் பின்னரே முஸ்லிம்கள் தைரியமாக க.ஃபாவில் தொழத் துவங்கினார்கள். இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறினார்கள் : உமர் இஸ்லாத்தில் இணைந்தது முதல் நாம் கண்ணியமாக வாழ்ந்தோம். (புஹாரி :3863)
மேலும் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறினார்கள் : உமர் இஸ்லாத்தில் இணையும் வரை நாம் க.ஃபாவில் பகிரங்கமாகத் தொழ முடியாமல் இருந்தோம். உமர் இஸ்லாத்தில் இணைந்ததும் அவர்களுடன் போரிட்டு எங்களுக்கு தொழ இடம்கொடுத்தார்கள்.
பிற்காலத்தில் இஸ்லாத்திற்கு நிறைய சேவைகள் செய்து நபியவர்களால் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டவர்களில் ஓருவரானார். அத்துடன் நபியவர்களுடன் அனைத்து யுத்தங்களிலும் கலந்து கொண்டு நபி (ஸல்), அபூ பக்ர் (ரலி) ஆகியோருக்குப் பின்னால் இஸ்லாத்தின் இரண்டாவது கலீபாவாக நீதமான ஆட்சியொன்றை நடத்தினார்கள்.

## அபூ தாலிப் பள்ளத்தாக்கில் நபி (ஸல்) அவர்களும் குடும்பத்தினரும் மூன்று வருட முற்றுகையிடப்படல்

நபி (ஸல்) அவர்கள் தமது அழைப்புப் பணியில் உறுதியாக இருப்பதைக் கண்ட குரைஷியர்கள் மனங்கொதித்துக் கொண்டிருந்தார்கள். நபித்துவம் 7 ஆண்டு நபி (ஸல்) அவர்களையும் அவர்களின் குடும்பத்தினரான பனூ ஹாஷிம், பனூ முத்தலிப் அனைவரையும் அனைத்து விதமான தடைகளையும் விதித்து முற்றுகையிட தீர்மானித்தனர். அத்தோடு அவர்களுடன் கொடுக்கல், வாங்கலோ திருமண ஒப்பந்தங்களோ செய்வதில்லை என்றும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அவைகளை ஒரு ஏட்டில் எழுதி க.ஃபாவில் தொங்கவும் விட்டார்கள்.
இதனையடுத்து நபியவர்களின் சிறியதந்தை அபூ தாலிப் பனூ ஹாஷிம் பனுல் முத்தலிப் ஆகிய இரு குடும்பங்களைச் சேர்ந்த அனைவருக்கும் தனது கனவாயில் ஒன்று கூடுமாறு அழைத்தார்கள். அபூ லஹப் மற்றும் அவனுடைய மகன்மாரைத் தவிர ஏனைய அனைவரும் அந்த முற்றுகைக்குள்ளே நுழைந்தனர்.
முற்றுகை கடுமையானது, அவர்களிடம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தும் அற்றுப்போயின, மக்காவுக்கு வரும் உணவுப் பொருட்கள் மற்றும் வியாபாரப் பொருட்கள் அனைத்தையும் விரைந்து சென்று தமக்காகவே வாங்கிக் கொள்வதில் எதிரிகள் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். உணவுப் பற்றாக்குறையை தாங்க முடியாமல் செடி கொடிகளிலுள்ள இலை தழைகளை சாப்பிட்டு வந்தனர்.
அத்தோடு சிறு குழந்தைகளும், பெண்களும் பசிக் கொடுமையால் அவலக்குரல் எழுப்புவதையும் கேட்கக் கூடியதாக இருந்தது. எந்தப் பொருளும் அவர்களை

இரகசியமாகவே வந்து சேரும் நிலையிருந்தது. மேலும் சங்கைப் படுத்தப்பட்ட நான்கு மாதங்களில் மாத்திரமே பள்ளத்தாக்கில் இருந்து வெளிவந்து தேவையான பொருட்களை வாங்கிச் செல்லும் நிலையிருந்தது. அத்தோடு மக்காவுக்கு வெளியிலிருந்து வரும் வியாபாரக் குழுவிடம் மாத்திரமே பொருட்கள் வாங்கிக் கொள்ளும் நிலையில் அவர்கள் இருந்தார்கள். நிலைமை இவ்வாறு இருக்க அவர்கள் எதையும் வாங்க முடியாத அளவிற்கு பொருட்களின் விலைகளை உயர்த்தி விற்பனை செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

பெரும்பாலும் ஹகீம் பின் ஹிஸாம் தமது சித்தியான கதிஜா அன்னைக்கு கோதுமையை சுமந்து செல்லக் கூடியவராக இருந்தார். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு முறை அபூ ஜஹ்ல் குறிக்கிட்டு அதை தடுக்க முயற்சித்த போது அபுல் புஹ்திரி என்பவர் அவர்களுக்கு மத்தியில் தலையிட்டு அக்கோதுமையை தமது சித்தியான அன்னை ஹதீஜாவுக்கு ஹகீம் அவர்கள் எடுத்துச் செல்ல உதவினார்கள்.
சுமார் 3 வருடங்களுக்குப் பின் குரைஷிகளில் நல்மணம் படைத்த சிலரின் முயற்சியால் முற்றுகை முடிவுக்கு வந்தது. இச்சமாதானத்தில் ஹிஷாம் பின் அம்ரு, முத்இம் பின் அத்ய், அபுல் புஹ்திரி ஆகய மூவருக்கும் முக்கிய பங்குண்டு.

## கதீஜா (ரலி) அவர்களின் மரணம்

இதனைத் தொடர்ந்து சில நாட்களின் பின்னர் நுபுவ்வத் 10ம் ஆண்டு இறுதியில் நபி(ஸல்) அவர்களின் அருமை மனைவி அன்னை கதீஜா இறைவனடி சேர்ந்தார்கள். அன்னை கதீஜா அவர்களோ தமது உடல், உடமை அனைத்தையுமே நபி (ஸல்) அவர்களுக்கு உதவி புரிவதிலும், இறைவன் பாதையிலும் அர்பணித்திருந்தார்கள். மேலும் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றவர்களும் அவர்களே, மேலும் இறைவனிடத்தில் இருந்து ஜிப்ரில் (அலை) மூலம் ஸலாமும் எத்திவைக்கப்பட்டது. அன்னை கதீஜாவின் மரணம் திடீர் தாக்குதல் போன்றும், நபி (ஸல்) அவர்களுக்கு தாங்க முடியாத கவலையாகவும் இருந்தது. மேலும் இங்கிருந்து தான் நபி (ஸல்) அவர்கள் மீது குரைஷியர்கள் இன்னல்களை ஆரம்பித்தனர். ஒரு முறை குரைஷியர்களின் மோசமான ஒருவன் நபி (ஸல்) அவர்களின் தலையில் மண்ணைப் போட்டான். தலையில் மண் இருக்க வீட்டில் நுழைந்தார்கள். உடனே நபிகளாரின் புதல்விகளில் ஒருவர் அழுதவண்ணம் தலையில் உள்ள மண்ணை அகற்றினார்கள். என் அருமை மகளே! அழாதே உனது தந்தையை இறைவன் பாதுகாப்பான் என்றார்கள்.

## அபூ தாலிபின் மரணம்

இதே வருடத்தின் இறுதிப்பகுதியில் நபியவர்களை சுமார் 40 வருடங்கள் பராமரித்து வந்த அன்னாரின் சிறியதந்தை அபூ தாலிபும் மரணமடைந்தார்கள். இது நபியவர்களுடைய கவலையை இன்னும் அதிகரித்தது. அபூ தாலிபின் மரணத்தின் போது நடந்த நிகழ்வை இமாம் புஹாரி (ரஹ்) தமது ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள். முஸய்யப் இப்னு ஹஸ்ன் இப்னி அபீ வஹ்ப் (ரலி) அறிவித்தார் : அபூ தாலிப் அவர்களுக்கு மரண வேளை வந்துவிட்டபோது நபி(ஸல்) அவர்கள் அவரிடம் சென்றார்கள். அப்போது அபூ ஜஹ்ல் அவரருகே இருந்தான். நபி(ஸல்) அவர்கள், “என் பெரிய தந்தையே! “லா இலாஹ இல்லல்லாஹ்” - வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை- என்று சொல்லுங்கள். இச்சொல்லை (நீங்கள் சொல்லிவிட்டால் அதை) வைத்து (மறுமையில் நரகத்திலிருந்து விடுதலை கேட்டு) உங்களுக்காக அல்லாஹ்விடம் நான் வாதாடுவேன்” என்று கூறினார்கள். அப்போது அபூ ஜஹ்லும் அப்துல்லாஹ் இப்னு அபீ உமய்யாவும், “அபூ தாலிபே! (பெரியவர், உங்கள் தந்தை) அப்துல் முத்தலிபின் மார்க்கத்தையா புறக்கணிக்கப் போகிறீர்கள்?” என்று கேட்டனர். அவ்விருவரும் இவ்வாறே தொடர்ந்து

அவரிடம் பேச இறுதியில் அவர், "(என் இறப்பு என் தந்தை) அப்துல் முத்தலிபின் மார்க்கத்தில் தான் (நிகழும்)" என்று அவர்களிடம் கூறினார். எனவே, நபி(ஸல்) அவர்கள், "நான் உங்களுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரக்கூடாது என்று) எனக்குத் தடைவிதிக்கப்படும் வரை உங்களுக்காகப் பாவமண்ணிப்பு கோருவேன்" என்று கூறினார்கள். அப்போதுதான், "இணைவைப்பவர்கள் நரகவாசிகள் தாம் என்பது தெளிவாகிவிட்ட பின்பும் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோருவதற்கு, அவர்கள் உறவினர்களாயிருந்தாலும் கூட இறைத்தூதருக்கும் இறை நம்பிக்கையாளர்களுக்கும் உரிமையில்லை" என்னும் (09: 113) திருக்குர்ஆன் வசனமும், "(நபியே!) நீங்கள் விரும்பியவரை உங்களால் நேர்வழியில் செலுத்தி விட முடியாது" என்னும் (28:56) திருக்குர்ஆன் வசனமும் அருளப்பட்டன. (புஹாரி : 3884)

## நபியவர்களின் தாஇப் பயணம்

அபூ தாலிப், ஹதீஜா (ரலி) ஆகியோரின் மறைவுக்குப் பின் நபி (ஸல்) அவர்களுக்கும் ஸஹாபாக்களுக்கும் இணைவைப்பாளர்களின் தொல்லைகளும் துன்புறுத்தல்களும் அதிகமாயின. எனவே நபியவர்கள் மக்காவிற்கு வெளியே சென்று அழைப்புப்பணி செய்ய விரும்பினார்கள். அதற்காக செல்வமும் செழிப்பும் மிக்க தாஇப் நகரைத் தெரிவு செய்து அதை நாடிச் சென்றார்கள். ஆனால் செல்வமும், அதிகாரமும் சத்தியத்தை ஏற்கும் பாதையில் பெரும்பாலும் தடைக்கல்லாகவே விளங்கி வந்திருப்பதைப் போன்றே இங்கும் அவை விளங்கின. ஒரு தலைவர், "தன்னுடைய தூதராக ஆக்குவதற்கு உம்மைத் தவிர வேறெவரும் இறைவனுக்குக் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார். இன்னொருவர், "நான் உம்மிடம் பேச முடியாது. ஏனெனில் நீர் உண்மையாளராக இருப்பின் உம்மிடம் பேசுவது மரியாதைக்கு மாற்றமானதாகும். (உயர்ந்தவர்களிடம் பேச என்னைப் போன்ற சிறியவர்கள் முன்வருவது மரியாதைக்குறைவாகும்). நீர் பொய்யராக இருப்பின் (இப்படி எண்ணுவதிலிருந்து இறைவன் காப்பாற்றட்டும்) என்னிடம் நீர் பேசுவதற்கு அருகதை இல்லாதவராவீர்!" என்று கூறினார்.

இந்தப் பெரியவர்கள் இப்படி இந்த அழைப்பைப் பரிகாசங்களால் புறக்கணித்துவிட்டனர். இத்துடன் நில்லாமல் நகரத்தின் குண்டர்களையும் தீயவர்களையும் அண்ணலாருக்கு எதிராகத் தூண்டிவிட்டார்கள். அவர்கள் மக்கள் நடமாட்டம் நிறைந்த கடைவீதியில் வைத்து அண்ணலாரைக் கேலியும் கிண்டலும் செய்தார்கள், கல்லால் அடித்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் மலைகளுக்குப் பொறுப்பான மலக்குகளுடன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வந்து இத்துன்பத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்த மக்காவாசிகளை அங்குள்ள இரு மலைகளையும் நெறுக்கி அழிக்க அனுமதி கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் பின்வருமாறு பதில் கூறினார்கள் : "(வேண்டாம்) ஆயினும், இந்த (நகரத்து) மக்களின் சந்ததிகளில் அல்லாஹ்வுக்கு எதையும் இணை கற்பிக்காமல் அவனை மட்டுமே வணங்குபவர்களை அல்லாஹ் உருவாக்குவான் என்று நம்புகிறேன் (எனவே, அவர்களை தண்டிக்க வேண்டாம்)" என்று கூறினார்கள். (புஹாரி : 3231)

## இறைவன் பால் அழைப்பதற்காக பல் வேறு இடங்களுக்கு நபி (ஸல்) அவர்கள் வெளியாகுதல்

நபி (ஸல்) அவர்கள் மக்கா திரும்பியதும் பல்வேறு கூட்டத்தார்கள் வசிக்கும் இடங்களுக்குச் சென்றார்கள். மேலும் மக்காவை விட்டும் வெளியில் சென்றார்கள். இங்கும் அங்கும் இருக்கும் பிரயாணிகளைச் சென்று சந்திப்பார்கள். ஒரே இறைவனின் மீது நம்பிக்கை கொண்டு அவனையே வணங்க வேண்டும் என்று அழைப்பார்கள்.

# இஸ்ரா மி.்.ராஜ் பிரயாணம்

இஸ்ரா, மி.்.ராஜ் என்பது நபி (ஸல்) அவா்கள் பூமியிலிருந்து ஏழு வானங்களையும் கடந்து இறைவனைத் தரிசிக்கச் சென்ற பிரயாணமாகும். இந்நிகழ்வு அல்குர்ஆனிலும் நபி மொழிகளிலும் பதிவாகியுள்ளது.

**இஸ்ரா** : நபியவா்கள் மக்காவிலிருந்து பலஸ்தீனத்திலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு ஜிப்ரீல் (அலை) அவா்களின் தோழமையுடன் சென்ற இராப்பயணம். (ஸூரதுல் இஸ்ரா.். : 1)

**மி.்.ராஜ்** : மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து ஏழு வானங்களையும் கடந்து சென்று இறைவனை தரிசித்த பயணம். (புஹாரி : 3887, முஸ்லிம் : 164)

புராக் எனும் வாகனத்தில் ஜிப்ரில் (அலை) அவர்களின் தோழமையுடன் நபி (ஸல்) அவர்கள் பைதுல் முகத்தஸ் (மஸ்ஜிதுல் அக்ஸா) எனும் பள்ளி வாசலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். பைதுல் முகத்தஸை சென்றடைந்ததும் நபிமார்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்தினார்கள். அச்சமயம் தனது வாகனத்தை பள்ளியின் ஒரு புறமாக கட்டி வைத்தார்கள். அதன் பின் முதல் வானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கே தந்தை ஆதம் நபியை சந்தித்தார்கள். அவர்களின் வலப்புறத்தில் நல்லோர்களின் உயிர்களையும், இடப்புறத்தில் தீயோர்களின் உயிர்களையும் பார்த்தார்கள். பின்பு இரண்டாவது வானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அங்கே ஈஸா (அலை) யஹ்யா (அலை) இருவரையும் சந்தித்தார்கள். பிறகு மூன்றாவது வானத்தில் யூசு.்.ப் (அலை) அவர்களைக் கண்டார்கள். நான்காவது வானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் அங்கே இத்ரீஸ் (அலை) அவர்களைப் பார்த்தார்கள். பின்னர் ஐந்தாவது வானத்தில் ஹாரூன் (அலை) அவர்களைச் சந்தித்தார்கள். பிறகு ஆறாவது வானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கே மூஸா (அலை) அவர்களைப் பார்த்தார்கள். அவர்களை கடந்து செல்லும் போது அழ ஆரம்பித்து விட்டார்கள். ஏன் அழுதீர்கள் என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் எனக்குப் பின்னால் அனுப்பப்பட்ட சிறுவர் என்னுடைய உம்மத்தினர்களை விட அதிகமான எண்ணிக்கையில் அவருடைய உம்மத்தினர் சுவர்க்கத்தில் நுழைவா் என்பதை எண்ணி அழுதேன் என்று கூறினார்கள். பிறகு அவர்களை ஏழாவது வானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. அங்கே இப்ராஹீம் (அலை) அவர்களைச் சந்தித்தார்கள். பிறகு ஸித்ரதுல் முன்தஹாவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட பிறகு ஏழாம் வானத்திற்கு மேல் இருக்கும் பைதுல் ம.்.மூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கே ஜிப்ரீல் (அலை) அவர்களை அவர்களின் சுயவடிவத்தில் அறுநூறு இறக்கைகளுடன் பார்த்தார்கள். இதைத் தான் அல்லாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்:

﴿ وَلَقَدْ رَءَاهُ نَزْلَةً أُخْرَىٰ ﴿١٣﴾ عِندَ سِدْرَةِ ٱلْمُنتَهَىٰ ﴾ النجم: ١٣ - ١٤

***அன்றியும், நிச்சயமாக அவர் மற்றொரு முறையும் (ஜிப்ரயீல்) இறங்கக் கண்டார். ஸித்ரதுல் முன்தஹா எனும் (வானெல்லையிலுள்ள) இலந்தை மரத்தருகே. (அந் நஜ்ம்:13-14)***

அதன் பின் அவர்கள் இறைவனோடு உரையாடினார்கள். இறைவன் நாடியதையும் அவர்களுக்கு கொடுத்தான். நபி (ஸல்) அவர்களின் கண்குளிர்ச்சியாக இருந்த தொழுகையும் அன்றுதான் வழங்கப்பட்டது. விடிந்ததும் நபி (ஸல்) அவர்கள் தன் கூட்டத்தாரிடம் நடந்ததையும் தான் பார்த்ததையும் எடுத்துச் சொன்னார்கள். இதைச் சொன்னதுமே அவர்களின் பொய்ப்பித்தல் அதிகமானது. பைதுல் முக்தஸின் அடையாளங்களை வர்ணிக்குமாறு கூட்டத்தார்கள் கேட்டார்கள். இறைவன் நபி (ஸல்) அவர்களுக்கு எடுத்துக் காட்டியதும் அந்த அடையாளய்களை மக்களுக்கு எடுத்து வைத்தார்கள். அந்தக் காபீரகளோ நபியவர்களுக்கு எந்தப் பதிலையும் கூற முடியாமல்

இருந்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் செல்லும் போது நடந்தவைகளையும், மீண்டு வரும் போதும், பிரயாணம் முடிந்து திரும்பிய போது நடந்தவைகளையும், மேலும் அவர்கள் சென்ற வாகனத்தை பற்றியும் தெளிவாக மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். நபி (ஸல்) அவர்கள் சொன்னது போன்றே அனைத்தும் இருந்தது. வழிகேட்டைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்கு அதிகரிக்கவில்லை. மேலும் அநியாயக் காரர்களுக்கு நிராகரிப்பைத் தவிர வேறு எதுவுமில்லை.

**மி.ஃ.ராஜ் பயணத்தின் போது நடந்த சில நிகழ்வுகள் :**

(1) இறைவனை சந்தித்துப் பேசினார்கள், என்றாலும் அவனைப் நேரடியாக வெற்றுக் கண்ணால் பார்க்கவில்லை. இவ்வுலகத்தில் அவனை யாரும் வெற்றுக் கண்ணால் பார்க்க சக்தி பெறமாட்டார்கள்.

(2) வானவர்கள் இறைவனை தவாப் செய்யும் “அல்-பைதுல் ம.ஃ.மூர்” எனும் மாலிகையைக் கண்டார்கள்.

(3) நபியவர்களுக்கு இரண்டு கிண்ணங்கள் வழங்கப்பட்டு ஒன்றைத் தெரிவு செய்யும்படி கூறப்பட்டது. ஒன்றில் பாலும் மற்றதில் மதுவும் இருந்தது. நபியவர்கள் பால் கிண்ணத்தைத் தெரிவு செய்த போது “இதுதான் இயற்கையான சுபாவம்” என்று ஜிப்ரீல் (அலை) கூறினார்கள்.

(4) சுவர்க்கத்தையும் அதிலுள்ள இன்பங்கள் சிலவற்றையும், நரகத்தையும் அதிலுள்ள தண்டனைகள் சிலவற்றையும் நபியவர்களுக்குக் காட்டப்பட்டது.

(5) இரண்டாவது தடவையாக நபியவர்களின் நெஞ்சு பிளக்கப்பட்டு ஸம்ஸம் நீரால் சுத்தம் செய்யப்பட்டது.

## முதலாம் அகபா உறுதி மொழி

மினாவின் அகபாவிற்கு அருகாமையில் நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். அங்கே சிலர் உரையாடுவதை செவிமடுத்தார்கள். அதன் பின் அவர்களிடம் சென்றார்கள். மதீனாவைச் சேர்ந்த கஸ்ரஜ் கூட்டத்தாரின் ஆறு வாலிபர்கள் அங்கே இருந்தார்கள். அவர்களின் பெயர்கள் பின் வருமாறு:

1-அஸ்அத் பின் ஸுராரா (பனூ நஜ்ஜார் என்ற கோத்திரத்தைச் சேர்ந்தவர்)

2-அவ்ப் பின் அல் ஹாரிஸ் பின் ரிபாஆ பின் அப்ரா ( பனூ நஜ்ஜார் கோத்திரம்)

3-ரா.ஃ.பி பின் மாலிக் பின் அல் அஜ்லான் (பனூ ஸுரைக் கோத்திரம்)

4-கித்பா பின் ஆமிர் பின் ஹதீதா (பனூ ஸலமா கோத்திரம்)

5-உக்பா பின் ஆமிர் பின் ரிஆப் (ஹராம் பின் க.ஃ.ப் கோத்திரம்)

6-ஜாபிர் பின் அப்தில்லாஹ் பின் ரிஆப் (பனூ உபைத் கனம் கோத்திரம்)

மதீனாவாசிகளின் நல்ல அதிர்ஷ்டம் என்னவென்றால் அவர்கள் தங்களின் உடன்படிக்கைக் காரர்களான மதீனாவில் வசிக்கும் யஹூதிகள் பின்வருமாறு கூறுவதைக் கேட்டிருந்தார்கள். இந்தக் காலத்தில் நபி ஒருவர் அனுப்பப்படுவார். அவர் வெளிப்படும் போது நாங்கள்

அவரைப் பின்பற்றுவோம், அவருடன் சேர்ந்து ஆத், இரம் கூட்டத்தினர் கொல்லப்பட்டதைப் போன்று உங்களையும் கொல்வோம்.
அந்த மக்களை நபி (ஸல்) அவர்கள் அடைந்த போது நீங்கள் யார்? என்று வினவினார்கள். நாங்கள் கஸ்ரஜ் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று பதில் அளித்தனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள் யூதர்களிடம் உடன்படிக்கை செய்தவர்களா? என்று கேட்டார்கள். அவர்கள் ஆம் என பதிலளிக்க நீங்கள் உட்காருங்கள் உங்களிடம் நான் பேச வேண்டும் என்று கூறினார்கள். சரி என்று ஆமோதித்து நபி (ஸல்) அவர்களுடன் உட்காந்தார்கள். இஸ்லாத்தின் கோட்பாடுகளையும் தனது அழைப்பையும் அவர்களுக்கு விளக்கி அல்லாஹ்வின் பால் அவர்களை அழைத்தார்கள். குர்ஆனையும் ஓதிக் காண்பித்தார்கள். அவர்கள் ஒருவர் மற்றவர்களிடம் அல்லாஹ்வின் மீது ஆணையாக யூதர்கள் கூறிக் கொண்டிருக்கும் நபி இவர்தான் என்பதை அறிவீர்கள். யூதர்கள் உங்களை முந்த விட்டு விடாதீர்கள். இவரின் அழைப்பை உடனடியாக ஏற்றுக் கொள்ளுங்கள். என்று அவர்கள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.
மதீனா வாசிகளில் உள்ள நல்ல அறிவாளிகளில் சிலர் இதற்கு முன் நடந்த உள்நாட்டுப் போரால் களைத்துப் போயிருந்தார்கள். அந்தப் போரின் தீ இன்னும் அணையவில்லை. எனவே நபி (ஸல்) அவர்கள் அழைப்பு, போரை நிறுத்தி அமைதி விளைவிக்க காரணமாக அமையும் என்று நினைத்தார்கள். அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்: எங்கள் கூட்டத்தைப் போன்று தங்களுக்கு மத்தியில் விரோதமும் பகைமையும் கொண்டவர்கள் யாருமில்லை. அல்லாஹ் உங்கள் மூலமாக அவர்களை ஒற்றுமையாக்குவான் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் எங்கள் கூட்டத்தாரிடம் சென்று உங்களின் அழைப்பை முன்வைப்போம் நாங்கள் உங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டதையும் அவர்களிடம் கூறுவோம். உங்கள் அழைப்பினால் இறைவன் அவர்களை ஒன்று சேர்த்து விட்டால் உங்களை விட மிக கண்ணியமானவர் யாரும் இருக்க மாட்டார்.
அவர்கள் மதீனா திரும்பிச் சென்ற போது இஸ்லாத்தின் அழைப்பைத் தங்களுடன் சுமந்து சென்றார்கள். அன்ஸாரிகளிடன் வீடுகளில் நபி (ஸல்) அவர்களின் பெயர் பேசப் படாத வீடே எதுவும் இல்லை.
இச்சந்திப்பு நடந்து அடுத்த ஆண்டில் முதலாவது உடன்படிக்கை நபியவா்களுக்கும் அன்ஸாரிகளுக்கும் மத்தியில் நடைபெற்றது. இதில் கஸ்ரஜ் கூட்டத்திலிருந்து 10, ஔஸ் கூட்டத்தைச்சேர்ந்த 2 அடங்கலாக 12 அன்ஸாரிகள் கலந்து கொண்டாா்கள். இதில் யுத்தம் பற்றி கூறப்படாமல் வேறு 6 விடயங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் நிறைவேறியது. (பார்க்க : புஹாரி : 3893, முஸ்லிம் : 1709). யுத்தம் பற்றி இதில் கூறப்படாததால் இதற்கு “பெண்களின் பைஅத்” எனப் பெயரிடப்பட்டது.

## நபி (ஸல்) அவர்கள் அன்னை ஆயிஷாவை திருமணம் செய்தல்

நபித்துவத்தின் 11ம் ஆண்டில் அன்னை ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். அப்போது அன்னை ஆயிஷாவின் வயது ஆறு. ஹிஜ்ரி முதலாம் ஆண்டு ஷவ்வால் மாதம் அவர்களுடன் இல்லற வாழ்கை ஆரம்பித்தார்கள். அப்போது அன்னைக்கு வயது ஒன்பது.

## முஸ்அப் பின் உமைர் (ரலி)

முதலாம் அகபா உறுதி மொழி முடிந்து முஸ்லிம்கள் மதீனாவிற்கு செல்லும் போது அவர்களுடன் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். அவர் பெரும் பணக்கார சூழலில் வளந்தவர். அவர் குதிரை ஏறிச் சென்றால் அவருடைய அடிமையும் அவர் பின்னே செல்வார். விலையுயர்ந்த ஆடைகளை அணியாமல் வெளிச் செல்ல மாட்டார். ஆனால் சிறப்பு மிக்க ஈமானின் சூழ்நிலையால் அவர் வாழ்க்கை மாறிவிட்டதும் ஆடம்பர வாழ்க்கையை உதறிவிட்டார். இஸ்லாத்தை அழைப்புக் கொடுக்க

மதீனா சென்ற பொழுது அவரது தோளில் முள் வைத்துப் பொறுத்தப்பட்ட துண்டுத் துணிதான் இருந்தது.

## இரண்டாம் அகபா உறுதி மொழி

நபித்துவத்தின் 13ம் ஆண்டு மதீனாவாசிகளில் எழுபதுக்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் ஹஜ்ஜை நிறைவேற்ற வந்தார்கள். அவர்கள் தங்களுடைய கூட்டத்தாரான முஷ்ரிகீன்களுடன் (இணைவைப்பவர்களுடன்) சேர்ந்து வந்தார்கள்.
மக்கா வந்தடைந்த பொழுது நபி (ஸல்) அவர்களுக்கும் மதீனா முஸ்லீம்களுக்கும் மத்தியில் ரகசியத் தொடர்புகள் ஏற்பட்டன. அதன் பின் மினாவில் ஜம்ரதுல் ஊலா இருக்கும் அகபா என்ற இடத்தில் "தஷ்ரீக்" நாட்களின் மத்திய நாளில் (12 துல்ஹஜ்) அனைவரும் ஒன்று கூடுவது என்றும் இந்தக் கூட்டம் இரவின் இருளில் மிக இரகசியமாக நடைபெற வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.
க.ஃப் பின் மாலிக் அல் அன்சாரி (ரலி) கூறுகிறார்கள்: நாங்கள் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டோம். தஷ்ரீக் நாட்களின் மத்திய நாளில் நபி (ஸல்) அவர்கள் வாக்களித்த இரவும் வந்து விட்டது. எங்களுடன் அப்துல்லா பின் அம்ரு பின் ஹராம் இருந்தார்கள். அவர்கள் எங்கள் தலைவர்களில் ஒருவர். கண்ணியவான்களில் ஒரு கண்ணியவான். எங்களுடன் அவரையும் அழைத்துச் சென்றோம். இந்த ரகசிய ஒன்றுகூடலை எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த பிற முஷ்ரிக்களிடம் நாங்கள் மறைத்து விட்டோம். அப்துல்லாஹ் பின் அம்ரிடம் நாங்கள் உரையாடினோம். அபூ ஜாபிர் நீங்கள் எங்கள் தலைவர்களில் ஒருவர். எங்கள் கண்ணியவான்களில் ஒருவர். நாளை நீங்கள் நரகத்திற்கு விறகாக மாறுவதை நாங்கள் விரும்பவில்லை என்று கூறி இஸ்லாத்திற்கு அழைத்தோம், அகபாவில் நபி (ஸல்) அவர்கள் எங்களைச் சந்திக்கப் போவதைக் கூறினோம். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். எங்களுடன் அகபா சந்திப்பில் கலந்து கொண்டார். பின்னர் அவரும் முழு பொறுப்பாளியாகிவிட்டார்.
கஅப் (ரலி) கூறுகிறார்கள்: அன்றைய இரவு நாங்கள் எங்கள் கூட்டத்தாருடன் எங்கள் கூடாரங்களில் உறங்கச் சென்றோம். இரவின் முன்பகுதி கழிந்ததும் எங்கள் கூடாரங்களிருந்து காட்டுப்புறாக்கள் ஊடுருவிச் செல்வது போல் மறைந்து மறைந்து வெளிக் கிளம்பினோம். இவ்வாறு அகபாவில் குறிப்பிட்ட இடத்திற்கு சென்றடைந்தோம். நாங்கள் 73 ஆண்களும் 2 பெண்களும் இருந்தோம். இப்னு நஜ்ஜார் பனு மாஜின் என்று அழைக்கப்படும் கோத்திரத்தைச் சேர்ந்த உம்மு அம்மாரா என்ற நஸீபா பின்த் கஅப் என்ற பெண்மணியும், பனூ ஸலமா என்ற கோத்திரத்தைச் சேர்ந்த உம்மு முனீ.ஃ எனப்படும் அஸ்மா பின்த் அம்ர் என்பவர் இரண்டாம் பெண்மணியாக அகபாவில் ஒன்று கூடி நபி (ஸல்) அவர்களை நாங்கள் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். நபி (ஸல்) அவர்கள் தனது சிறிய தந்தையார் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் அவர்களுடன் சேர்ந்து வருகை தந்தார்கள். அவர்கள் அதுவரை முஸ்லிமாகவில்லை, இருப்பினும் தனது சதோதரர் மகனின் விடயத்தில் கலந்து கொள்ள விரும்பினார்கள். அவர்களைப் பலப்படுத்தினார்கள். அப்பாஸ் தான் பேச்சைத் துவங்கினார்கள்.

### பேச்சுவார்த்தை ஆரம்பம், பொறுப்பின் முக்கியத்துத்தை பற்றிய அப்பாஸ்(ரலி) அவர்களின் விளக்கம்

சபையோர் அனைவரும் கூடியதும் மார்க்க மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தத்தை உறுதி செய்யும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயிற்று. முதல் பேச்சாளர் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் அவர்கள் தான் இந்த ஒப்பந்தத்தின் மூலமாக மதீனா வாசிகளின் தோள்களில் போடப்படும் பொறுப்பின் முக்கியத்துவத்தைத் விளக்கி உரையாற்றினார்கள்.

அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: கஜ்ரத் கோத்திரத்தாரே! ( கஜ்ரஜ், அவ்ஸ் இரண்டு கூட்டத்தினரையும் இணைத்து அன்ஸாரிகள் கஜ்ரஜ் என்றழைப்பது அவர்களின் வழமை) முஹம்மத் (ஸல்) அவர்கள் எங்களைச் சேர்ந்தவர் என்பது நீங்கள் அறிந்ததே. அவரைப்

பற்றி எங்களைப் போன்ற எண்ணம் உடைய எங்கள் கூட்டத்தாரிடமிருந்து அவரைப் பாதுகாத்துவருகிறோம். அவர் தமது கூட்டத்தாரிடத்ததில் கண்ணியத்துடனேயே இருந்து வருகிறார். தனது ஊரில் பாதுகாப்பாகவே இருக்கிறார். ஆனால் இப்போது உங்களுடன் இணைந்து கொள்ளவே விரும்புகிறார். உங்களுடன் வந்து விடும் ஒரே முடிவில் இருக்கிறார். நீங்கள் அவருக்கு கொடுத்திருக்கும் வாக்கை நிறைவேற்றுவீர்கள், அவருடைய எதிரிகளிடமிருந்து அவரைப் காப்பாற்றுவீர்கள் என்று உறுதியாக நம்பினால் நீங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்கு மாறாக நீங்கள் அவரை இங்கிருந்து அழைத்துச் சென்ற பின் அவருக்கு உதவி செய்வதை விட்டு விடுவீர்கள், அவருடைய எதிரிகளிடத்தில் அவரை ஒப்படைத்து விடுவீர்கள் என்ற யோசனை இருந்தால் இப்போதே அவரை விட்டு விடுங்கள். ஏனெனில் தன்னுடைய ஊரில் தனது கூட்டத்தாரிடம் பாதுகாப்பாகவும் கண்ணியமாகவும் இருக்கிறார்.

கஅப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் அப்பாஸிடம் கூறினோம், நீங்கள் சொன்னதை நாங்கள் கேட்டுக் கொண்டோம். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் பேசுங்கள், உங்களைப் பற்றியும் உங்கள் இறைவனைப் பற்றியும் பேசுவதற்கு நீங்கள் விரும்பிய நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

அதன் பிறகு நபி (ஸல்) அவர்கள் தனது சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். பிறகு உறுதி மொழி (பையத்) நிறைவேறியது.

**உறுதி மொழியின் அம்சங்கள்**

இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்கள் ஜாபிர் (ரலி) அவர்களின் இது பற்றி விரிவான அறிவிப்பைக் கூறியுள்ளார்கள்.

ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் என்ன உறுதி மொழி தாங்களுக்குக் கொடுக்க வேண்டும்?

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

1-விருப்பிலும் வெறுப்பிலும் கூறுவதைக் கேட்டு வழிப்பட்டு நடக்க வேண்டும்.

2-இன்பத்திலும், துன்பத்திலும் அல்லாஹ்வில் பாதையில் செலவழிக்க வேண்டும்

3-நன்மையை எடுத்துரைத்தல், தீமையை தடுத்தல்.

4-அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் நிலைத்திருத்தல், பழிப்போரின் பழிச் சொல்லை பொருட்படுத்தக் கூடாது.

5-நான் உங்களிடம் வந்து விட்டால் எனக்கு உதவி செய்ய வேண்டும். உங்களையும், உங்கள் மனைவிகளையும், பிள்ளைகளையும் எவ்வாறு பாதுகாக்கிறீர்களோ அவ்வாறே எனக்கும் பாதுகாப்பளிக்க வேண்டும். உங்களுக்கு இவற்றுக்குப் பகரமாக சுவர்க்கம் கிடைக்கும்.

## முஸ்லீம்களுக்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதி

இரண்டாம் அகபா உறுதிமொழிக்குப் பின் சொந்த ஊரே அவர்களுக்கு நரகமாகி விடும் அளவிற்கு பலவகையான துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்து வந்தனர். எனவே மக்காவை விட்டுச் செல்ல முஸ்லீம்களுக்கு நபி (ஸல்) அவர்கள் அனுமதி கொடுத்தார்கள். அந்த முஸ்லீம்கள் தங்கள் நாட்டையும், உறவினர்களையும், தந்தை சகோதரர், மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து சொல்கின்றோமே என்று கவலை கொள்ள வில்லை. மாறாக முழுச் சுதந்திரத்துடன் இணையற்ற ஒரே இறைவனை வணங்கப் போகிறோம் என்பதை நினைத்து மகிழ்ந்தார்கள்.

## ஹிஜ்ரத்தின் இன்னல்கள்

தங்கள் ஊரை விட்டு செல்ல விரும்பிய முஹாஜிரின்கள் மக்காவில் குரைஷிகளின் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தார்கள்.
1.ஸுஹைப் அல் ரூமி அவர்கள் ஹிஜ்ரத் செய்ய ஆயத்தங்கள் செய்த போது குறைஷி வம்சத்தின் இறைமறுப்பாளர்கள் அவரிடம் வந்து கூறினார்கள்: நீ எங்களிடம் வரும் போது ஏழையாக, இழிவான நிலையில் வந்தாய். எங்களிடம் வந்த பின் உன் செல்வம் அதிகரித்து விட்டது. இங்கிருந்து செல்ல விரும்புகிறாய், இந்தப் பொருட்கள் அனைத்தையும் உன்னுடன் கொண்டு செல்ல விரும்புகிறாய். அது ஒருபோதும் நடக்காது. அவர்களிடம் ஸுஹைப் (ரலி), உங்களுக்கு என் செல்வத்தைக் கொடுத்து விட்டால் என்னைச் செல்ல விட்டுவிடுவீர்களா எனக் கேட்க, குரைஷிகள் சம்மதித்தார்கள். ஸுஹைப் (ரலி) அவர்கள் தனது அனைத்துச் செல்வத்தையும் அவர்களுக்கு கொடுத்து விட்டு யத்திரிப் (மதீனா) நோக்கி சென்று விட்டார்கள். இச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட நபி (ஸல்) ஸுஹைப் இலாபம் அடைந்து விட்டார் ஸுஹைப் இலாபம் அடைந்து விட்டார் எனக் கூறினார்கள்.

2.உம்மு ஸலமா (ரலி) கூறுகிறார்கள்: என் கணவர் அபூ ஸலமா ஹிஜ்ரத் செய்ய ஆயத்தமாகி என்னைத் தன் ஒட்டகத்தில் உட்கார வைத்துக் கொண்டார். என் மடியில் குழந்தை ஸலமா இருந்தது. நாங்கள் புறப்பட்ட பொழுது என் கோத்திரத்தார் பனு முகீரா கூட்டத்தினர் அபூ ஸலமாவிடம் நீர் வேண்டுமானால் செல்லலாம். கோத்திரத்தினரின் மகளை (உன் மனைவியை) கூட்டத்தில் எடுத்துச் செல்ல முடியாது. (என் கணவரின் கோத்திரத்தார்) அப்துல் அஸத் கூட்டத்தினரும் வந்து விட்டனர். அவர்கள் அபூ ஸலமாவிடம் நீர் வேண்டுமானால் செல்லலாம். ஆனால் குழந்தை நமது கோத்திரத்துக்குச் சொந்தமானது. எனவே நீங்கள் கொண்டு செல்ல முடியாது என்று கூறியதோடு ஒட்டகத்தின் கயிற்றை இழுத்து அதை உட்கார வைத்து விட்டார்கள். அப்துல் அஸத் கோத்திரத்தார் குழந்தையை அதன் தாய் மடியிலிருந்து பறித்துக் கொண்டனர். பனூ முகிரா கூட்டத்தினர் உம்மு ஸலமாவை தங்களுடன் அழைத்துக் கொண்டார்கள். ஹிஜ்ரத் செய்வதை கடமையென கருதிய அபூ ஸலமா (ரலி) அவர்கள் புறப்பட்டார்கள். உம்மு ஸலமா (ரலி) அவர்கள் தினமும் மாலை நேரத்தில் தன் கணவரையும், குழந்தையையும் பிரிந்த இடத்திற்கு வருவார்கள். பல மணி நேரங்கள் அழுது கொண்டே இருந்து விட்டு திரும்பச் செல்வார்கள். ஒரு வருடத்தை அதே நிலையில் கடத்தினார்கள். ஒரு நாள் அவரது சிறிய தந்தையாரின் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் அப்பக்கமாக சென்றபோது அவர்களின் பரிதாப நிலையைப் பார்த்து இரக்கம் கொண்டார். இரண்டு கோத்திரத்தாரிடமும் சென்று பரிந்து பேசினார். அதனால் அவருக்கு கணவரிடம் செல்ல அனுமதி அளிக்கப்பட்டது. அவரது குழந்தையும் மீட்கப்பட்டது. உடனே உம்மு ஸலமா (ரலி) அவர்கள் தனது ஒட்டகத்தில் மதீனா நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள். நபி (ஸல்) அவர்களின் அனைத்து தோழர்களுக்கும் இவ்வாறு நேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.
மக்காவில் ஒரு சிலரைத் தவிர யாரும் இருக்கவில்லை. பிரபலமான நபித்தோழர்களில் அபூ பக்கர் (ரலி), அலி (ரலி) இருவரைத் தவிர வேறு எவரும் அங்கிருக்கவில்லை. இதை நோக்கிய குரைஷிகள் முஹம்மதை கொலை செய்யும் சந்தர்ப்பம் நெருங்கி விட்டது என எண்ணினார்கள்.

# நபியவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொள்ளல்

ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள் :

நாங்கள் ஒரு நாள் அபூ பக்ர்(ரலி) அவர்களின் இல்லத்தில் உச்சிப் பொழுதில் அமர்ந்து கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் அபூ பக்ர் அவர்களிடம் "இறைத்தூதர்(ஸல்) அவர்கள், தம் தலையை மூடிய வண்ணம் - நம்மிடம் வருகைதராத நேரத்தில் (வழக்கத்திற்கு மாற்றமாக) இதோ வந்து கொண்டிருக்கிறார்கள்" என்று கூறினார். அதற்கு அபூ பக்ர் (ரலி), "என் தந்தையும் என் தாயும் நபி(ஸல்) அவர்களுக்கு அர்ப்பணமாகட்டும்! அல்லாஹ்வின் மீதாணையாக! ஏதோ (முக்கிய) விஷயம் தான் அவர்களை இந்த நேரத்தில் (இங்கு) வரச் செய்திருக்கிறது" என்று கூறினார்கள். அப்போது இறைத்தூதர் (ஸல்) அபூ பக்ர் அவர்களிடம், "உங்களிடம் இருப்பவர்களை வெளியே போகச் சொல்லுங்கள். (உங்களிடம் ஒரு ரகசியம் பேச வேண்டும்)" என்று கூறினார்கள். அதற்கு, அபூ பக்ர் அவர்கள் (இல்லத்திற்குள் இருக்கும்) இவர்கள் உங்களுடைய (துணைவியின்) குடும்பத்தினர் தாம். என் தந்தை தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! இறைத்தூதர் அவர்களே!" என்று கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள் "(ஹிஜ்ரத்) புறப்பட்டுச் செல்ல எனக்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது" என்று கூறினார்கள். அப்போது அபூ பக்ர் அவர்கள், "தங்களுடன் நானும் வர விரும்புகிறேன்! என் தந்தை தங்களுக்கு அர்ப்பணமாகட்டும் இறைத்தூதர் அவர்களே! என்று கேட்டார்கள். "சரி! (நீங்களும் வாருங்கள்)" என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். "இறைத்தூதர் அவர்களே! என் தந்தை தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். இந்த என்னுடைய இரண்டு வாகன (ஒட்டக)ங்களில் ஒன்றைத் தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள், "விலைக்கு தான் (இதை நான் எடுத்துக் கொள்வேன்)" என்று கூறினார்கள்:

ஆயிஷா(ரலி) கூறினார்: அவர்கள் இருவருக்காகவும் வேண்டிப் பயண ஏற்பாடுகளை வெகுவிரைவாக நாங்கள் செய்து முடித்தோம். ஒரு தோல்பையில் பயண உணவை நாங்கள் தயார் செய்து வைத்தோம். அப்போது அபூ பக்ரின் மகள் (என் சகோதரி) அஸ்மா தன்னுடைய இடுப்புக் கச்சிலிருந்து ஒரு துண்டை(க் கிழித்து) அதனை அந்தப் பையின் வாய் மீது வைத்துக் கட்டினார்கள். இதனால் தான் அவர்களுக்கு "தாதுன்னிதாகைன்" (இரு கச்சுடையாள்) என்று பெயர் வந்தது. பிறகு இறைத்தூதர்(ஸல்) அவர்களும் அபூ பக்ர்(ரலி) அவர்களும் (பயணம் புறப்பட்டு) "ஸவ்ர்" மலையில் உள்ள ஒரு குகைக்கு வந்து சேர்ந்து அதில் மூன்று நாட்கள் தங்கினார்கள். (அந்த மூன்று நாட்களில்) அவர்கள் இருவருடன் அப்துல்லாஹ் இப்னு அபீ பக்ரும் இரவில் வந்து தங்கியிருப்பார் - அவர் சமயோசித அறிவு படைத்த, புத்திக் கூர்மையுள்ள இளைஞராக இருந்தார். பின்னிரவு (ஸஹர்) நேரத்தில் அவர்கள் இருவரைவிட்டும் புறப்பட்டு மக்கா குறைஷிகளுடன் இரவு தங்கியிருந்தவர் போன்று அவர்களுடன் காலையில் இருப்பார். அவர்கள் இருவரைப் பற்றி (குறைஷிகளால் செய்யப்படும்) சூழ்ச்சிகளைக் கேட்டு, அவற்றை நினைவில் இருத்திக் கொண்டு இருள் சேரும் நேரத்தில் அவர்கள் இருவரிடமும் அச்செய்திகளைக் கொண்டு வந்து விடுவார்.

அவர்கள் இருவருக்காக அபூ பக்ர்(ரலி) அவர்களின் (முன்னாள்) அடிமை ஆமிர் இப்னு ∴புஹைரா (அபூ பக்ர் அவர்களின்) ஆட்டு மந்தையிலிருந்து ஒரு பால் தரும் ஆட்டை மேய்த்து வருவார். இரவின் சிறிது நேரம் கழிந்தவுடன் அதனை அவர்கள் இருவரிடமும் ஓட்டி வருவார். அந்தப் பாலிலேயே இருவரும் இரவைக் கழித்து விடுவார்கள் - அது புத்தம் புதிய, அடர்த்தி அகற்றப்பட்ட பாலாகும் - அந்த ஆட்டை ஆமிர் இப்னு ∴புஹைரா இரவின் இருட்டு இருக்கும் போதே விரட்டிச் செல்வார். இதை (அவர்கள் இருவரும் அந்தக் குகையில் தங்கியிருந்த) மூன்று இரவுகளில் ஒவ்வோர் இரவிலும் அவர் செய்து வந்தார். மேலும், இறைத்தூதர்(ஸல்) அவர்களும், அபூ பக்ர்(ரலி) அவர்களும் பனூ அப்து இப்னு அதீ குலத்தில் "பனா அத்தீல்" என்னும் கிளையைச் சேர்ந்த கை தேர்ந்த ஒருவரை பயண

வழி காட்டியாக இருக்கக் கூலிக்கு அமர்த்தினர். அவர் ஆஸ் பின் வாயில் அஸ்ஸஹ்மீ என்னும் குலத்தாருடன் நட்புறவு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். (ஆனாலும்) அவர் குறைஷிகளில் இறைமறுப்பாளர்களின் மதத்தில் இருந்தார். இறைத்தூதர்(ஸல்) அவர்களும், அபூ பக்ர்(ரலி) அவர்களும் அவரை நம்பி, தங்களின் இரண்டு வாகன (ஒட்டக)ங்களை ஒப்படைத்து மூன்று இரவுகளுக்குப் பின் “ஸவ்ர்” குகைக்கு வந்து விடுமாறு வாக்குறுதி வாங்கியிருந்தனர். மூன்றாம் (நாள்) அதிகாலையில் அந்த இருவாகனங்களுடன் (அவர் ஸவ்ர் குகைக்கு வந்து சேர்ந்தார்.) அவர்கள் இருவருடன் ஆமிர் இப்னு ∴புஹைராவும் பயண வழிகாட்டியும் சென்றனர். பயண வழிகாட்டி அவர்களைக் கடற்கரைப் பாதையில் அழைத்துச் சென்றார். (புஹாரி : 3905)

நபித்துவம் கிடைத்து 13ம் ஆண்டு ஸபர் மாதம் 24ம் நாள் திங்கட்கிழமை ஸவ்ர் குகையில் நுழைந்து 27ம் நாள் வியாழக்கிழமை அங்கிருந்து மதீனா நோக்கிப் புறப்பட்டனர்.

**ஸுராகத் பின் மாலிகின் சம்பவம் :**

ஸுராகா இப்னு (மாலிக் இப்னி) ஜு∴ஷும்(ரலி) அறிவிக்கிறார்கள் :

குறைஷிக்குலத்தின் தூதுவர்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களையும், அபூ பக்ர்(ரலி) அவர்களையும் கொலை செய்பவருக்கு, அல்லது (உயிருடன்) கைது செய்து வருபவருக்கு இருவரில் ஒவ்வொருவருக்கும் (நூறு ஒட்டகங்கள் என்று) பரிசை நிர்ணயம் செய்(து அறிவித்)தவர்களாக எங்களிடம் வந்தனர். அப்போது நான் எங்களின் பனூ முத்லிஜ் சமுதாயத்தின் அவைகளில் ஒன்றில் அமர்ந்திருந்தேன். அப்போது அவர்களில் ஒருவர் எழுந்து வந்து, அமர்ந்து கொண்டிருந்த எங்களிடையே நின்று கொண்டு, “ஸுராகாவே! சற்று முன் நான் கடலோரத்தில் சில உருவங்களைப் பார்த்தேன். அவர்கள் முஹம்மதும் அவரின் தோழர்களும் தாம் என்று கருதுகிறேன்” என்று கூறினார். அவர்கள் முஹம்மதும் தோழர்களும் தாம் என்று அறிந்து கொண்டேன். (இருப்பினும் அவரைத் திசை திருப்புவதற்காக) “அவர்கள் முஹம்மதும் அவர்களின் தோழர்களும் அல்லர். மாறாக, இன்னார் இன்னாரைத்தான் நீ பார்த்திருப்பாய். அவர்கள் எங்கள் கண்ணெதிரே தான் (தங்களின் காணாமல் போன ஒட்டகங்களைத் தேடிப்) போனார்கள்” என்று நான் அவரிடம் கூறினேன். பிறகு அந்த அவையிலேயே சிறிது நேரம் இருந்தேன். அதற்குப் பிறகு எழுந்து (என்னுடைய இல்லத்திற்குள்) நுழைந்து என் அடிமைப் பெண்ணிடம் என்னுடைய குதிரையை வெளியே கொண்டு வரும்படி உத்தரவிட்டேன் - அப்போது குதிரை ஒரு மலைக்குன்றுக்கு அப்பால் இருந்தது. - எனக்காக அதை அவள் (அங்கே) கட்டிவைத்திருந்தாள். பின்பு, நான் என்னுடைய ஈட்டியை எடுத்துக் கொண்டு வீட்டின் பின் புற வாசல் வழியாக வெளியேறினேன். (ஈட்டியை நான் தாழ்த்திப் பிடித்திருந்ததால்) அதன் கீழ் முனையால் (என்னையும் அறியாமலேயே) தரையில் கோடு கிழித்தேன். மேலும் அதன் மேல் நுனியை தாழ்த்திக் கொண்டு என் குதிரையிடம் வந்து அதன் மீது ஏறிக் கொண்டேன். அதன் முன்னங்கால் இரண்டையும் ஒரே நேரத்தில் உயர்த்தி ஒரே நேரத்தில் பூமியில் வைக்குமாறு செய்து மிக வேகமாகப் புறப்பட்டு அவர்களை நெருங்கினேன். அப்போது என்னுடைய குதிரை காலிடறி அதிலிருந்து நான் விழுந்து விட்டேன். உடனே நான் எழுந்து என்னுடைய கையை அம்புக்கூட்டை நோக்கி நீட்டி, அதிலிருந்து (சகுனச் சொற்கள் எழுதப்பட்ட) அம்புகளை எடுத்தேன். அவற்றின் மூலம் என்னால் அவர்களுக்கு பாதிப்பை உருவாக்க முடியுமா அல்லது முடியாதா என்று குறிபார்த்தேன். நான் விரும்பாத (வகையில், என்னால் அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்த முடியாது என்ப)தே வந்தது. என்னுடைய அம்புகளுக்கு மாறு செய்துவிட்டு என்னுடைய குதிரையில் ஏறினேன். அது பாய்ந்த வண்ணம் சென்றது. அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (திருக்குர்ஆன்) ஓதியதை கேட்டேன். அவர்கள் திரும்பிப் பார்க்கவில்லை. அபூ பக்ர் அவர்கள் அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். (அப்போது) என்னுடைய குதிரையின் முன்கால்கள் இரண்டும் முட்டுக்கால்கள் வரையிலும் பூமியில் புதைந்து கொண்டன. நான்

குதிரையிலிருந்து கீழே விழுந்து விட்டேன். பிறகு (அதை எழச் செய்வதற்காக) அதை நான் அரற்றினேன். அது எழுந்(திருக்க முயற்றித்)தது. (ஆனால்,) அதன் கால்களை அதனால் வெளியே எடுக்க முடியவில்லை. அது நேராக எழுந்து நின்றபோது இரண்டு முன்னங்கால்களின் அடிச் சுவட்டிலிருந்து புகை போன்று வானத்தில் பரவலாகப் புழுதி கிளம்பிற்று. உடனே நான் (என்னுடைய) அம்புகளைக் கொண்டு (சகுனக்) குறிபார்த்தேன். நான் விரும்பாததே வந்தது. உடனே, நான் எனக்கு (உயிர்) பாதுகாப்பு நல்கும்படி அவர்களை அழைத்தேன். உடனே, அவர்கள் நின்றுவிட்டனர். நான் என்னுடைய குதிரையிலேறி அவர்களிடம் வந்து சேர்ந்தேன். அவர்களைவிட்டும் (என்னுடைய குதிரை) தடுக்கப்பட்ட அந்த நிகழ்ச்சியை நான் கண்டபோது என்னுடைய மனதிற்குள் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் (மார்க்க) விஷயம் மேலோங்கும் என்று தோன்றியது. நான் அல்லாஹ்வின் தூதரிடம், "உங்களுடைய (குறைஷி) சமுதாயத்தினர் உங்களுக்காகப் பரிசை நிர்ணயித்துள்ளனர்" என்று கூறிவிட்டு அந்த (குறைஷி) மக்கள் முஸ்லிம்களைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்ற தகவல்களை அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். மேலும், என்னுடைய பயண உணவுப் பொருள்களை எடுத்துக் காட்டினேன். அவர்கள் என்னிடமிருந்து ஒன்றையும் (எடுத்து) எனக்கு குறைவு செய்யவுமில்லை. மேலும், (என்னிடமிருந்த எதையும்) அவர்கள் இருவரும் என்னிடம் கேட்கவுமில்லை. ஆயினும், நபி(ஸல்) அவர்கள் (என்னிடம்), "எங்களைப் பற்றி(ய செய்தியை) மறைத்து விடு" என்று கூறினார்கள். உடனே, நான் நபி(ஸல்) அவர்களிடம் எனக்கு ஒரு பாதுகாப்புப் பத்திரம் எழுதித்தரும்படி வேண்டினேன். அப்போது, நபி(ஸல்) அவர்கள் ஆமிர் இப்னு ஃபுஹைராவுக்கு உத்தரவிட அவர் பாடமிடப்பட்ட தோல் துண்டில் (பாதுகாப்புப் பத்திரத்தின் வாசகத்தை) எழுதினார். பிறகு இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (சகாக்களுடன் மதீனா நோக்கிச்) சென்றார்கள். (புஹாரி : 3906)

## மதீனாவிற்கு நபி (ஸல்) அவர்கள் சென்றடைதல்

நபித்துவம் கிடைத்து 13ம் ஆண்டு ரபீயுல் அவ்வல் மாதம் திங்கட்கிழமை நபி (ஸல்) அவர்கள் குபாவைச் சென்றடைந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு வெளியாகி விட்டார்கள் என்ற செய்தி மதீனாவாசிகளுக்கு கிடைத்ததும் ஒவ்வொரு நாளும் காலைப் பொழுதிலிருந்து லுஹர் நேரம் வரை காத்திருந்தார்கள். நபியவர்கள் மதீனா வந்து சேர்ந்த நாளன்றும் அவ்வாறே எதிர்பார்த்துவிட்டு மீண்டும் வீடுகளுக்கு திரும்பிச் செல்ல முனைந்த போது நபி (ஸல்) அவர்கள் வந்து சேர்ந்து விட்டார்கள். நபி (ஸல்) அவர்களைப் பார்த்த அனேகமானவர்கள் சந்தோஷத்தினால் கண்குளிர்ச்சியடைந்தனர். மேலும் அபூ பக்கர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு தன் போர்வையால் நிழல் கொடுக்கும் வரை நபி (ஸல்) யார் என்று அறியாதவர்களாக இருந்தார்கள்.

அந்த சிறந்த பூமியில் வியாழன் தங்கியிருந்தார்கள். அங்கு தங்கியிருந்த மூன்று நாட்களில் நபி (ஸல்) அவர்கள் முதல் பணியாக இறைவன் ஒருவனை வணங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பள்ளிவாசலை அதாவது மஸ்ஜித் குபாவைக் கட்டினார்கள். ஹிஜ்ரத் மேற்கொண்டு முதலாம் ஆண்டு ரபீயுல் மாதம் 12 வது நாள் குபாவிலிருந்து மதினாவுக்குச் நபி (ஸல்) அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அன்றிலிருந்து மதீனதுன் நபி என்று அழைக்கப்பட்டது. பின்பு அல் மதீனா என்று சுருக்கமாக இன்று வரை அழைக்கப்படுகிறது.

அந்த முஹாஜிரீன்களுக்கு விருந்து வைக்க அனைவரும் ஆசைப்பட்டார்கள். சீட்டுப் போட்டு யாருடைய பெயர் சீட்டு மூலம் வருகிறதோ அவரே அவர்களை தன் வீட்டுக்கு அழைத்துப் போய் தங்க வைப்பதுடன் அன்று முழுவதும் விருந்து வைத்து கவனிப்பதாக முடிவு செய்தார்கள். இரவு பகலாக அவருக்கு உதவிகளை அவரே செய்வதாகவும் முடிவு செய்தார்கள். அவர்கள் சொத்துக்களில் இருந்து பாதியைக் கொடுப்பதுடன் அவரை மார்க்கத்தில் ஒரு சகோதரனாக மாற்றிய அல்லாஹ்வுக்கு நன்றியும் செலுத்தினார்கள்.

## இறைவனுக்கே எல்லாப் புகழும்!